20

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 6 | செந்தமிழ் மாதசஞ்சிகை | இதழ் 10

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 ரஜப் மீ, 1935 ஹு அக்டோபர் மீ

1. திருகுர்ஆன் ... 361
2. நாயக வாக்கியம் ... 362
3. மிஃறாஜுந் நபீ ... 363
4. இஸ்லாமே பிரசாரத்திற்குரிய மதம் ... 364
5. காதியானீ மிர்ஸா குலாம் அஹ்மத் மஸீஹ் என்பது உண்மையா? ... 371
6. மிர்ஸாஜீ தமது தாவாவில் உண்மையுடையவரா? ... 374
7. பேராசையுள்ளவன் பெருந்தீங்கனே? ... 376
8. சிருஷ்டியின் சில வரலாறுகள் ... 379
9. ஹஸ்ரத் அம்மாரிப்னு யாஸிர் (ரலி.) ... 383
10. சுகாதாரம்—க்ஷயரோகம் ... 386
11. ஓர் இனிய கதை ... 389
12. பர்தா ஸ்திரீகளின் ஆபரணம் ... 392
13. உத்தமர்களின் உன்னத வாழ்க்கை ... 395
14. உலக சம்பவ நிகழ்ச்சிகள் ... 398

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்திபாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G T., மதராஸ்.

THE REGISTRAR OF BOOKS
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 ரஜப் மீ 1935 ஹு அக்டோபர் மீ	இதழ் 10

திரு குர்ஆன்

நாம் நமது அடியார் (முஹம்மது ஸல்) மீது இறக்கிவைத்ததின் (திருகுர்ஆனின்) பேரில் (இந்த வேதம் அல்லாஹ் தஆலாவால் இறக்கிவைக்கப்பட்டதென்பதில்) சந்தேகங் கொள்வீர்களேல் இதைப்போலொற்ற ஒரு அத்தியாயத்தை (நீங்கள்) கொண்டு வாருங்கள்! இன்னும் அல்லாஹ்வைத் தவிர (உங்களுக்கு உதவியாளராக) யாரையும் அழைத்துக்கொள்ளுங்கள்! இது (விஷயமும்) செய்ய முடியாதுபோனால் ஒருக்காலும் (அவ்வாறு) செய்யமாட்டீர்கள். (அல்குர்ஆன்.)

எவர்கள் திருகுர்ஆன் ஷரீப் அல்லாஹ்வின் வேதமென்பதில் சந்தேகங்கொள்ளுகின்றார்களோ அன்னோர் திருகுர்ஆனிலுள்ள ஓர் சிறிய அத்தியாயம்போலொற்றதைக்கூட கொண்டுவர முடியாதிருப்பது திருகுர்ஆன் ஷரீபின் அபார சக்தியாகுமென மேலே கூறப்பட்டுள்ள ஆயத்தின் கடைசி பாகம் அறிக்கை செய்துகொண்டிருக்கிறது. நமது நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் தாங்கள் நபியாக இருக்குமென்பதற்காகவும், குர்ஆன்ஷரீப் அல்லாஹ்வின் திருவேதமாக இருக்கிறதென்பதை ஸ்திரப்படுத்துவதற்காகவும் அநேக திருஷ்டாந்தங்கள் விபரித்துக் காண்பிக்கப்பட்டதில், எழுதப்படிக்கத் தெரியாத ஒருவர் அறபிகளிலுள்ள நாவன்மை புலமைத்தனமுடையவர்களை நோக்கி "உங்களால் இதுபோலொற்ற ஒரு சிறு அத்தியாயத்தைக்கூட கொண்டுவர முடியாது" என்று கூறியது மிக மிகப் பெரிய முன்னறிக்கையாய்த் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

இரண்டாவது, அல்லாஹ்தஆலா திருகுர்ஆனை இறக்கி அதனைக் காப்பாற்றிவைத்திருப்பதாய்க் கூறுகின்றான்.

அதாவது, அதில் கம்மி ஜாஸ்தி கூடுதல் குறைவுசெய்ய முடியாதென்பது அதன் கருத்தாகும். இதனை குர்ஆன் ஷரீபின் அபார சக்தி வாய்ந்த முஅஜிஜாவென்றே கூறவேண்டும். ஒரே காலத்தில் திருகுர்ஆனை மனனஞ் செய்தவர்களில் பல்லாயிரக் கணக்கானோரை

நாம் பார்ப்பதே அதன் அபார மகிமையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. (அல்லாஹ் காப்பாற்றவேண்டும்) இதுகாலை ஏடுகளில் எழுதப்பட்டிருக்கும் குர்ஆன் முழுதும் காணமற் போய்விடுமாயினும் திருகுர்ஆன் உலகத்தைவிட்டு எடுபட்டுப் போய்விடமாட்டாது. எனவே எவ்வகையிலும் குர்ஆன்ஷரீபின் ஒரு அக்ஷரங்கூட அசைக்கப்படாது காப்பாற்றப்படுவது அதன் அற்புதமேயாகும்.

இதன் உண்மையை இஸ்லாத்தின் பரம விரோதிகளுங்கூட மனமார ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக, ஸர் வில்லியம் முயூர் தாம் இயற்றியுள்ள "லைப் ஆப் முஹம்மது" என்ற கிரந்தத்தில், "நமக்குத் தெரிந்தவரை, 12 நூற்றாண்டாய் எவ்வித மாற்றம் திருத்தம் முதலியவைகளில்லாது கார்மானமாக்கப்பட்ட வேதம் குர்ஆன் ஷரீபைப் போன்று வேறு கிடையாது" என வரைந்திருக்கிறார். ஆகவே இவ்வாறு எதிரிகளும் போற்றிப் புகழும் திருகுர்ஆன் ஷரீபினது அபார சக்தியின் மகிமையை என்னென்று கூறுவது!

நாயக வாக்கியம்

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமின்மீது நான்கு கடமைகளேற்பட்டிருக்கின்றன. சலாமுக்கு மறுமொழி கூறல், வியாதிஸ்தனை விசாரித்தல், ஜனஸாவுடன் செல்லல், விருந்தை ஒப்புக்கொள்ளுதல் ஆகிய நான்குமாகும் என நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஆனால் இக்காலை தஅவத்தை ஒப்புக்கொள்ளுவது, சலாம் சொல்லுவது இவைகள் சகஜமாக நடைபெற்றுவந்த போதிலும் வியாதிஸ்தர்களை விசாரிப்பது ஜனஸாவுடன் செல்வது ஆகியவைகள் அவசியமற்றவைகளெனக் கருதப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆகவே நம் முஸ்லிம்கள் இவ்வாறான காரியங்களில் ஈடுபட றஹ்மான் கிருபைபுரிவானாக.

ஒருநாளன்று நமது சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் திருச்சபைக்கு 'பனூஸுலைம்' கூட்டத்தாரின் தலைவரொருவர் விஜயஞ்செய்து, அல்லாஹ் உடைய ரஸூலே! மனிதன் தன் குடும்பத்தாருக்கு ஊழியம் செய்வதுகொண்டு பாக்கியத்தைப்பெற்றுக்கொள்ளுகிறானா வென வினவினர். அதற்கு உத்தமத் தூதர் (ஸல்.) அவர்கள், நீர் ஒருகாசை அல்லாஹ்வின் பாதையில் சேலவிட்டீர், மற்றொரு காசை ஏழைகளுக்கு அளித்தீர், வேறொரு காசை உன் குடும்பத்தாருக்குச் சேலவிட்டீர், இவைகளில் உன் வீட்டுடையவர்களுக்குச் சேலவிட்ட காசினால்தான் அதிக பாக்கியம், நன்மையடைவீர்! என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக ஹஸ்ரத் உப்பாதிப்னு ஸாமித் (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

எவர்கள் குடும்ப சம்மந்தமாய் தங்கள்மீது ஏற்பட்டுள்ள கடமையை நிறைவேற்றாமலும் தங்கள் வருவாயை அனியாயமான பாதையில் செலவுசெய்துகொண்டு மிருக்கிறார்களோ அன்னோர் மேலே கூறப்பட்டுள்ள ஹதீதைக்கொண்டு தக்க உணர்ச்சிபெறுவார்களாக. இதற்காகத்தான் ஹஸ்ரத் இமாம் காஜாஹஸன் பஸரீ (ரஹ்.) அவர்கள், "மானிடன் தன்வீட்டு நிருவாகத்தை நடத்திவருவதில் ஒரு அரசனைப்போல் பொறுப்பாளியாக இருப்பதால் அவன்மீது பலவாறான கடமைகள் ஏற்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஏழைகள்பால் அபரிமிதமான அன்புகொண்டிருந்தார்களாதலின் சதாவும் அவர்களுக்கு ஊழியஞ் செய்பவர்களாகவும் அவர்களது மனம் திருப்தியடைவதற்காக அவர்களில்லம் செல்பவர்களாகவு மிருந்தார்கள். இந்நிலைமையில் ஒருநாளன்று அவ்வேழைகளைப் பரிபாலனஞ் செய்யும் விஷயமாய் சொற்பெருக்காற்றுங்காலை, ஏழைகள் விஷயமாய் முயற்சிப்பவன் பகல்முழுதும் நோன்பு நோற்று இரவு முழுதும் விழித்து வணக்கம் செய்பவனைப்போலிருக்கிறான் என அறிவித்ததாக ஹஸ்ரத் ஜைதிப்னு அர்கம் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.



மிஃறாஜுந்நபீ

சத்தியத் தூதர் உத்தமசீலர் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நபிப்பட்டம் பெற்ற பன்னிரெண்டாம் ஆண்டில் மகத்துவம் பொருந்திய ஓர் விசேஷித்த தனிச்சிறப்பினையைக் கொண்டு கௌரவிக்கப்பட்டார்கள். அதாவது ஏகத்துவம் பொருந்திய அல்லாஹ் ஜல்லஷானுஹுவ தஆலாவின் திருச்சந்திப்பை அடைந்தார்கள். மகாமேன்மைபொருந்திய சந்திப்பேற்பட்ட திருநாள், அல்லாஹ்தஆலா தனது ஹபீபை தன் திருச்சமுகத்துக்கு அழைத்தநாள், தங்கள் வரவை முன்னிட்டு வானுலகு சிங்காரிக்கப்பட்ட நாள், வானவர்தங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நாள் ஏன் மகத்துவம் பொருந்தியதாக இருக்கமுடியாது?

சத்தியத்தூதர் நபிகள் பெருமானார் (ஸல்)அவர்களுக்கு நடைபெற்ற மிஃறாஜ் விழிப்புடைய நிலைமையில் ஸ்தூலசரீரத்துடன்தான் நடைபெற்றிருக்கின்றன வென்பது குர்ஆன் ஹதீதுஷரீபுகளைக் கொண்டு நன்கு தெரிந்து கொள்ளுகிறோம். என்றாலும் சில குதர்க்க வாதிகள் அவை ஆத்மார்த்தமானதென்றும் கனவென்றும் கூறுவது தகமையுடையதாக மாட்டா. அவர்கள் கூற்றுப்படி மிஃறாஜ் ஷரீப் ஆத்மார்த்தமானதெனக் கருதுவோமாகில் அதனைத்தனிச் சிறப்பினை யுடையதாகக் கூறுவதற்கு அதில் என்னவிசேஷம் அமைந்திருக்கிறது? எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு, அல்லாஹ் (ஜல்.) இடத்தில் அளவற்ற நற்கியாதி ஏற்பட்டிருக்கும் நிலைமையில் ஆத்மார்த்த சந்திப்பு உண்டாவது கொண்டு யாது பிரயோஜனம் ஏற்படப் போகிறதென்பதுதான் நமக்குப் புலனாகவில்லை.

தவிர திரு குர்ஆன் இச்சம்பவத்தை ஆச்சரியத்துடன் "ஸுப்ஹானல்லதீ" என்று பிரபல்யமாக அறிவிப்பதும், பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது நெஞ்சைப் பிளந்து கழுவியதும், புராக் என்னும் வாகனத்தின் மீதுஆரோகணித்துச் சென்றதும், பைத்துல் முகத்தஸ் பள்ளியில் தொழுகை நடத்தியதும், வானுலக யாத்திரை சென்றதும், அங்கு பலமலக்குகள் நபிமார்களுடன் சந்தித்துப் பேசியதும், அதிகாலையில் இச்சம்பவநிகழ்ச்சிகளை மானிடர்களிடங் கூறியபோது குறைஷிகளிற் சிலர் சிரித்துக் கை கொட்டி பரிகாசஞ்செய்ததும், இதனால் முஸ்லிம்களிற் சிலர் முர்தத்துகளாய் விட்டதும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இச்சம்பவத்தைச் செவியுற்றவுடன் இதனை உண்மையாக்கிவைத்து "ஸித்தீக்" என்னும் பட்டம் பெற்றுக் கொண்டதும் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது மிஃறாஜ் ஸ்தூல சரீரத்துடன் விழித்திருக்கும் சமயத்தில் தான் நடைபெற்றதென தெற்றென அறிவிக்கின்றன.

ஆகவே, மிஃறாஜ் நிகழ்ச்சி விஷயமாய் குர் ஆன் ஹதீதுகளின் பகிரங்க கூற்றுக்கு மாற்றமாய் தங்கள் "ஸைன்ஸ்" ஆராய்ச்சியை அதில் செலுத்தி வீண் விதண்டா தர்க்கவாதங்கள் செய்வதும்,

தலீல்களிலிருந்து என்ன கருத்துகள் விளங்குகிறதோ அதனையாதொருகாரணமுமின்றி மாற்றிக்கூறுவதும் தகாத காரியமென்றே கருதுவோம். எனவே, மிஃறாஜ் ஷரீப் ஸ்தூல சரீரத்துடன் விழித்திருக்கும் நிலைமையில்தான் நடைபெற்றதென்பது திண்ணம். இதற்கு மாற்றமாய் எழுதியும் பிரசாரம் புரிந்தும் வருவோர் அசத்தியவாதிகளென்பது வெளிப்படை.

இஸ்லாமே பிரசாரத்திற்குரிய மதம்

(தென்காசி ஆலீஜனுப் மீ. இ. மு. அபுல் ஹஸன்ஷாதலி ஸாஹிப் வரைவது.)

தற்கால இப்பூவுலகின்கண் எத்திசைநோக்கினும் சகல மதத்தினரும் தத்தம் மதங்களை இதர மதத்தினர் பால் எடுத்துரைத்து தங்கள் மதத்தின் பக்கல் அழைக்கின்றனர். இன்னும் ஒவ்வொருவரும் தத்தம் மதமே பூர்வீகமானதென்றும் உண்மையானதென்றும் உலக மதமென்றும் இதர மதங்கள் தவறானவையென்றும் தங்கள் மதத்தை எல்லோரும் அவசியம் பின்பற்றவேண்டுமென்றும் இன்றேல் வழிதவறியவர்களென்றும் மோக்ஷத்தை யடையமுடியாதென்றும் பிரசங்கங்கள் வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும் சதாவும் பிரசாரம் புரிந்து வருகின்றனர். ஆனால், யான் இச்சிறிய வியாசத்தில் எம்மதத்தின் சட்டங்கள் இதர மதத்தினரை தங்கள் பால் அழைக்கவும், அதைப்பற்றி பிரசாரம் புரியவும் கட்டளையிட்டிருக்கின்றதென்பதைப்பற்றி வரைகின்றேனாதலின் வாசகநேயர்கள் நன்கு கவனத்துடன் வாசிக்கும்படி வேண்டுகின்றனன்.

கிறிஸ்தவ மதம்

தற்காலம் மூலைமுடுக்குகளிலெல்லாம் அதிதீவிரமாக பிரசாரம் நடைபெறும் கிறிஸ்தவ மதத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இம்மதத்தைப் பிரசாரஞ்செய்த இயேசு நாதர் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் இவ்வுலகிற்றோன்றியது இஸ்ரவேல் என்ற ஓர் குறிப்பிட்ட சமுகத்தாரை மட்டும் நல்வழிச்சுக் கொண்டுவருவதற்கே யாகும். ஏனெனில், இயேசுநாதரவர்களே இவ்விஷயமாக பின்வருமாறு கூறியிருக்கின்றார்கள். அதாவது:— "அதற்கு இயேசு, காணமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பட்டேனேயன்றி மற்றப்படியல்லவென்றார்." [மத்தேயு. அத். 15, வா.24] பைபிளின் இந்த வாக்கியத்தால் இயேசுநாதரவர்கள் கடவுளின் ஓர் தூதரேயென்றும், இஸ்ரவேல் சமுகத்தார்களுக்கு மாத்திரம் தூதராய் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள் என்றும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் இதற்கடுத்தாப் போலுள்ள வாக்கியத்தை நோட்டமிடுவோமாயின், யான் கூறிய விஷயங்கள் முற்றிலும் சரியென்பதை விளங்கிக் கொள்ளலாம். அதாவது, தங்களுடைய உபதேசங்களை அப்பங்கள் போலவும் இஸ்ரவேல் அல்லாத மக்களை நாய் குட்டிகள் போலவும் கூறி "பிள்ளைகளின் அப்பத்தை நாய் குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றார்" என்றும் இயேசுநாதரே கூறியிருப்பதாக (மத். அத்.15, வா. 25) காணப்படுகிறது. ஆதலின் கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரம் புரிந்த இயேசுநாதரவர்கள் இஸ்ரவேல் சமுகத்தார்கட்கு மட்டும் தூதராக வந்தார்களென்றும் இதர சமுகத்தார்கட்கு போதகராக வரவில்லையென்றும் மேற்கூறப்பட்ட மேற்கோள்களால் களங்கமற தெரிந்து கொள்கிறோம்.

மேலும், பைபிளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இயேசுநாதர் இதர சமுகத்தினருக்கு போதித்ததாக எவ்வித ஆதாரமும் கிடைப்பதற்கில்லை. இன்னும், இதரமக்களிடம் பிரசாரம் புரியக்கூடாதென தங்கள் சீஷர்களுக்கு கண்டிப்பான உத்திரவையும் பிறப்பித்திருக்கின்றார்கள். அதாவது:— "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னதாவது: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணமற்

போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப்போங்கள்'' (மத். அத். 10, வா. 56) என்பதே. இவ்வாக்கியங்களினால் இஸ்ரவேல் சமுகத்தார் அல்லாதாரிடம் பிரசாரம் புரியக் கூடாதென்று தங்கள் சீஷர்களிடமும் கூறியதாக நன்கு தெளிவாக அறிந்துகொள்கிறோம். மேலும், இவ்வாக்கியத்தில் பொதுவாக புறஜாதியாரென்றும், குறிப்பாக "சமாரியார்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது. சமாரியார் யார் என்பதை சிறிது ஆராய்வோம். ஹஸ்ரத் யஅகூப்(அலை.) அவர்களுக்கு "இஸ்ராயீல்" என்று மற்றொருபெயருண்டு. ஆதலின், இவர்களின் மக்களுக்கு (பனிஇஸ்ராயீல்) இஸ்ரவேலின் சந்ததிகள் என்று கூறப்படும். சமாரியார் என்பவர்களும் இஸ்ரவேலின் சந்ததிகளே. இவர்கள் பாபம் செய்ததினிமித்தம் இஸ்ரவேலர்களில் நின்றும் இவர்களை நீக்கப்பட்டது. இஸ்ரவேலர்களிலுள்ள இவர்களிடமும் சென்று பிரசாரம் புரியக்கூடாதென இயேசுநாதரவர்கள் கட்டளையிட்டிருக்கும்போது பிற ஜனங்களை அழைக்க எவ்விதம் அனுமதிப்பார்கள். ஆகவே, மேல்வரையப்பட்ட விஷயங்களினால் கிறிஸ்தவமதம் இதர ஜனங்களை தம்மதத்தளவில் அழைக்க அனுமதி கொடுக்காததென்றும் பிரசாரத்திற்குறிய மதமல்லவென்றும் குன்றின் மேலிட்ட தீபம்போல் தெரிந்துகொள்கிறோம்.

மேலும் கிறிஸ்தவர்கள் கொள்கைப்பிரசாரம் இயேசுநாதரவர்கள் சிலுவையிலறையப்பட்டு மூன்று நாளைக்குப் பின் உயிர்த்தெழுந்து (நஊதுபில்லாஹி மின்தாலிக்) பிறஜாதியார்களிடம் தனது போதனைகளைப் பிரசாரம் புரியும்படி தங்களது சிஷ்யர்களுக்குக் கட்டளையிட்டதாக கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கூறுகின்றார்கள். முன் தங்களது ஜீவிய காலத்தில் சொல் செயல்களால் காட்டிய விஷயங்களுக்கு மாற்றமாக தாங்கள் உயிர்த்தெழுந்த பின்னர் கூறினார்களென்று கூறுவது பெரிதும் ஆச்சரியப்படத் தக்கதோர் விஷயமாகும். இனி மேற்படி விஷயத்தில் கிறிஸ்தவ சுவிசேஷங்களிலேனும் ஒற்றுமையுண்டாவெனப் பார்க்கின் பலதிரப்பட்ட எத்தனையோ பேதங்கள் காணப்படுகின்றன. மத்தேயு. அ. 28, வா. 19-20-ல் ஒருவிதமாகவும், யோவான் அ. 20, வா. 2, 3-ல் ஒருவிதமாகவும், மாற்கு அத். 16, வா. 15, 16-ல் ஒருவிதமாகவும், லூக்கா அ. 24-வா-47-ல் ஒருவிதமாகவும் காணப்படுகின்றது. ஆகவே, ஒருவன் இந்நான்கு சுவிசேஷங்களையும் பரிசீலனை செய்வானாயின், இயேசுவின் போதனை, அவரது அபிப்பிராயம், அவர் ஜீவித்திருந்த காலம் வரை செய்துவந்த அனுஷ்டானங்களை மேற்கூறிய சீஷர்களால் மாற்றமுடியுமா? இவ்விஷயத்தில் இவர்களுக்குள் ஒற்றுமையில்லாதிருக்கும் நிலைமையில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இதையோர் ஆதாரமாகக்கொண்டு வருவது தான் பெரும் விந்தையினும் விந்தையாயிருக்கின்றது. மேலும், கிறிஸ்தவர்களின் கொள்கைப் பிரகாரம் இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்டு மூன்று நாளைக்குப்பின் அவரை "கலிலேயா" மலையில் அவருடைய சீஷர்கள் கண்டு மேற்கூறிய விஷயங்களைக் கேட்டதாகவும் சீஷர்களில் சிலர் அவரைக்கண்டு பணிந்ததாகவும் மற்றும் சிலரோ சந்தேகப்பட்டதாகவும் (மத். அ. 28, வா. 16-17) காணப்படுகிறது. இயேசுநாதரவர்களின் முக்கிய சீஷர்களாயிருந்த பதினொருவரில் சிலர் மலையில் கண்டது இயேசுநாதர் அல்லவென்றும் சிலர் அவர்தாமென்றும் அபிப்பிராய பேதகப்பட்டிருக்கும்போது, இங்கு கூறிய வாக்கியத்தைக் கொண்டு, அவர்கள் ஜீவித்திருக்கும்போது கூறிய கட்டளைகளையும் அனுஷ்டித்து வந்த வழக்கத்தையும் மாற்ற முயற்சிப்பது எத்துணை விபரீதமென்பதைக் கூறவும் வேண்டுமோ? எந்தவிதமாக கிறிஸ்தவ மதநூற்களை ஆராய்ந்து பார்த்தபோதிலும் இறுதியாக கிறிஸ்தவ மதம் உலக யதமல்ல, பிரசாரத்திற்குறிய மதமல்லவென்றமுடிவுக்கேவரவேண்டியதிருக்கின்றது.

விஷயங்கள் இங்ஙனமிருக்க, நமது கிறிஸ்தவ சகோதரர்கள் தாங்களே இஸ்ரவேலரல்லாதார்களாயிருந்துகொண்டும் தங்களுக்கே கிறிஸ்தவ மதத்திலிருக்க அனுமதியில்லாதிருந்துகொண்டும் பிறமதஸ்தர்களை அம்மதத்தின்பால் அழைப்பது மகா தோஷமல்லவா? இவ்வாறு இவர்கள் செய்வதினால் கர்த்தருடைய கோபாக்கினைக்கும் இயேசுநாதருடைய மனவருத்தத்திற்கும் ஆளாகின்றார்களல்லவா? ஆகலான், நமது கிறிஸ்தவ சகோதரர்கள் உலக மதம் யாது? பிரசாரத்திற்குரிய மதம் யாது? என்பதை ஆராய்ந்து சத்தியத்தின் பக்கல் சார்வார்களாக.

ஹிந்து ஆரிய மதம்

கிறிஸ்தவ மதத்தில் பிரசாரத்திற்கு அனுமதியில்லாதிருந்தும் அவர்கள் செய்யும் பிர

சாரத்தினுலும், ஆசை மொழிகளாலும் ஹிந்துக்களிலுள்ள பலர்களும் இதில் சேர்வதைப் பார்த்து சகிக்கொணுமல் ஆத்திரங்கொண்ட நமது ஆரிய ஹிந்துக்களும் தங்கள் மதத்தைப் பிரசாரஞ்செய்து பிறமதத்தினர்களை தங்கள் மதத்தளவில் அழைத்துக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் மதங்களை இதரர்களிடம் பிரசாரஞ்செய்ய உரிமையுடையவர்களே. ஆனுல், இங்கு ஜனங்களுடைய உரிமைகளைப்பற்றி விபரிக்கவில்லை. நாமெடுத்துக்கொண்ட விஷயமாவது, பிரசாரஞ் செய்ய எம்மத நூற்கள் அனுமதிக்கின்றது என்ற விஷயத்தை ஆராய்வதேயாகும். ஆரிய ஹிந்துக்களின் சுத்தி இயக்கம் ஆரம்பமானது முதற்கொண்டு எந்த ஆரிய மதப் பிரசாரகர்களாலும் தங்கள் வேத நூற்களிலிருந்தேனும், சாஸ்திரங்களிலிருந்தேனும் மனுமஹ ராஜருடைய "மனுஸ்மிர்தியில்" போதிக்கப்பட்டிருக்கும் வர்ணங்களைப்பற்றிய போதனைக்கு மாற்றமாக யாதொன்றும் காட்டமுடியவில்லை. மேலும், மனுஸ்மிர்தியிலும் யஜுர் அதர்வண வேதங்களிலும் மனிதர்களை நான்கு வர்ணங்களாய்ப் பிரித்து ஒவ்வொரு வர்க்கத்தார்களுக்கும் தனித்தனித் தொழில்களை ஏற்படுத்தி அவர்களில் பிராமணனைத் தவிர மற்றவர்களை வேதங்களை விட்டும் தடுத்து வைத்ததிலிருந்து ஹிந்து மதம் இதரர்களிடம் போதிக்கக்கூடிய மதமல்லவென்பதைத் தெற்றென விளக்குகிறது.

அன்றியும் இதர மதஸ்தர்களை அழைப்பதொரு பக்கலிருக்க, தங்களுடைய மதத்திலுள்ளவர்களுக்கே மததர்ம விஷயங்களைப் போதிப்பது கூடாதென்றும், தாழ்ந்த வகுப்பினர் மீறி வேத வாக்கியங்களைக் கேட்டால் அவர்களுக்கு பல கொடிய தண்டனைகளை விதிக்கவேண்டுமென்றும் மனுதர்ம சாஸ்திரம் கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்நூலில் கூறப்பட்டவை யடங்கலும் ஹிந்துமத வேதங்களிலுள்ளதுதான். ஏனெனில்; இதுவிஷயமாக மனுதர்ம சாஸ்திரத்தில் பின்வருமாறு வரையப்பட்டிருக்கின்றது. அதாவது :—"அந்தப் பிரம்மா வானவர் இந்த சாஸ்திரத்தை உண்டு பண்ணி விதிப்படி எனக்கு முன்னம் ஓதுவித்தார், யானும் மரீச்சி முதலிய ரிஷிகளுக்கு ஓதுவித்தேன்" மநு. அத். 1 வா. 58) என்றும், "மநுப் பிரசா பதியினல் எந்த வருணத்தாருக்கு எந்தத் தருமம் விதிக்கப்பட்டதோ அது முழுதும் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் எல்லா வேதத்தின் பொருளையும் நன்ருக வறிந்தவரல்லவா?" மநு. அத். 2 வா. 7) என்றும் காணப்படுகின்றது.

மேலும் இந்த சாஸ்திரம் ஹிந்துக்களிடத்திலும் ஆரியர்களிடத்திலும் வெகு மதிப்புப்பெற்றதும் பொன்னே போன்று போற்றத்தக்கதுமாகும். ஆதலின் இந்நூலில் பிரசாரத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளதை மாதிரிக்காக ஈண்டு வரைகின்றேன். அதாவது :—"எந்தப் பிராமணன், சூத்திரனுக்கு நேராக தருமத்தையும், விரதத்தையும் உபதேசிக்கிருனே, அவனந்தச் சூத்திரனேடுகூட அம்சவிருதமென்னும் இருளில் (அதாவது நரகில்) மூழ்கின்ருன்" (மநு. அத். 4 வா. 81) என்றும் சூத்திரனுக்கு இம்மைக்குபயோகமான அர்த்த சாஸ்திரத்தை சொல்லிவைக்கலாகாது, தருமம் விரதம் முதலியவைகளை அவனுக்கு உபதேசிக்கப்படாது" (மநுஅ-4-வா-80) என்றும் காணப்படுகிறது. ஹிந்து மத வேத விதிப்படி தங்களுடைய மதத்திலுள்ளவர்களுக்கே பிரசாரம் புரிவது கொடிய பாபமென்று காணப்படும்போது இதர மதத்தினரை தங்கள் மதத்தளவில் அழைப்பதெங்ஙனம் பொருந்தும்? தங்கள் ஹிந்து மதம் தோன்றி பலகோடி வருஷங்களாகிவிட்டதென ஹிந்துக்கள் கூறுகிருர்கள். ஆனுல், இத்தனை கோடி வருஷங்களாகியும் இம்மதம் வேறெவரிடமும் போதிக்கப்பட்டதாக யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. மேலும், தற்காலம் இவர்களின் பிரசாரம் அதிமும்பரமாக நடத்தாட்டப்பட்டு வருகின்றதெனினும் இவர்கள் மதத்தில் சேர்ந்த ஒருவனுடன் கேவலம் சமபந்தி போஜனமும் கலப்பு விவாகமுங்கூட இல்லையானுல் இம்மதப் பிரசாரத்தின் கதி எவ்வாறிருக்குமென யான் கூறவும் வேண்டுமோ? மேலும்,

"நமது ஹிந்து சகோதரர்களிடத்தில் சூத்திரன் யாரென்ருல், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் இவர்களல்லாத மற்றவர்கள் யாராயிருப்பினும் எம்மதஸ்தராக யிருப்பினும் அவர்களே சூத்திரர் என்பது ஹிந்து மதத்தின் சித்தாந்தம்" என்று ஹிந்து சாஸ்திரி ஒருவரால் வரையப்பட்ட "ஞான சூரியன்" என்ற நூலில் வரையப்பட்டிருக்கின்றது. ஆனுல், இவர்கள் இவ்வாறு பிரசாரம் புரிவதற்குக் காரணம் யாதென ஆராய்ந்து பார்க்கின்

"மற்ற மதஸ்தர்கள் பிரசாரம் புரிவதும் நாம் மாத்திரம் சும்மாயிருப்பதுமா?" என்ற ஒரு கொள்கைக்குத் தானொழிய வேறொன்றுக்குமல்ல வென்பது நன்கு ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஆதலான், ஹிந்து மதமும் பிரசாரத்திற்குரிய மதமாக இருக்கவில்லை யென்ற முவுவுக்கே வந்துவிட்டோம்.

இஸ்லாம்

மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இம்மார்க்கத்திலுண்டாவென்பதை சிறிது ஆராய்வோம்: அதாவது பிரசாரத்தைப்பற்றிய மதச் சட்டங்கள், அதை ஸ்தாபித்தவர்களின் அனுஷ்டானங்கள் ஆகியவைகளே.

இம்மார்க்கத்தை சம்பூரணமாக இவ்வுலகிற் கொணர்ந்த உலக விருட்சகர் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் இவ்வுலகிற்றோன்றியதே உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் இறைவனின் தூதுவை எத்திவைப்பதற்கே யொழிய வேறன்று. மேலும், இம்மார்க்கம் உலக மக்கள் யாவர்கட்கும் எத்தேச மக்கட்கும் எக்காலத்தவர்கட்கும் ஏற்றதாக அமைந்திருப்பதுடன் அதைப் பிரசாரம் புரியும்படி கூறிய மஹான் முஹம்மதுநபி (ஸல்) அவர்கட்கும் அவர்களைத் துயர்ந்த யாவர்கட்கும் இம்மதத்தின் திருவேதமாகிய 'குர்ஆன் ஷரீப், கட்டளையிட்டுக் கொண்டிருக்கிறது. பிரசாரத்தைப் பற்றிய ஏவல்களை முதலில் திருமறையினின்றும் எடுத்துக்காட்டிய பிறகு நாயகமவர்களின் அமுத மொழிகளையும் அனுஷ்டானங்களையும் அவர்களைத் துயர்ந்த மஹான்கள் பிரசாரம் புரிந்தவைகளையும் வரைகின்றேன். "உமது இனத்தார்களில் உமக்கு மிகமுடுகியவர்களை எச்சரிப்பீராக!" (குர்ஆன். 26-214). சீர்திருத்தம் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டுமென்பது ஆன்றோர்களின் பழமொழி. எனவே மேற்குறிப்பிட்ட வேதவசனத்தில் இனத்தார்களில் முடுகியவர்களிடையில் பிரசாரம் புரிய எம்பிரான்(ஸல்.) அவர்களை ஏவப்பட்டது. பின் "மக்கத்தார்களையும் அதன் சுற்றுப்புறங்களிலிருப்பவர்களையும் நீர் எச்சரிப்பீராக" (குர்ஆன்). பந்துக்களுக்குப் பிறகு அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்கு போதிக்கவேண்டியதிருக்கிறது. ஆதலின், மேற்குறிப்பிட்ட திருமறை வசனங்களில் பக்கத்திலுள்ளவர்களுக்கும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ளவர்களுக்கும் போதிக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றது, "கூறும்! மானிடர்களே! உறுதியாக நான் நுங்களனைவர்கட்கும் அல்லாஹ்வின் தூதுவனாயிருக்கின்றேன். (குர்ஆன்) மேற்குறிப்பிட்ட வாக்கியத்தில் உலக ஜனங்கள் யாவர்கட்கும் நாயகமவர்கள் அல்லாஹ்வின் தூதுவராய் இருப்பதாகவும் இதை பகிரங்கப்படுத்தும்படியும் ஏவப்பட்டிருக்கின்றது.

மேலும் கீழ்வரையப்படும் வாக்கியங்களையும் சற்று கவனிப்பீர்களாக. "நபியே நிச்சயமாக நாம் நும்மை சாட்சிபகர்பவராகவும், நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ்வின் மார்க்கத்தளவில் அவனின் அனுமதியைக் கொண்டு அழைப்பவராகவும், இலங்கச்செய்யும்படியான தீபமாகவும் அனுப்பினேம்" (குர்ஆன்). "மனிதர்கள் அடங்கலுக்கும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயல்லாது யாம் உம்மை அனுப்பவில்லை. ஆனல் மனிதர்களில் மிகுதம் பேர் இதை உணர்வதில்லை" (குர்ஆன்). இதுபோன்ற எண்ணிறந்த வாக்கியங்கள்" நந்திருமறையில் காணக்கிடக்கின்றது. இவ்விறையின் வாக்கியங்களின்படியே நாயகமவர்கள் பிரசாரம் புரிந்தார்கள். இவ்வாறு பிரசாரம் புரிவதில் எண்ணத்தொலையாத இடுக்கண்களும் கஷ்டநஷ்டங்களும் நாயகமவர்களுக்கு சம்பவித்தன. இவைகளடங்கலையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு பிரசாரத்திலேயே சதாவும் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். இறுதியாக இவர்களின் இத்தொண்டு சகலவிதத்திலும் சம்பூரணமடைந்தது. எவ்வாறு நாயகம் (ஸல்.) அவர்கள் பிரசாரம் புரிந்தார்களோ அவ்வாறே ஏனையோரையும் இப்புனிதத் தொண்டில் பங்கெடுத்துக்கொள்ளும்படி இறைவன் திருமறையில் கட்டளையிட்டிருக்கின்றான். அதாவது:—"நேர்வழி யளவில் (ஜனங்களை இஸ்லாத்தளவில்) அழைத்து நலவானதை ஏவி தீயதை விலக்கும்படியான ஓர் கூட்டம் உங்களில் அவசியம் இருத்தல் வேண்டும். மேலும், அவர்களே ஜெயசீலர்கள், (குர்ஆன்). மேற்குறிப்பிட்ட வாக்கியத்தால் இஸ்லாமியப் பிரசாரம் புரியும் ஒரு சாரார் அவசியம் என்பதாகத் தெற்றெனத் தெரிந்துகொள்ளலாம்.

மேலும் நாயகமவர்களின் ஜீவிய காலத்தில் நாயகமவர்களே பற்பல ஜாதியார்கட்கும் பற்பல தேசத்தினர்கட்கும் இஸ்லாத்தை தழுவும்படி நிருபங்கள் எழுதியுள்ளார்கள். இன்னும்

பற்பல ஸஹாப்பாக்களை பல அன்னிய நாட்டிற்கு இஸ்லாமிய பிரசாரகராக அனுப்பியிருக்கின்றார்கள். இவைகளை நாயக சரிதையில் காணலாம். மேலும், நாயகமவர்கள், பிரசாரம் புரிந்து இஸ்லாத்தி லழைப்பதையும் அதினுண்டாகும் நன்மைகளையும் கூறிப்போந்தார்கள். நாயகமவர்களின் காலத்திற்குப் பின் ஸஹாப்பாக்ளின் காலத்திலும் இஸ்லாமியப் பிரசாரம் நடந்துவந்திருக்கிறது. அக்கால முதல் இக்காலம்வரையிலும் இதைப்பின்பற்றுவோரால் பிரசாரம் நடந்தேவந்திருக்கிறது. இனியும் அவ்வாறே நடைபெறும்.

சகோதரர்களே! யான் மேற்காட்டிய ஒவ்வொரு விஷயங்களையும் கவனித்தால் இஸ்லாமே உலகமதமாக யிருப்பதுடன் பிரசாரத்திற்குறிய மதமென்பதையும் குன்றின்மேலிட்ட தீபம்போல் தெற்றெனத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்காட்டிய ஆதாரங்களால் உலகமதமும் பிரசாரத்திற்குரிய மதமும் "இஸ்லாம்" தானென தெற்றென விளங்கியபின் தற்காலம் எவ்விதமான பிரசாரம் தேவை? இதர மதத்தினர் எவ்வித முறையில் பிரசாரம் செய்கின்றனர், நாம் என்னிலையிலிருக்கின்றோம்? என்பதைப்பற்றி சிறிது ஆராய்வோம். தற்காலம் நஞ்சமுகம் சகலவிதத்திலும் மிகமிகப்பிற்போக்கடைந்திருக்கின்றதென்பது யாவருமறிந்ததே. வியாபாரம், கைத்தொழில், கல்வி, பொருளாதாரம், முதலிய முக்கியப் பிரச்சினைகளை நன்காராய்ந்தால் இரத்தக் கண்ணீர்தான் வடிக்க வேண்டும்.

இஸ்லாத்தின் இறுதித் தூதரும், சகல சற்குணங்களும் யொருங்கே யமைந்த பூமானும், உலகவிருட்சகருமான நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் இவ்விதத் துறைகளில் நமக்கு எவ்விதம் வழிகாட்டிச் சென்றார்களென்பதை நஞ்சமுகத்தினர் அறவே மறந்து பொருள்களை வீண் விரையம் செய்வதிலும் அவசியமற்ற காரியங்களில் நுழைந்து பொருள்களை விரயஞ் செய்வதையும் வீணே காலத்தை கழிப்பதையும் தங்களின் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

பிரசாரத்திற்கு அணுவத்துணையும் அனுமதியில்லா கிறிஸ்தவ மதத்தினர்கள் தங்களது மதப் பிரசாரத்தை எவ்வாறு நடத்திச் செல்கின்றார்களென்பதை ஈண்டு சிறிது வரைகின்றேன். அதாவது: பல முக்கிய நகர்களில் உயர்தர ஆங்கில கலாசாலைகளை அமைத்து அதின் மூலமாகவும், ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி அதின் மூலமாகவும், தங்களது மதக்கிரந்தங்களை அச்சிட்டு சொற்ப விலைக்கும் சில சமயம் இனமாக கொடுப்பதின் மூலமாகவும், பட்டணங்கள் முதல் குக்கிராமங்கள்வரை பாதிரிகள் சென்று வாரமொருமுறை அல்லது மாத மிருமுறை பொதுவிடங்களில் பிரசாரம் புரிவதின் மூலமாகவும், பலதொழிற்சாலைகளை ஏற்படுத்தி இதன் மூலம் பொதுஜனங்களை தங்களது கொள்கையில்சிக்கவைத்து பல ஆசைமொழிகளைக் கூறி அவர்களைத் தங்கள் மதத்தளவில் இழுப்பதின் மூலமாகவும் தங்களது காரியங்களில் ஓரளவு வெற்றிபெறுகின்றனர். இத்துடன் நின்றுவிடாது நம்முடைய தூக்கத்தையும் நமக்குள் ஒற்றுமையின்மையையும் கவனித்து, நமது பரிசுத்த இஸ்லாத்தின்மீதும் அதனை சம்பூரணமாக உலகிற்கீந்த உலகவிருட்சகர் (ஸல்.) அவர்களையும், இஸ்லாமியப் பெரியார்களையும் இஸ்லாமிய அரசர்களையும் நியாயமற்ற முறையில் தாக்கவும் அவர்கள்மீது பொது ஜனங்களை வெறுப்புக் கொள்ளும்படி செய்யவும் பற்பல நூற்களிலும் பத்திரிகைகளிலும் வியாசங்கள் வரைவதின் மூலமாகவும் தங்களது பிரசாரத்தை நடாத்திச் செல்லுகின்றனர். இவ்விதம் துவேஷமாக வரையப்பட்ட நூற்கள் பல அரசாங்கத்தாரால் பரிமுதல் செய்யப்பட்டு விட்டது. இன்னும், சென்னை கிறிஸ்தவ சங்கத்தாரால்எழுதப்பட்ட "அரேபியாவும் அதன் நபியும், என்ற நூலும் ஒன்றாகும். இந்நூலில் நாயகத்தையும் இஸ்லாத்தையும் பல தவறான முறையில் திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. இதுமட்டுமா சினிமா படங்களில் கூட தங்களது மதத்தைப் பிரசாரம் செய்வதுடன் சமயம் பார்த்து இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் பரிகசிக்கும் தோரணையில் பல சரித்திரங்கள் கட்டப்படுகின்றன. முஸ்லிம்கள் வசிக்கும் பல நகர்களில் பாதிரிகள் சென்று கிறிஸ்தவபெண் பாடசாலை ஏற்படுத்தி இதின் மூலம் நமது முஸ்லிம் மாணவிகளின் ஹிருதயங்களில் தங்களது கொள்கைகளைப் பதியச்செய்து விடுகின்றனர். இவ்விதம் அச்சிறுமிகளின் ஹிருதயத்தில் அவர்களின் கொள்கை பதிந்தபின் நமது போதனைகளை எவ்விதம் போதித்தாலும் அதில் அவர்களுக்கு பூரண நம்பிக்கை ஏற்படுவதற்கில்லை. அறிஞர்கள் இதை, அவர்களின் பாடசாலைகளில் தான்

கல்வி நன்ருக போதிக்கப்படுகிறது; அங்கு படித்தபின் நாம் நன்ருகத்திருத்திக் கொள்ளலாம், எனக் கூறிவிடுகின்றனர். என்னே இவர்களின் அறிவு!

இறுதியாக எவ்விதத்திலும் இஸ்லாத்தைத் தொலைத்து விடவேண்டுமென்று ஒரே கட்டுப்பாட்டுடன் இதர மதத்தினர்கள் இவ்விதமான சூட்சிகளை செய்து வருகின்றனர். இவற்றினையெல்லாம் நமது முஸ்லிம்கள் கண்கூடாகக் கண்டும் கனவு காண்பதேபோல் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். நமது சமுகத்தில் எத்தனையோ சங்கங்களிருந்தும் இவ் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தாது காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றது. இவ்வாருய நிலைமையினை யுணர்ந்த ஒரு சிலர் தாங்கள் தாம் எதிரிகளின் வினக்கட்கு விடையிறுத்து அவர்களின் கொட்டத்தை அடக்குவதாகவும், தாங்கள் தாம் இஸ்லாத்தின் கொள்கைகளை உள்ளா உள்ளபடி போதிக்கும் உண்மை முஸ்லிம்களென்றும் நடித்துக்கொண்டுமார்க்கத்தில் இல்லாத நூதன விஷயங்களை-தங்களின் அறிவுஎதை ஏற்றுகொள்கிறதோ அதை-நுளையவைத்து நாங்கள் கூறுவதுதான் உண்மையான கொள்கையெனக் கூறித் திரிகின்றனர். இவ்வித நூதன பிரசாரத்திற்காக பத்திரிகைகளையும் புத்தகங்கள் எழுதுவதையும் தங்களது முக்கியத் தொழிலாகக் கொண்டலைகின்றனர். இன்னவர்களின் தவருன கொள்கைகளை மார்க்க அறிஞர்களான உலமாக்கள் எடுத்துக் கூறப்புகின் அவர்கள் அன்னுர்பால் சீறி விழுந்து அவர்களை வசைமொழிகளால் வர்ணிக்கத்தொடங்கி, மூடமுல்லாக்களென்றும் இவர்களால்தான் முஸ்லிம்கள் கெட்டுப்போனுர்களென்றும் இவர்களைத் தொலைத்த அன்றைக்கே நஞ்சமுகம் முன்னேற்றத்திற்கு வருமென்றும் கூறி தங்களின் தொப்பையை நிறப்ப பலவித தந்திரோபாயங்களை கையாளுகின்றனர். இதர மதத்தினரின் இடர் போதாதென்று இந்நயவஞ்சகக் குழாத்தினரின் இடருமா ஏற்படவேண்டும். அந்தோ! அந்தோ!

மேலும் நமது சமுகத்தில் ஆங்கிலம் மட்டும் கற்ற ஒரு சிலர் இஸ்லாத்தின் உயரிய நாகரீகத்தை விட்டு விட்டு ஐரோப்பிய நாகரீகத்தைப் பின்பற்றுவதுடனில்லாது இஸ்லாமிய நாகரீகம் அக்காலத்திற்குச் சரி, இக்காலத்திற்கு அது சரியன்று எனக்கூறிக் கொண்டிருக்கின்றனர். இவ்விதமானவர்களைப் பார்த்துத்தான் "ஹிந்து இந்தியா, கிறிஸ்தவ இந்தியா," என்ற நூலின் ஆசிரியர் மேற்கண்ட புத்தகத்தின் முன்னுரையில் "ஐரோப்பிய சாஸ்திர வித்தைகளையும், கல்வி நூற்களையும் அநுசரித்து வரும் இந்தியர், ஐரோப்பியமதத்தையும் அநுசரிப்பதுகொண்டு உண்டாகும்மாறுதல் நல்லமாறுதலாயிராதோ" என வரைகின்ருர். இவ்வாசிரியர் ஐரோப்பாவுக்கு நாகரீகத்தை ஆதியில் எது புகட்டியது என்பதை மறந்து அல்லது மறைத்து இவ்வாறு வரைகின்ருர். யாம் இக்கட்டுரையில் இதைப் பற்றி எழுதவில்லையாதலால் இதனை விடுத்து எடுத்த விஷயத்தை ஆராய்வோம். அந்தோ, இவ்விதக் கேவல நிலைமைக்குக்குமா நஞ்சமுகத்தினர் வந்து விடவேண்டும். பரிதாபம்!

நாம் நமது இஸ்லாமிய நாகரிகத்தையும், நந்திருமறையின் போதனைகளையும் கைநழுவ விட்டதினுல் நாம் இவ்வாருய நிலைமைக்கு வந்து விட்டோம். இன்னும் சொற்பகாலம் இவ்விதமே நாம் மௌனமுற்று இருந்து விடும்பட்சம் நமது சந்ததியினர்களின் நிலைமை என்னவாகுமோ என்பதை அல்லாஹ்வே அறிவான். நமது சமுக மக்களிடம் மறுவுலக சம்பந்தமான நினைவுகள்கூட கிஞ்சிற்றுமில்லை. என்னே நமது நிலை!

இஸ்லாமிய தலைவர்களே! அறிஞர்களே! ஹிஸ்புல்லாக்களென்னும் சத்திய சன்மார்க்க போதகர்களே! இன்றே இதற்குறிய வழியைக் கண்டுபிடித்து ஆவனசெய்ய முன்வருவீர்களாக. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிக்கிணங்க இன்றே கிளம்புங்கள்! நன்றே யுழையுங்கள்!! இன்றேல் நமது நிலைமை பரிதாபம்.

அறிவிற் சிறந்த அன்பர்களே!

இவ்வுலகில் எந்த சமுகமோ, தேசமோ முன்னேற்றமடைய வேண்டுமாயின் அதற்குப் பிரசாரம் அவசியமென்பது மறுக்கமுடியா உண்மையாகும். ஆதலின், நஞ்சமுகம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஆங்காங்கு அடிக்கடி பிரசாரம் நடைபெறுதல் வேண்டும். இவ்விதப் பிரசாரம் பொது சபைகளின் மூலமாக நடைபெறுமாயின் அளவற்ற பிரயோஜனத்தைக் கொடுக்குமென்பது திண்ணம். இதற்காக வேண்டி ஆங்காங்கு பிரசார சபைகளை ஏற்படுத்தவேண்டும். அதின்மூலம் பல பிரசாரகர்களை தயார்செய்து பல பொது இடங்களிலும் குக்கிராமங்களிலும் பிரசாரம் செய்

வித்தல்வேண்டும். தற்காலம் நமது முஸ்லிம்களுக்கு மூன்று விதமான பிரசாரம் மிகவும் வேண்டற் பாலனவாகும். அதாவது:—(1) நமது முஸ்லிம்கள் இடையே அன்னிய மதத்தினர்களோடு பழகிவந்ததின் காரணமாக நுழைந்துகிடக்கும் நூதன துற்பழக்க வழக்கங்களையொழித்து நமது இஸ்லாமிய நல்லொழுக்க ஆசாரங்களை போதிக்கவேண்டும். (2) இஸ்லாமிய பக்தர்களெனவும் சுன்னத்து வல்ஜமாஅத்து பக்கா முஸ்லிம்களெனவும் பறைசாற்றிக்கொண்டு நமது இஸ்லாமிய மக்களை காதியானி-அஹ்மதிய மதத்திலாக்க சதாவும் பல வகையிலும் முயர்ச்சித்து வரும் கபடர்களின் வலையில் சிக்காது பொதுமக்களை காப்பாற்றுதல் வேண்டும். (3) பொதுவாக இஸ்லாமிய மக்கட்கும் குறிப்பாக இதர மத சமயத்தவர்கட்கும் இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்களையும், நோக்கங்களையும் எடுத்தியம்பி, அவர்கட்கிருக்கும் சந்தேகங்களை நிவர்த்திசெய்து அவர்களை இஸ்லாத்திலழைத்தல்வேண்டும். ஆகவே, இம்மூவகையான பிரசாரகர்கள் நமது நாட்டிற்கு அவசியம் வேண்டற்படுகிறது. ஆதலின், இஸ்லாமிய அறிஞர்கள் ஒவ்வொருவரும் இவ்விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்தி சத்திய பிரசாரத்தி லீடுபடுவார்களாக.

முஸ்லிம் சகோதரர்காள்!

நமது, இஸ்லாம் மார்க்கம் இயற்கை மதமும், சம்பூரண மதமும், பிரசாரத்திற்குறிய மதமுமாயிருக்க நாம் எவ்விதப் பிரசாரமும் செய்யாமல் வீணே வாளாயிருக்கின்றோம். தங்களுடைய மார்க்கத்தை இதரர்களிடம் பிரசாரம் புரியக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு செய்யப்பட்டிருந்தும் அன்னிய மதஸ்தர்கள் எங்கும் பிரசாரம்செய்துகொண்டு முன்னேற்றமடைகின்றனர். ஆனல், நமக்கு பிரசாரம் புரியும்படி கண்டிப்பான உத்திரவிடப்பட்டிருந்தும் நாம் அவைகளை சிறிதும் பொருட்படுத்தாமல் நம்முடைய சொந்த விஷயங்களிலே சதா மூழ்கியிருக்கின்றோம். என்னே நமது அறியாமை!

சோதரப் பெரியார்காள்!

ஈண்டொரு விஷயத்தைக் கவனிக்கும்படி கோறுகின்றேன். அதாவது, தற்காலம் நமது மக்களிடையே உண்மையான அறிஞர்கள் யாரென்றால் பத்திரிகைகட்கு வியாசம் வரைபவர்களும், இனிய தமிழ் நடையில் பிரசங்க மாற்றுபவர்களுமேயாகும். ஆகவே இவர்களை தற்கால உலகில் அறிஞர்களெனக் கொண்டாடப்படுபவர்கள். ஆதலின், இவ்விதத்தன்மையான வாயளவில் இஸ்லாமிய பிரசாரம் இருக்காது தங்களின் மனமொழி மெய்களால் அனுஷ்டித்துக் காட்டக்கூடிய உண்மைப் பிரசாரகர்களே நமக்கு அவசியம் வேண்டும். முற்காலத்திய இஸ்லாமியப் பிரசாரகர்கள் தங்களது அனுஷ்டான பூர்வமாய் இஸ்லாமியப் பிரசாரம் புரிந்ததனல் அன்னிய மதஸ்தர்கள் தாங்களாகவே பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவினர்களென சரித்திரம் சாட்சியங் கூறுகிறது. நாமோ இவைகளுக்கு மாற்றமாய் அனுஷ்டானத்தை அறவேவிடுத்து வாயளவில் பிரசங்கம் புரிந்துகொண்டிருக்கின்றோம். இதனல்தான் நமது பிரசாரம் பயன்படாமற் போகின்றது. ஆகவே, இவைகளை யுணர்ந்து சத்தியப்பிரசாரத்தை அநுஷ்டான பூர்வமாக காட்ட அறிஞர்களே முன்வருவீர்களாக.

ஆருயிர் அன்பர்களே!

இவ்விதப் பிரசாரம் தனிப்பட்ட ஹோதாவில் நடைபெற்றால் அதற்கு அவ்வளவு பலமிருக்காது. ஆதலின், இவ்விதப் பிரசாரம் பொது சபைகளின் மூலமாக நடைபெறுமாயின் அதற்கு பலமும் ஊக்கமும் ஏற்படும். மேலும், அளவற்ற பலாபலன்களு மேற்படும். ஆதலின் இதற்காக நமது மாகாணத்தில் ஓர் பொதுச் சபை இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் இதற்குக் கிளை சபைகள் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு ஜில்லாப் பிரசார சபைகளில் நின்றும் ஒவ்வொரு தாலூகாக்களிலும் மேற்படி சபைகளை ஏற்படுத்தி பொது இடங்களிலும் ஒவ்வொரு குக்கிராமங்களிலும் அடிக்கடி பிரசாரம் செய்தல்வேண்டும். இவ்வாறு நாம் முயர்ச்சித்தால் நமது சமுகம் சகல விதத்திலும் முன்னேற்றமடைந்து சகல சமயங்களை விடவும் மேன்மை யுறுமென்பது திண்ணம். ஆகவே, இவ்வுயரிய நோக்கத்தை சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் ஏற்றுக்கொள்ளும்படி சென்ற நபிகள் நாயகம் உலகவிருட்சகர் முஹம்மதுமுஸ்தபா (ஸல்.) அவர்களின் பிறந்ததின விழாவின்போது, தஞ்சை ஜில்லா அத்திக்கடை "ஹிதாயத்துல்அனும்" ராத்திப்சங்கத்தினர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. இஃதேபோல் மேற்படி ஜில்லா மாயவரம் தாலூகா வடகரையில் நடந்த மீலாதுந்நபீ மஹாநாட்டிலும் மேற்

கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. ஆகலான், இவ்வேண்டுகோளை மேற்படி சங்கம் ஏற்றுக்கொள்ளும்படி மீண்டும் வற்புறுத்துகின்றேன்.

இஸ்லாமிய அறிஞர்களே, சமூக முன்னேற்றத்தைக் கோரி நிற்கும் சமூகத்தலைவர்களே, இஸ்லாமிய வாலிப சிங்கங்களே,

நுங்களது கவனத்தை இதன் பக்கல் சிறிது திருப்புங்கள். இவ்விதப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நுங்களது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்திற்கு ஊக்கமளித்து எங்கும் அதற்கு கிளைச்சபைகளை ஏற்படுத்துவீர்களாக. இச்சங்கத்திலிருந்து வெளியாகும் மாதசஞ்சிகையை வாரப்பதிப்பாக திகழச்செய்வீர்களாக. இஸ்லாமிய சமாஜத் தலைவர்களே, அங்கத்தினர்களே! நுங்களது சங்கத்தின் முக்கிய திட்டங்களில் இவ்விஷயத்தையும் ஓர் திட்டமாகக்கொண்டு சேவை செய்வீர்களாக. முற்காலங்களில் நமது முஸ்லிம்களிடமிருந்து இதர சமயத்தவர்கள் பல வழிகளையும் முறைகளையும் கிரகித்துக் கொண்டிருந்தனர். ஆனால், தற்காலத்திலோ நமது முஸ்லிம்கள் அவர்களிடமிருந்து பலவழிகளை கிரகித்துக்கொள்ள வேண்டியதிருக்கின்றது. இவ்வித தாழ்ந்த நிலைமைக்கு வந்த பின்பும் நாம் மீண்டும் தூக்கத்திலேயே யிருந்துகொண்டிருந்தால் நமது பிற்கால வாழ்வென்ன வாகுமென்பதை சிந்தையிலிறுத்திக்கொண்டு மேற்கண்ட விஷயங்களையும் நன்கு சிந்தித்து அதற்கு ஆவன வேலையி லீடுபடுவீர்களாக. இன்றே எழுங்கள்! நன்றே யுழையுங்கள்!! இதனால் இகபர நற்சாதனங்களைப் பெற்றுய்யுங்கள்!!!

சத்திய இஸ்லாத்தினை தாரணியில் உயர்த்துவான்
எழுமின் முஸ்லிம்காள் எழுமின் எழுமின்
உழைமின் உழைமின் ஓயாது உழைமின்
பெருமின் உயர்நிலை பெருமின் பெருமினே.

காதியானீ மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவர் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் என்பது உண்மையா?

தென்காசி ஆலீ ஜனுப் மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் எழுதுவது:—

வாக்குச் சொல்லப்பெற்ற ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் இம்மண்ணுலகுக்கு வருவார்கள் என்னும் செய்தியை இஸ்லாம் தெரிவித்ததுடன் அவர்கள் யார், அவர்களின் அடையாளங்களென்ன வென்னும் விஷயங்களையும் தெற்றென விளக்கிவிட்டது. அதாவது, அவர்கள் மர்யம் (அலை.) அவர்களின் குமாரர், சிலுவையிலறையப்படாமல் வானுலகுக்கு உயர்த்தப்பட்டவர், குறிப்பிட்ட பிற்காலத்தில் விண்ணுலகிலிருந்து திமிஷ்க் தேசத்திலிறங்கி மஹ்தீ (அலை.) அவர்கள் பின் நின்று தொழுகையை நிறைவேற்றிவிட்டு தஜ்ஜாலைச் சிரச்சேதம் செய்வார்கள், பின்னர் தங்களுக்குரிய இதர கடமைகளை ஆற்றியபின் விவாகம்புரிந்து மக்கட்பேரடைந்து 45-வருடங்கள் ஜீவித்திருந்து ஹஜ்ஜு செய்து அப்பால் மரணமெய்தி மதீனஷரீபில் எம்பெருமானவர்களின் சமீபத்தில் அடங்கப்பெறுவார்கள் என்பனவாம். இவ்வடையாளங்களில் ஒன்றேனும் காதியான் மிர்ஸாஜீயிடம் காணப்படாததால் இஸ்லாம் மார்க்கப்பிரகாரம் அவர் வாக்குச் சொல்லப் பெற்ற மஸீஹ் (அலை.) அல்லவென்பது பிரத்தியக்ஷம்.

எம்பெருமான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் இம்முன்னறிக்கையைத் தெரிந்து கொண்ட முற்காலத்திய அசடர்களிற் பலர் நாங்களே வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹென்றும் மஹ்தீயென்றும் நபியென்றும் பற்பலவாறாக குயுக்திவாதங்கள் செய்து அதற்குத் தக்கவாறு திருமறை வசனங்களையும் திருநபி ஹதீதுகளையும் வலிந்து பொருள்கொள்ளத் தொடங்கினர். அக்காலத்தில் அறிஞர்களும் மத பக்தி நிறைந்துள்ளவர்களும் ஏராளமாக விருந்ததால் அந்த அதர்மர்களின் குயுக்தி வாதங்கள் ஓங்கி வளராமல் சிதறிப்போய்விட்டன.

தற்காலம் முஸ்லிம்களில் மதக் கல்வியும் மதாபிமானமும் குன்றியதன் காரணமாக பற்

பல நவீனக்கூட்டங்கள் தோன்றியதில் காதியானீ மதஸ்தர்களும் ஒன்றாம். இன்னோரும் முற்காலத்திய சுயநலமிகளைப்போன்று தங்கள் குருவான மிர்ஸாஜீயை வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹென்றும் மஹ்தீயென்றும் நம்பி வருவதுடன் அவரை அப்படியே நம்பவேண்டுமென்றும் அப்படி அவரை நம்பாதவர்கள் மோக்ஷலோகத்துக்கு அருகதையற்றவர்களும் காபிர்களென்றும் கூறி முஸ்லிம்களிடம் பிரசாரஞ் செய்து வருவது கண்கூடு. இவ்வாறான மூட நம்பிக்கையில் முஹம்மதலி ஸாஹிபும் காஜா ஸாஹிப் போன்ற ஆங்கிலம் கற்றவர்களும் சிக்குண்டிருந்தால் ஏனைய சாமான்யர்களின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ.

எனவே, இவ்வாறான நம்பிக்கையைஇஸ்லாம் நிராகரித்துவிட்டதுபோல் காதியானீ மதகுருவான மிர்ஸாஜீயின் வாக்குறுதிகளும் அவர் வாக்குச்சொல்லப்பெற்ற மஸீஹ் என்பதை நிராகரித்துவிட்டது. ஆனால் முஸ்லிம்களிற் சிலர் இஸ்லாத்தின் கொள்கைகளைச் சரிவரத் தெரிந்துகொள்ளாது அன்னாருக்குப் பதில்கூற வழியின்றி திகைத்து திண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் காதியானியர்களுக்குத் தக்க பதலளிக்கவும், காதியானிமார்கள் தாங்கள் தங்கள் மதக்குருவின் வாக்குறுதிகளை நன்குணரவும், அந்த மிர்ஸாஜீயின் உறுதிமொழிகளைக் கொண்டே அவர் வாக்குச்சொல்லப்பெற்ற மஸீஹ் (அலை.) அல்லவென்பதையும் மூன்று விதமாக எண்பிக்க முன்வருகிறோம். வாசகர்கள் சற்று ஊன்றி கவனிக்கவேண்டும்.

ஒன்றாவது

(1) மிர்ஸாஜீ கூறுகிறார்: ஹதீதுகளின் சில வெளிரங்கமான வார்த்தைகள் உண்மைப்படும்படியான அப்படிப்பட்ட ஒரு மஸீஹூம் ஒரு காலத்தில் வருவது கூடும். மேலும் முற்றிலும் கூடுமானதே. ஏனெனில் இந்த ஏழை உலக அதிகாரத்தோடும், இராஜ தத்துவத்தோடும் வரவில்லை. தரித்திரம் வறுமை என்ற உடையில் வந்திருக்கிறான். எனவே, நிலைமை இவ்வாறாகும்போழ்து பின்னர் உலமாக்களுக்கு கஷ்டம் எதற்கு? ஒருகாலத்தில் அவர்களின் இங்கோக்கமும் பூர்த்தியாகக் கூடுமன்றோ (இஸாலா. 968 ப.)

(2) முன்னறிக்கையின் வெளிப்படையான அர்த்தத்தின் பிரகாரம் வேறொரு வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹூம் பின்னொருகாலத்தில் உண்டாகக்கூடும் என்பதை அப்போதும் மறுத்திலேன், இப்போதும் மறுத்திலேன். (இஸாலா. 992. ப.)

(3) மஸீஹிய்யத்துவாகிறது என்பேரில் முற்றுப்பெற்றுவிட்டதென்பதும், இனிமேல் எந்த ஒரு மஸீஹூம் வரமாட்டாரென்பதும் இந்த ஏழையின் தாவா அன்று. மேலும் நான் அங்கீகரித்து அடிக்கடி கூறுவதென்னவெனின், ஒருவனென்ன பதினாயிரத்தைக் காண அதிக மஸீஹூகளும் வரலாம். மேலும் பகிரங்கமான ஆடம்பரத்துடனும் மாக்ஷிமையுடனும் வருவதும் சாத்தியம். அன்றி, முதலாவது அவர் திமஷ்கு நகரில் இறங்குவதும் சாத்தியமானதே. (இஸாலா. 1009 ப.)

(4) திமஷ்கு நகரத்தில் மஸீஹைப்போலொருவர் உண்டாகமாட்டாரென்று தெள்ளத் தெளிவாக ரக்ஷகன் என்பேரில் வெளியாக்கிவிடவுமில்லை. இது எனது தாவாவுமல்ல. மேலும் வேறொரு எதிர்காலத்தில் விசேஷமாக திமஷ்கு நகரத்திலும் மஸீஹைப்போன்ற ஒருவர் உண்டாகிறது என்னிடத்தில் சம்பவிக்கக் கூடியதே. (இஸாலா. 922 ப.)

மேலே குறிப்பிடப்பெற்றுள்ள நான்கு வசனங்களிலும் மிர்ஸாஜீ என்பவர் தாம் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் அல்லவென்றும், இனிமேல் திமஷ்கு நகரில் இறங்கி வரக்கூடிய மஸீஹ் வரவும் கூடும் அதை நான் எப்போதும் மறுக்கவில்லை என்றும் மிகத்தெளிவாக அறைகிறார். காதியானியர்களால் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் என்று நம்பப்படும் மிர்ஸாஜீ தானே நான் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் அல்ல, ஹதீதுகளின் வெளிப்படையான வார்த்தைகளின் பிரகாரம் ஒருவர் வருவார் என்று உறுதிகூறும்போது அவரின் உம்மத்துகள் அவரை மஸீஹ் என்று நம்புவதற்கு என்ன உரிமை இருக்கிறது. விஷயம் இவ்வாறிருக்கும்போது லாகூர் மிர்ஸாயீகளான முஹம்மதலி ஸாஹிப் காஜா ஸாஹிப் முதலியோரின் மூடபக்தியைக் குறித்து நாம் மிக ஆச்சரியப்படுகிறோம்.

இரண்டாவது

(1) மிர்ஸாஜீ கூறுகிறார்: ஏ மார்க்க சகோதரர்களே! உண்மையான ஷரஹின் உலமாக்களே! தாங்கள் எல்லீரும் எனது இவ்விண்ணப்பத்தைக் கவனித்துக் கேட்பீர்களாக. இந்த ஏழை,

மஸீஹைப்போன்றவன் என்று தாவாச் செய்திருக்கிறான். (சில) மந்தமதி படைத்தோர் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் என்று நினைத்துக்கொண்டு விட்டார்கள் (அதற்கு நான் என் செய்வேன்). (இஸாலா. 964 ப.)

(2) நான் மஸீஹிப்னுமர்யம் என்று ஒருகாலும் வாதாடவில்லை. எவன் என்மீது (வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் என்று நான் தாவாச் செய்ததாக) இவ்விதப் பழி சாற்றுவானோ அவன் முழுதும் கட்டுக்கட்டுகிறவனும் பொய்யனாகவும் இருக்கிறான். (இஸாலா. 964 ப.)

(3) நான் மஸீஹைப் போன்றவன் என்றே தாவாச் செய்திருக்கிறேன். அன்றி மஸீஹைப் போன்றவனென்பது என்பேரிலேயே முடிவெய்திவிட்டதென்பதும் (குறிப்பிட்ட காலத்தில் மஸீஹ் வரமாட்டாரென்பதும்) எனது தாவா அன்று. மேலும் எதிர்காலங்களில் என்னைப்போன்று இன்னும் பதினாயிரம் மஸீஹைப் போன்றவர்கள் தோன்றுவதும் என்னிடத்தில் கூடுமானதே. (இஸாலா. 967 ப.)

இதை வாசிக்கும் நண்பர்காள்! இப்போது குறிப்பிட்டுள்ள மிர்ஸாஜீயின் மூன்று வசனங்களிலும் அவர் தான் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹென்று ஒருபோதும் தாவாச் செய்யவில்லை. ஆயினும் மஸீஹைப் போன்றவன் என்று மட்டும் தாவாச் செய்திருக்கிறேன் என்று மிகத் தெளிவாக உறுதி கூறுவதுடன் அப்படி தான் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹென்று தாவாச் செய்ததாக தன்பேரில் படர் கூறுவோர் அறிவீனர்களும் சுத்தப் பொய்யர்களுமாகும் என்றும் அறைகிறார். மேலும் தன் போன்ற மஸீஹைப் போன்றவர்கள் இன்னும் ஆயிரக்கணக்காகத் தோன்றலாம் என்றும் வியக்தமாக விளம்புகிறார்.

விஷயம் இங்ஙனமாக, காதியானியர்களும் விசேஷமாக லாகூர் முஹம்மதலி ஸாஹிப் காஜா கமாலுத்தீன் ஸாகிப் ஆகியோர்களும் மிர்ஸாஜீயை வாக்குச் சொல்லப்பட்ட ஈஸா (அலை.) என்று நம்பி வருவதைக் குறித்து நாம் மிக்க வியப்புறுகிறோம். மேலும் முஹம்மதலி ஸாஹிப், மிர்ஸாஜீயை வாக்குச் சொல்லப்பட்ட ஈஸா (அலை.) என்று நம்பாதவர்களை நான் முஸ்லிம் என்று கருதமாட்டேனென்பதாக குர்தாஸ்பூர் கோர்ட்டில் கூறினதைப் பார்த்தால் விந்தையாகவும் விளையாட்டுத்தனமாகவும் காணப்படுகிறது. இப்படிப்பட்ட கலாரத்தினக் களஞ்சியங்கள் எமது மாசற்ற திருகுர்ஆனுக்கு ஆங்கிலத்தில் எங்ஙனம் மொழிபெயர்ப்புச் செய்தனரோ அறியோம்.

இன்னவர்களை மிர்ஸாஜீ மந்தமதியாளர், படர் கூறுவோர், முழுப்பொய்யர்கள் என்று பத்வாக் கொடுத்திருப்பது குறிப்பிடற்பாலது.

சுருங்கக்கூறின் மிர்ஸாஜீயே நான் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் அல்லவென்று பலமாக நிராகரிக்கும்போது அவரை வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் என்று கூறுவதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது. இது குருபூஜை யல்லவா ?

மூன்றாவது

(1) மிர்ஸாஜீ தமது அருள்வேதமான கிரந்தத்தில் கூறுவதாவது: "ஹுவல்லதீ அர்ஸல ரஸூலஹு" என்ற இந்த ஆயத்தாகிறது சரீர சம்பந்தத்துடனும் தேசிய அதிகாரத்துடனும் ஹஸ்ரத் மஸீஹின் விஷயத்தில் முன்னறிக்கையாக இருக்கிறது. இஸ்லாம் மார்க்கம் சம்பூரண வெற்றியடையும் எனக்கொடுக்கப்பட்ட உறுதிமொழி மஸீஹின் மூலமாக நிறைவேறும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) இரண்டாம் விடுத்தம் இக்குவலயத்திற்கு வரும்போது அவர்களின் கையால் எப்பாகங்களிலும் இஸ்லாம் மார்க்கம் நிலவிவிடும்.

(பராஹினெ அஹ்மதிய்யா 458. ப)

(2) மேலே விபரிக்கப் பெற்றுள்ள ஹஸ்ரத் மஸீஹ் சம்பந்தமான முன்னறிக்கையாகிறது, வெளிப்படையாகவும் பூத ஜடலத்தையுடையவராகவும் (வருவார்) என்பதை உண்மைப் படுத்துகிறது. இந்த ஏழை ஆன்ம சம்பந்தமாகவும் அறிவு சம்பந்தமாகவும் அவர்களின் ஸ்தானமாகவும் ஊற்றாகவும் இருக்கிறான். (ஷை நூல் 459 ப.)

(3) அஸா ரப்புக்கும்........என்ற ஆயத்தாகிறது இவ்விடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் அதிகாரத்துடன் வெளிப்படுவதை குறிப்பிடுகிறது. இன்னும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) மிக ஆடம்பரத்துடன் இப்பூவுலகில் இறங்குவார்கள். (ஷை 465 ப.)

(4) ஹஸ்ரத் மஸீஹ் ஆனவர்களோ இஞ்சீலை அறைகுறையாக விட்டுவிட்டு வானத்தின் பேரில் போய் உட்கார்ந்துகொண்டார்கள். (ஷை 361 ப.) ஹயாத்தெமஸீஹ் 2-வது பாகம் 14 ப.)

(5) நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அருளிய தாவது, மர்யமுடைய மகனுன ஈஸா (அலை.) பூமியில் இறங்குவார், விவாகம் செய்வார், புத்திரபாக்கியமடைவார் இவ்வாறு தரணியில் 45 வருடங்கள் ஜீவித்திருந்தபின் உலகை நீத்து எனது கப்ரின் அருகில் அடங்கப்பெறுவார். பின்னர் (கியாம நாளில்) நானும் ஈஸப்னு மர்யமும் அபூபக்ருக்கும் உமருக்கும் (ரலி.) மத்தியிலிருந்து எழும்புவோம்.

இந்த ஹதீதின்படி நடந்தே தீரும். இது உண்மையென்று மிர்ஸாஜீ தமது லமீமா அஞ்சாமெ ஆத்தம் 53-ம் பக்கத்தில் குறிப்பிடுகிருர்.

இதை வாசிக்கும் அறிஞர்களே, நன்கு கவனிக்கவேண்டும். முதல் நம்பரில் மிர்ஸாஜீ தாம் வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் அல்ல, ஹதீதுகளில் அறிவிக்கப்பெற்ற மஸீஹ் பின்னெரு காலத்தில் வருவதை தான் நிராகரிக்கவில்லையென்று தெளிவாகக் கூறிவிட்டார்.

2-வது நம்பரில் நான்வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் என்று ஒருபோதும் தாவாச் செய்திலேன். அறிவீனர்களும் படுபொய்யர்களும் என்னை அங்ஙனம் மதித்துப் பதிர் கூறிவிட்டார்கள் என்று அதி அபூதமாக அறைந்துவிட்டார்.

3-வது நம்பரில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை.) வானத்தில் உயிரோடிருக்கிருர்கள்; பிற்காலத்தில் இறங்கி வருவார்கள்; 45-வருடங்கள் ஜீவித்திருந்து மகாப் பேரடைந்து பின்னர் மரணமெய்தி நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பக்கத்தில் மதீனுஷரீபில் அடங்கப் பெறுவார்கள்; திருமறை ஆயத்துகள் இதை வலியுறுத்திக் கூறுகிறதென்று பஹிரங்கமாகக் கூறிவிட்டார். மிர்ஸாஜீ தாம் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் அல்லவென்பதற்கு எத்தனை கண்டிப்பாகவும் அழுத்தமாகவும் கூற வேண்டுமோ அத்தனை அழுத்தமாகவும் கண்டிப்பாகவும் கூறிவிட்ட பின்னும் அவரை வாக்குச்சொல்லப்பெற்ற மஸீஹ் தான் என்று கூறுவோர் தங்கள் காதியானீ மதக்குருவின் வசனங்களை யறியாதவர்களும் பிடிவாத காரர்களும் மந்த மதியாளர்களும் என்பதற்குத் தடையுண்டோ?

இன்னெரு விதமாகவும் காதியானீ மதஸ்தர்களின் கணக்கை திறந்துவைப்போம். (வரும்)

குறிப்பு. இது சம்பந்தமான விஷயங்களை ஆழமாக ஆராய்ச்சியிட விரும்புவோர் காதியானி மதகண்டன நூற்களிலும் விசேஷமாக ஹயாத்தெமஸீஹ். (அலை) முதற்பாகம் இரண்டாம் பாகங்களிலும் பார்க்கலாம். இவைகள் ஸைபுல் இஸ்லாம் ஆபீஸிலும் தென்காசி முஸல்மான் ஆபீஸிலும் கிடைக்கும்.

மிர்ஸாஜீ தமது தாவாவில் உண்மையுடையவரா?

காதியானீ மிர்ஸாவை அவரின் உம்மத்தியுள்ள காதியானீ வகுப்பார் நபீ என்றும் நபிமார்களைவிடச் சிறந்தவரென்றும் அவரை நம்பாதோர் மோக்ஷத்திற்குரியவரல்லர்; அவர்கள் காபிர்களென்றும் வெளிப்படையாகக் கூறுகின்றனர். லாகூர்ப் பார்ட்டியாரான முஹம்மதலி ஸாஹிப் காஜா கமாலுத்தீன் ஸாஹிப் ஆகியோர் அந்தரங்கத்தில் ஒருவிதமாக இருந்தபோதிலும் வெளிப்படையில் மிர்ஸா நபியல்ல, ஆனல் வாக்குரைக்கப்பெற்ற மஸீஹ் (அலை.) ஆகவும் மஹ்தீ முஜத்தித் மேலும் சம்பூர்ண முஜத்தித் இமாம் என்றும் அவரை நம்பாதோரும் குறைபகர்வோரும் முஸ்லிம்களல்லவென்றும் உறுதியாய்க் கூறுகின்றனர்.

ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் குருக்களை எவ்வாறு கூறினும் யாம் அதை தடைசெய்ய விரும்பவில்லை. எனினும் இத்தகைய கூற்றுக்களுக்கு அக்குருவானவர் பொருத்தமுடையவரா அன்றி மூட நம்பிக்கையால் அக்குருவை இவ்வாறு விஸ்வாஸிக்கத் துணிகின்றனரா என்பதைமட்டும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்கிரேம். இப்பிரச்னை தற்காலம் மிக முக்கியமாக ஏற்பட்டுவிட்டதால் இதை வாசிக்கும் நண்பர்கள் விசேஷமாக முஸ்லிம்கள் அதிசிரத்தையுடன் கவனிப்பார்களாக.

அல்லாவின்பேரிலும் அவனது திருதூதர் நபிகள்நாதர் (ஸல்.) அவர்கள் பேரிலும் கட்டுரைசெய்து அதாவது அவர்கள் சொல்லாத விஷயத்தைச் சொன்னர்கள் என்று தாவாச்

செய்வது பாவங்களில் கொடிய பாவமென்பது வியக்தம்.

மிர்ஸாஜீ கூறுகிறுர் : (1) இறைவன்பேரில் பொய்க்கட்டுரை செய்கிறவன் எல்லா காபிர்களிலும் பெரிய காபிராயிருக்கிறுன் (ஹகீக்கத்துல் வஹீ 163. ப)

(2) எவ்வாறு விக்ரக பூஜை "ஷிர்க்" ஆகிறதோ அவ்வாறே பொய் பகர்வதும் ஷிர்க் (இணைவைப்பது) ஆகும். (அல்ஹகம். ஸபர் 11-1323-நெம்பர் 13 கிஷ்திபெநூஹ் 26. ப.)

ஐயன்மீர்! மிர்ஸாஜீயின் மேற்கூறிய இருவசனங்களையும் ஞாபகம் வைத்தவர்களாக கீழ்க் குறிப்பிடப்படும் அவரின் தாவாவைக் கேளுங்கள்.

மிர்ஸாஜீ கூறுகிறுர். (1)குர்ஆன் ஷரீப் ஹதீதுகளுடைய அம்முன்னறிக்கைகள் பூர்த்தியடைய வேண்டியது நிக்ஷயமாயிருந்தன. அவற்றில் எழுதப்பட்டிருந்ததென்னவெனின்,

"வாக்குச் சொல்லப்பெற்ற மஸீஹ் தோன்றும்போது இஸ்லாமிய உலமாக்களின் கையால் துக்கிப்பார். அவர்கள் அவரை காபிரெனத் தீர்மானிப்பார்கள். இன்னும் அவரைக்கொல்லவும் பத்வாக்கொடுக்கப்படும். மேலும் அவரைக் கடினமான நிந்தனை செய்யப்படுவதுமன்றி அவரை இஸ்லாத்தின் சுற்றெல்லையை விட்டுப் புறம்பானவரென்றும், மார்க்கத்தை அழிக்கக் கூடியவரென்றும் கருதப்படும்" (அர்பஈன் நெ. 3 ப. 20.)

மேற்கூறப்பட்ட இவ்வசனத்தில் மிர்ஸாஜீ, குர்ஆனிலும் , ஹதீதுகளிலும் இவ்விஷயங்கள் கூறப்பட்டிருப்பாதாகத் தாவாச் செய்கிறுர்.

(2) என்னை அவர்கள் (உலமாக்கள்) காபிரென்றும் எனது நாமத்தை தஜ்ஜாலென்றும் வைப்பது அவசியமாகும். ஏனெனில் இந்த மஹ்தீயை (மிர்ஸாவை) காபிரென தீர்மானிக்கப்படுவதுமன்றி அக்காலத்தின் மூர்க்கத்தனமுள்ள மௌலவீகள் அவரை காபிரென்றும் அறைவார்கள். இன்னும் கூடுமானுல் அவரைக் கொன்றுவிடக்கூடிய ஆத்திரத்தையும் கட்டுவார்கள் என்று ஸஹீஹான ஹதீதுகளில் முன்னதாகவே இவ்வாறு அறிவிக்கப்பட்டாய்விட்டது. (லமீமா அஞ்சாமெ ஆத்தம் 38 ப.)

(3) (இன்னல் மஹ்தீனு) என்னும் இந்த ஹதீது ஸஹீஹ், மர்பூஹ், முத்தஸில் என்பதின்பேரில் இரண்டாவது சாக்ஷியாகிறது. (இந்த) பலா யுல்ஹிறு அலா கைபிஹி.......... என்னும் ஆயத்தினுல் காணப்படுகிறது........ இன்னல் மஹ்தீனு என்னும் ஹதீது ஐயமின்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஹதீதாகும். (ஹாஷியா துஹ்பா கோல்றிய்யா 47 ப. ஹகீக்கத்துல் வஹீ 191 ப.)

இந்த இரண்டு வாக்கியங்களும் ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருப்பதாக அழுத்தமாக தாவாச் செய்கிறுர். இவர் தமது தாவாவில் உண்மையுடையவராயின் அவரின் உம்மத்துகள் இந்த இரண்டு வசனங்களையும் ஹதீதுகளில் ஸ்திரப்படுத்திக் காண்பிப்பது கடமையாம்.

(4) ஹஸ்ரத் மஸீஹ் வானத்திலிருந்து இறங்குங்காலை அவரது உடுப்பு மஞ்சள் நிறமாக இருக்கும் என்ற இவ்வசனம் ஸஹீஹ் முஸ்லிம் உடைய ஹதீதில் காணப்படுகிறது. (இஸாலா. 927 ப.)

(5) உண்மையான ஹதீதுகளில் வரையப்பட்டிருப்பதென்னவெனின் :—வாக்குச்சொல்லப்பெற்ற மஸீஹ் இந்தியாவில் பிரசன்னமாவார். (ததிக்கிரத்துஷ் ஷஹாதத்தைன் பார்ஸீ 39 ப.)

காதியானீ மதபக்தர்கள் தங்கள் மத குருவான மிர்ஸாஜீயை தமது தாவாவில் உண்மையுடையவரென்று சாற்றுவதானுல் மேற்பொறிக்கப்பெற்றுள்ள ஐந்து விஷயங்களையும் குர்ஆனிலும் ஹதீதுகளிலும் எண்பிப்பது கடமையாம். இன்றேல் அவர் தமது தாவாவில் உண்மையுடையவரல்லவென்று ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தம் நேரிடும்.

அஹ்மதிய நேயர்காள்! அல்லாஹ்வின்பேரில் படர் கூறுகிறவன் காபிர்களில் கொடிய காபிரென்றும் பொய்கூறுவது இணைவைப்பது போலென்றும் நுங்கள் மதகுருவென்னும் மிர்ஸாஜீ பத்வா வெளியிட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு மிர்ஸாஜீயின் தாவாவை மெய்ப்பியுங்கள். அப்படி மெய்ப்பிக்க முடியாவிடின் அப்படிப்பட்ட பொய் விக்கிர பூஜையை விட்டு விடுங்கள். முடநம்பிக்கை ஒருநாளும் பயன் தராதென்பதை யுணர்ந்து இஸ்லாத்தைக் கைக்கொள்ளுங்கள்! மோக்ஷ வழி எய்த முயலுங்கள் !!

பேராசையுள்ளவன் பெருந்தீங்கனே

ஒரு ஊரில் ஒரு குள்ளன் இருந்தான். எவ்வகையிலும் பணம் திரட்டவேண்டுமென்னும் எண்ணமே அவனைப் பீடித்து நின்றது. அவன் அதற்கான உபாயம் என்னவென்ற சிந்தனையி லீடுபட்டு பலவாறான சூழ்ச்சிகளைச்செய்ய ஆரம்பித்தான். முதலாவதாக தாம் சொற்பமாக கற்றதைக்கொண்டு பணந்திரட்டக்கருதி அதிகாரவர்க்கத்தினருக்கு அடிமைப்பட்டு சொற்ப வருவாயை அடைந்தான். துட்டு சம்பாதிப்பதையே நோக்காகக் கொண்டுள்ள அவ்வருங்குள்ளனுக்கு இவ்வருவாய் மன திருப்தியை அளிக்கவில்லையாதலால் மேல்பதவி யடைந்து மேன்மையுறலாமெனக் கருதி கூள சலாம்போட்டு காக்காய்பிடித்து பலவாறான உபாயங்களைச் செய்து வருவாயைப் பெருக்கிக்கொண்டான். உத்தியோகப்பதவி வகிப்போர் செய்யம் யுக்திகளையும் உபாயங்களையும் மெள்ள மெள்ள கைகொள்ள முயற்சித்து தனக்கு ஏதோ பெரிய அதிகாரம் வந்துவிட்டதாக நினைத்து மஸ்ஜிதுகளில் மார்க்க உபந்நியாசம்புரியும் அறிஞர்களிடம் தனது சிப்பந்திகளை அனுப்புவதும், அவர் பெயரென்ன? எதற்காக வந்தார்? எதுவிஷயம் கூறப்போகிறார் என்றெல்லாம் விசாரிக்கச்செய்வதும் அதனால் தனக்கு பெரும் மதிப்பு ஏற்பட்டுவிட்டதாக மமதை கொள்ளுவதும் அவனுடைய வழக்கமாக இருந்துவந்தது. பின்னர் அத்துடன் முஸ்லிம் சமூகத்தையும் ஏமாற்றி தம் வசப்படுத்திக்கொண்டு மக்களிடையே ஓர் கௌரவத்தை யுண்டுபண்ணிக்கொள்ளவேண்டுமென்னும்பேரவா ஏற்பட்டு ஓர் ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு தாமே தலைவனாக ஏற்பட்டு மார்க்க ஊழியம் செய்வதாக நினைத்துக்கொண்டு சன்மார்க்க விரோதமான பிரசாரஞ் செய்யமுற்பட்டான். உத்தியோக வேட்டையிலுள்ள தம்மை எதிர்க்க எவராலும் முடியாதென்னும் மமதை சிறசிற்கேறி ஆணவங்கொண்டு அசத்தியப் பிரசாரத்தை அணுவணுவாக மெள்ள மெள்ள மேற்கொள்ள ஆரம்பித்தான். இவன் ஏற்றுக்கொண்ட பணியைத் திரம்படச்செய்ய சக்தியற்றவனாக விருப்பதுடன் அதிகப் பிரசங்கித்தனத்தி லீடுபட்டதைக் கண்ட அரசாங்கத்தார் சும்மாயிருப்பார்களா? வாலறுத்து கீழே தள்ளினர். அவன் அவமானத்தால் அதனைச் சகித்துக் கொள்ளமுடியாது தனது மமதையால் அதைவிட்டு வெளியில் வந்தபோது முன்பு இருந்த சொற்பமரியாதையும் போய் சென்றவிடமெல்லாம் சிறுமையடைய வேண்டியதாயிற்று. அசத்தியப் பிரசாரத்திற்குச் சாவுமணி யடிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. இதன்பின் அவனுக்கு சற்று புத்தி வந்ததேயாயினும் பண ஆசை மனதைவிட்டு அகன்றபாடில்லை.

உடனே மதப்பிரசார சேவைக்காகத் தமது உத்தியோகத்தைத் துறந்ததாய் நீலிக்கண்ணீர் விட்டு கூக்குரலிட ஆரம்பித்ததால் "நரிக் கூக்குரல் சமுத்திரக்கரை எட்டும்" என்றபடி இக் கூக்குரல் வடநாடுவரை செல்லுவதற்கு முயற்சிக்கப்பட்டது. பிறந்த நாட்டிலுள்ளவர்களுக்கு இவனது வேஷம் தெரியுமாதலால் யாரும் இவனை பொருட்படுத்தவில்லை, கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் அன்னிய நாட்டானொருவன் இவனை ஆனையோ பூனையோவென்று நினைத்தான். அவனும் இவனைப் போன்று எவ்வகையிலும் பணந்திரட்டுவதையே நோக்காகக் கொண்டவனாகையால் இருவரும் ஒன்று கூடினார்கள் "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்றபடி இருவரும் ஜாடிக்கு மூடியாய்வாய்த்தனர். ஒருவரை ஒருவர் வெகுவாய் வானமளாவப் போற்றிப் புகழ்ந்தனர். ஆயினும் இவர்களுடைய சுயநலவேலை உலகத்தாருக்குத் தெரியாதிருக்குமா? அது வெளியாய்விட்டது. யாவரும் உஷாராய்விட்டார்கள். இவனது அந்தரங்கநோக்கத்தைத் தெரிந்துகொண்டவர்கள் இவனுக்கு இணங்குவார்களா? கடைசியில் உதவியற்று நோக்கத்தில் ஜெயம் பெறாது தனது விருப்பத்தை அடைய வேறுவழியில் கவனத்தைச் செலுத்த முற்பட்டான்.

பிள்ளைகளே! பண ஆசையும் கௌரவப்பிரியமும் மனிதனின் புத்தியை மழுங்கச் செய்வ

தைப் பார்த்தீர்களா? உலகில் புத்திசாலியாகவும் போற்றப்படத்தக்க மனிதனுகவும் இருக்க வேண்டுமாயின்பணம் திரட்டுவதைப்பற்றியும் கௌரவம் சம்பாதிப்பதைப்பற்றியும் பேராசை கொள்ளலாகாது. அல்லாஹ் தஆலா எல்லோருக்கும் கண்ணியம் கொடுப்பவன் ஆதலால் செல்வமும் கண்ணியமும் தானுகவே வர வேண்டுமேயன்றி நாமாகத் தேடி எடுத்துக் கொள்ள முடியாது.

புருவும் காக்கையும்

புரு கபடமற்ற பறவை. இராஜாளியைக் கண்டால் அஞ்சி பயந்து தானுகவே கீழே மல்லார்ந்து விழுந்துகொண்டு கால்கள் இரண்டையும் மேலே தூக்கிக்கொள்ளும். இந்த ஒரு உபாயத்தினுல்தான் அது இராஜாளிக்கு இரையாகாமல் தப்பித்துக்கொள்ளுவது வழக்கம். மற்ற விஷயங்களிலெல்லாம் அது கபடமற்றது. அதை யாரும் சுலபமாக ஏமாற்றி விடலாம். ஆனுல் பறவை இனத்திலுள்ள காக்கை மிகவும் தந்திரமுள்ளது. மிருக இனத்தில் நரி தந்திரமுள்ளதென்றுல் பறவை இனத்தில் காக்கை மிகத் தந்திரமுள்ளது. ஒருநாள் ஒரு காக்கையும் புருவும் ஒன்றையொன்று சந்தித்தன ; நேசங் கொண்டன.நெடுகிலும் பல விஷயங்களைப்பற்றியும் பேசுவது வழக்கமாதலின்சிநேகம் முற்றி சகல விஷயங்களையும்பற்றி திறந்து பேசத் தலைப்பட்டன.

புரு :—காக்கையை நோக்கி, தந்திரமுள்ள பறவை என்று கீர்த்தி வாய்ந்தவரே! பணம் சம்பாதிப்பதற்கு ஏதேனும் வழி சொல்லித் தரமாட்டீரா?

காக்கை :—முதலாவது உமது கபடமற்ற செய்கையை விட்டுவிடவேண்டும்.

புரு :—கபடமற்ற செய்கையை நான் எவ்வாறு விட்டுவிட முடியும்?

காக்கை :—சுயநலம் என்பதை பிரதானமாக வைத்துக்கொள்ள வேண்டும். யாரிடத்திலும் உண்மையைக் கூறக்கூடாது. வெளித்தோற்றத்தில் சமயத்துக்குத் தக்கவாறு நடிக்கவேண்டும்.

புரு :—இவ்வாறு செய்வது மோசடியல்லவா? இதற்காக கடவுள் தண்டிக்கமாட்டாரா?

காக்கை :—இதுதான் முட்டாள் புத்தி. கடவுளாவது கிடவுளாவது. இதுவெல்லாம் பணம் சம்பாதிப்பதற்காக முற்காலத்திலுள்ளவர்கள் ஜனங்களை ஏமாற்றுவதற்காக ஏற்பாடு செய்த கதையைத் தவிர வேறொன்றுமில்லை.

புரு:—அநியாயமாகச்சொல்லுகிறீரே, "கடவுளே இல்லை" என்று சொல்லலாமா? கடவுள் உண்டு, பாபம் புண்ணியம் உண்டு, சத்தியத்தைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்று "காள் காள்" என்று கத்திவிட்டு இப்பொழுது என்னிடத்தில் இப்படி கூறலாமா?

காக்கை :—பணம் சம்பாதிக்க வேண்டுமானுல் இதுதான் வழி. உண்மையில் எனக்கு கடவுள்பேரில் நம்பிக்கையில்லை. வியாபாரம் செய்யவும் தெரியாது. கஷ்டப்பட்டு உழைக்கவும் மனமில்லை. பணம் சம்பாதிப்பதற்கு வழியென்னவென்று சிந்தித்துப் பார்த்ததில் உலகில் பணக்காரருக்கும் மார்க்கத் தலைவருக்கும் தான் மதிப்பிருக்கிறதென்பதைக் கண்டுகொண்டேன். ஜனங்கள் என்னமோ கடவுள் என்று நினைத்து மதத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறுர்கள். மதசம்பந்தமான கல்விகளைக் கற்றிருப்பவர்களுக்கு அவர்கள் அதிக மரியாதை செய்கிறுர்கள். மதத்துக்குழைப்பதாகக் கூறுபவர்களைப் போற்றுகின்றுர்கள். பாடுபட்டுப் பணத்தைச் சம்பாதிப்பவர்கள் தங்களுக்கு புண்ணியம் கிட்டுமெனக் கருதி இவர்களுக்கு வேண்டியமட்டும் பணங்கொடுக்கிறுர்கள். என் பிறவியைப் பார். நான் இருபிறவி. நான் பாடுபடாமல் எனக்குப் பணம் வந்து சேரவேண்டும். அதற்கு இதைத்தவிர சிறந்த உபாயங் கிடையாது. ஆதலால் மதப்பிரசாரம் புரிவதாயும் சீர்திருத்தம் செய்யப்போவதாயும் பாசாங்கு செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

கிறிஸ்துவ மதத்தைத் தழுவி பாதிரிவேஷம் போடலாமா என்றுல் அவர்கள் சட்டப்படி படித்து ஒழுங்கான முறையில் தேர்ந்தவர்களைத்தான் பாதிரிகளாக ஆக்குவார்கள். அதுவும் படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும். நான் இந்தியாவில் பிறந்திருப்பதால் எனக்கு உயர்பதவிகள் கிடைக்காது. தவிரவும் பாதிரி வேஷம் போட்டாலும் சொந்தத்திற்கு பணத்தைச் சேமித்து வைத்துக்கொள்ள முடியாது. பொது ஜனங்களிடமிருந்து வசூலாகும் பணத்தை மிஷனரியிடம்கொடுத்துவிட்டு, அங்கிருந்து கிடைக்கும் சம்பளத்தைத்தான் வாங்கிக்கொள்ள வேண்டும். ஆதலால் பணந் திரட்டும் நோக்கத்துக்கு பாதிரி வேஷம் உதவா

தாகையால் அதை வெறுத்தேன். ஹிந்துமதப் பிரசாரத்திலீடுபட்டு பணம் சம்பாத்தியஞ் செய்யலாமென்றாலோ அவர்கள் என்னை தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளமாட்டார்களென்னும் எண்ணம் எனக்கு பூர்ணமாய் ஏற்பட்டது. இதற்கு என்ன பரிகாரஞ் செய்யலாமென்னும் சிந்தனையில் ஈடுபட்டிருக்குங்கால் வடஇந்தியாவில் சிரத்தானந்தர் கிளம்பி முஸ்லிம்களுக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்வதைக் கண்டு, இது பணம் சம்பாதிப்பதற்கு தக்க சமயமென்று யான் முன்வந்து மலையைப் புறட்டி அப்படியே விழுங்கிவிடுவதாகப் பெரும் ஆர்ப்பாட்டம் செய்து பலவாறான விளம்பரங்களுடன் வெளிக் கிளம்பினேன். முஸ்லிம்கள் அதிக மார்க்கப்பற்றுக் கொண்டவர்களாதலின் என் உள் வேஷத்தைக் கவனியாது சிலர் என் கூக்குரலுக்குச் செவி சாய்த்தனர். கொஞ்சம் துட்டு வேட்டையாடினேன். இதுவன்றி அந்தரங்கத்தில் ஒரு சமாஜத்தாருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு கூலிக்கு அமர்ந்திருந்தேனாகையால் அந்த வகையிலும் எனக்கு வருவாய் வந்துகொண்டிருந்தது. இவ்விருவகையிலும் எனக்கு தக்க பணம் கிடைத்துவந்ததால் என் அவாஒருவாறு பூர்த்தியடைந்தது. பின்னும் அதிக அவா ஏற்பட்டதால் காப்பியடித்து ஆசிரியர் பதவி வகித்து வருங்காலை எனது ஜன்ம விரோதிகளின் தூண்டுதலால் வலையில் மாட்டி சிக்கிக்கொண்டு அவஸ்தைப்படும் ஸ்திதிக்கு வந்துவிட்டேன். இஃதொருபக்கலிருக்க, என் விரோதிகள் பல வகையிலும் என்னைத் தூற்ற முற்பட்டு கோபாவேசத்துடன் பிரசாரம் செய்ய முற்பட்டதன் பயனாக என் செல்வாக்கு குன்ற ஆரம்பித்ததைக் கண்ட யான் வெறிகொண்டு அவர்களைத் திட்டிப் பார்த்தேன்; தூஷணமாலையை வரிசை வரிசையாகத் தொகுத்துப் பார்த்தேன்; என் காரியம் பலிக்கவில்லை. கடைசியாக எதிரிகளின் ஆர்பாட்டம் மிகைத்து பொது மக்களும், ஏற்கனவே என் வலையில் சிக்குண்டிருந்தோறும் எனக்கு விரோதமாகக் கிளம்புவதைக் கண்டு சமய சஞ்சிகையைக் கைக்கொள்ள முற்பட்டேன். கபடமாக சரண்புகுவதுபோல் நடிக்க எண்ணங்கொண்டு தனவந்தர் வாசற்படி சென்று கால்பிடித்து நீலிக் கண்ணீர் வடித்தேன். சஞ்சலப் பாசாங்கு செய்தேன். என் வெளிரங்க பரிதாப நிலைமையைக்கண்ட தயாளசீலர் சற்குணநாதர் அவர்கள் என்னை மன்னித்து தன் அருட்கொடையின்கீழ் என்னை அமர்த்திக்கொள்ள பலரிடமும் சிபார்சு செய்ய ஆரம்பித்தார்கள். ஒருவாறு என் சூழ்ச்சி பலித்து எதிரிகளை ஏமாற்றிவிட்டதான எண்ணம் என் மனதில் வந்தபோது என் குட்டி சிஷ்யர்களெல்லாம் கூக்குரலிட ஆரம்பித்தார்கள். இதனால் என் பேனா வேறு விதமாகத் திரும்பியது. எதிரிகள் உஷாராய்விட்டார்கள். இனி இதற்கு மருந்தென்னவென ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்ததில் மௌனவிரதத்தைத் தவிர வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லை. ஆதலின் அதையே அனுஷ்டிக்க சபதஞ்செய்து கொண்டேன். இப்படிச் செய்தால்தான் என் அபிலாசையாகிய துட்டுவேட்டை கிட்டுமெனக் கருதி பல வேஷம் போட்டுக்கொண்டேன். ஆனால் இதற்கிடையில் ஒருவிஷயத்தை மட்டில் நல்லவிதமாகத் தெரிந்துகொண்டேன். அதாவது, இவ்வாறான சூழ்ச்சிகளினால் ஒருக்காலும் சுயமதிப்பு, மானம் இவைகளைக் கனவில்கூடக் கருதக்கூடாது, அவ்வாறு கருதினால் துட்டு ஆசையை மனதைவிட்டு அகற்றிவிட வேண்டும் என்பதே.

புரு :—என்ன அண்ணா! உங்கள் சங்கதி படுமோசமாக இருக்கிறதே. இவ்வாறு நீ சூழ்ச்சி செய்தால் உலகம் இன்றில்லாவிடினும் நாளை உண்மையைத் தெரிந்துகொள்ளாதா? கடவுள்தான் இவைகளுக்குத் தண்டனை அளிக்கமாட்டாரா?

காக்கை :—இன்னமும் உன் முட்டாள்தனம் போகவில்லையே. கடவுள் கடவுள் என்று பேசாதே. மானம் போனாலும் போகட்டும். தனம் கைக்கு வரவேண்டும். ஆதலால் எவ்வகையிலும் தந்திரமாய் நடிப்பதுதான் அறிவுடமை. பணத்தை எவ்வகையிலும் சம்பாதித்துவிடுவோமாகில் பெருமை தானாகவே வந்துவிடும். உனக்குப் பெருமை வேண்டுமானால் எவ்வகையிலும் பணத்தைச் சம்பாதிக்க முயற்சி செய். பணம் வேண்டுமானால் மானத்தைக் கவனியாதே. உனக்கு உலகநடையே தெரியாதிருக்கிறது.

புரு :—அண்ணா! நீ கோபிக்காதே. உன்னை அடுத்துப் பழகிய பின்புதான் நீ பணம் சம்பாதிக்கும் மார்க்கத்தைத் தெரிந்துகொண்டேன்; உன் அசட்டுத் தொழிலும் அசத்தியத்தன்மையும் நன்கு வெளியாயிற்று. மானத்தை விற்று தனத்தைத் தேடுவது இழிமக்களின் செய்கை

யாகும். இனிமேல் உனது சிநேகம் எனக்கு வேண்டாம். நான் நல்லோர்களைத் தேடி அவர்களுக்குத் தொண்டு செய்து சனமார்க்க நெறியைப் பின்பற்றி நியாயமான முறையில்பணம் சம்பாதிக்க முயற்சி செய்துகொண்டு வருகிறேன்.

காக்கை :—கோபமாய்ப் பேசாதே. இப்பொழுது யான் என் முகத்தை வேறு பக்கல் திருப்பி கூலிக்கு மாறடிக்க எண்ணங்கொண்டு என் பாணத்தை வேறு வழியில் வீச நாடி இருக்கிறேன். இதில் கொஞ்சம் மும்பரமாக ஈடுபட்டு வேலைசெய்து வருவதில் என் கருத்து நிறைவேறாவிடில் இதைவிட்டு இதர வழிகளைக் கைக்கொள்வேன். இவ்வாறு சமயத்திற்கு தக்கவாறு பச்சை ஓந்தியைப்போல் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு என் நோக்கத்தை மாற்றிக்கொள்ளாதுபோனால் யான் கைகொண்டுள்ள எண்ணம் பூர்த்தியடைய மாட்டாதென்பதை கவனத்தில் வைப்பாயா.க யான் சென்று வருகிறேன்.

சிருஷ்டியின் சில வரலாறுகள்

இற்றைய உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டதென்றும், இவ்வுலகிலுள்ள பொருள்கள் எவ்வாறு உற்பத்தியாயிற்று என்பதைக் குறித்தும் இன்று மக்களுள் பலவிதமான அபிப்பிராய பேதங்கள் நிலவி வருகின்றன. இவற்றுள் இரண்டுவிதமான அபிப்பிராய பேதங்கள் குறிப்பிடத்தகுந்தது. இவ்விரண்டுள் ஒன்று, சென்ற பல ஆண்டுகளாக மக்களால் நம்பி அனுசரிக்கப்பட்டு வந்ததும், உலகிலுள்ள பல மதத்தின் கொள்கைகளைத் தழுவி அனுசரித்து வந்ததுமான உலக சிருஷ்டி வரலாறாகும். இரண்டாவது சென்ற நூற்றாண்டிற்குள் பிரசாரப்பட்டு வருவதும், சென்ற பல நூற்றாண்டுகளில் பல அறிஞர்களின் சிந்தனைக்கு ஆக்கமளித்ததுமான பரிணாம தத்துவமாகும். இவ்விரண்டு தத்துவங்களில் எது மக்களது அறிவிற்கும், அனுபவத்திற்கும் பொருத்தமானது என்பதை உலக மக்கள் பரிசீலனை செய்து வருகின்றார்கள்.

உலகிலுள்ள ஒவ்வொரு வர்க்கத்தினருக்கும் அவர்களால் கற்பிக்கப்பட்ட ஒவ்வொரு சிருஷ்டி கதைகள் உண்டு. பொதுவாக மனிதன் தனது அநாகரீகமான வாழ்க்கையினின்றும், அடிமைத்தனத்தினின்றும் விலக ஆரம்பிக்கவே அவன் தன்னைச்சுற்றியுள்ள பிரபஞ்சத்தையும், அதிலுள்ள பொருள்கள் உற்பத்தியைக் குறித்தும் சிந்திக்கத் தொடங்கினான். நான் எங்கிருந்து இவ்வுலகில் பிறந்தேன்? இவ்வுலகம் எப்படி உற்பத்தியாயிற்று! இவ்வுலகில் காணப்படும் பொருள்கள் எப்படி உற்பத்தியாயின? இவைகளைப் போன்ற வினாக்களை அவர்கள் கேட்ட ஆரம்பித்தார்கள். மின்னல்,ஒளி, பூகம்பம்போன்றபல இயற்கைசெயற்கைகளைக் குறித்து குழந்தைகள் அதன்காரணத்தைத் தெரிந்துகொள்ள முயற்சித்து ஒன்றும் கிடைக்காமற் போகவே சில கதைகளை இவற்றின் காரணமாகக் கூறப்பட்டுள்ளதைப் போல், அநாகரீக வாழ்க்கையில் வாழ்ந்து வந்த மக்களுக்கு, தங்களைச் சுற்றியுள்ள பொருள்களின் உற்பத்தி வரலாற்றை கூறத்தெரியாமற் போகவே அவற்றிற்கு இணையாக அச்சில கதைகளை உற்பத்தி செய்தனர். அச்சிருஷ்டிக் கதைகள் சிலவற்றை கவனிப்போம்.

ஸர் ஜான் லூபக் என்ற அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார்:—வட ஆப்பிரிக்காவில் சிங்கா என்றோர் சிறு ஊர் இருக்கின்றது. அவ்வூர் அரசியை ஓர் பாதிரியார் இவ்வுலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது? என்று வினவினர். எவ்வித அச்சமுமின்றி அவ்வரசி "இவ்வூரை எமது மூதாதையார் சிருஷ்டித்தனர்" என்று பதிலுரைத்தாள். வேறு சிலர் இவ்வுலகமும், அவற்றிலுள்ள வஸ்துக்களும் இவ்வுலகில் தானாகவே உற்பத்தியாயிற்று என்று நினைத்து வருகின்றனர். எல்லா வஸ்துக்களும் ஜலத்தினின்றும் உற்பத்தியாயிற்று என்ற எண்ணம் புராதன மக்களுள் நிலவிவந்தது. அமெரிக்காவிலுள்ள சிப்வா இந்தியர்கள் இவ்வுலகம் முழுதும் முதலில் ஒரு ஜலகோளமாக இருந்ததென்றும், அதினின்றும் 'அபார சக்தி' இவ்வுலகை இத்தன்மையில் நிர்ணயித்ததென்றும் கருதி வருகின்றனர். 'மிச்கோஸ்' ஆட்டாவாஸ் போன்றவர்களுடைய சிருஷ்டிக்கதை வர

லாறும் மிகவும் விசித்திரமானது. யாரோ ஓர் 'அமானுஷிக மனிதன்' மேற்குறிப்பிட்ட ஜல கோளத்தில் மூழ்கி ஓர் மணல் தரியை எடுத்து வந்ததாகவும், அதினின்றும் இவ்வுலகம் சிருஷ்டிபெற்றதென்றும் கருதி வருகின்றனர். ஆனால் இவர்கள் கூறும்படியான 'அமானுஷிக மனிதன்' எவ்வாறு உற்பத்தி பெற்றான்? என்பதைக்குறித்து அவர்கள் கூறுவதில்லை.

பூமியின் உற்பவம் ஓர் அணுத் தன்மையினின்றானது என்ற வாதமும் பல வருடங்களுக்கு முன் நிலைபெற்று வந்தது. இந்த வாதம் ஒருவிதத்திலல்லாவிடினும், மற்றபடி பலவாறு பின்லண்ட், போலினீஷ், சைனா, பினீஷா, ஈஜிப்த், இந்தியாபோன்ற நாடுகளிலும் பிரசாரத்திலிருந்து வந்தது. பினீஷர்கள் முட்டையிலுள்ள மஞ்சள் பாகம் பூமியாகவும், அதைச்சுற்றியுள்ள வெள்ளை பாகம் சமுத்திரமாகவும் ஏற்பட்டது என்று இன்றும் கருதி வருகின்றனர். ஒருவகையில் இந்நம்பிக்கைகளுடன் ஒத்துக்கொள்ளக்கூடிய ஓர் கற்பனை இந்துக்களின் புராண வரலாற்றில் கூறப்படுவதாவது:—பரப்பிரம்மமான கடவுள் தமது ஏதோ ஒரு எண்ணத்தால் முதலில் ஓர் ஜலகோளத்தை சிருஷ்டித்தார். அந்த ஜலகோளமத்தியில் அவர் ஓர் விதையை விதைத்தார். அவ்விதை காலப்போக்கில் ஓர் பொன் முட்டையாக மாறிற்று. அம்முட்டையில் சிருஷ்டி கர்த்தாவான 'பிரம்மன்' உருவெடுத்து இவ்வுலகை சிருஷ்டித்தார்.

'ஸ்காண்டிநோவியன்' தேசத்து சிருஷ்டி வரலாறுப்படி முதன் முதலில் ஒன்றுமில்லாத இடத்தில் ஓர் கோடு உற்பத்தியாயிற்று. அக்கோட்டின் தென்பாகம் அக்னி சுவாலையாகவும், வடபாகம் வெளிமயமாக மஞ்சள் வர்ணமும் ஏற்பட்டது. இவ்விரண்டின் சேர்க்கைப்பலனாக 'யாமிர்' என்ற அரக்கன் தோன்றினான். அவரின் வாழ்க்கை முடிந்ததும் அவரது உயிரற்ற பிண உடலினின்றும் சுவர்க்கமும், பூமியும் உற்பத்தியாயிற்று. கிரீக்கர்களும் இவ்வகையிலேயே நம்பிவருகின்றார்களெனினும் சிறிது மாறுபட்ட எண்ணங்களை உடையவர்களாக இருக்கின்றார்கள்.

பேர்ஷியர்களின் மதநூலான "சென்ட் அவெஸ்டா" என்ற நூலில் சிருஷ்டியைக் குறித்து கூறப்படுவதாவது:—"சுயமானதோர் அபாரசக்தி முதலில் 'ஆர்மெண்ட்' பிரகாசத்தின் தேவன், 'அஹ்ரிமன்' இருளின் தேவன் என்று இரு தேவர்களை சிருஷ்டித்ததாகவும், அவற்றுள் 'ஆர்மெண்ட்' பூமியையும் சுவர்க்கத்தையும், அவற்றிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் ஆறுதினங்களுள் சிருஷ்டித்ததாகவும், அவற்றுள் மனிதனது சிருஷ்டியே இறுதி சிருஷ்டி யெனவும் கருதி கூறி வருகின்றனர். பைபிலுள்ள சிருஷ்டி முறை மிக பிரசித்தமானது. முதல்நாள் கடவுள் வெளிச்சத்தை சிருஷ்டித்து இரவு, பகலை ஏற்படுத்தினார்; இரண்டாம் நாள் பூமியையும், அதற்கு இணைபெற்றுள்ள ஜல கோளத்தையும் ஏற்படுத்தி மேற் கூறையை (ஆகாசத்தை) சிருஷ்டித்தார். இந்த மேற் கூறைகளில் நினைக்கும்போது வருஷ மழை பெய்வதற்காக திறக்கக் கூடிய ஜன்னல்களும் இருக்கின்றனவாம்! மூன்றும் நாள் பூமியின் பல பாகங்களிலிருந்த ஜலத்தை யெல்லாம் ஒன்றுபடுத்தி கடலை சிருஷ்டித்ததுடன், பூமியில் விருக்ஷங்களை உற்பத்தி செய்தார். நான்காம் நாள் சூரிய சந்திராதிகளை சிருஷ்டித்தார். ஐந்தாம் நாள் கடலில் மீனையும், ஆகாயத்தில் பறவைகளையும் சிருஷ்டித்தார். முடிவாகப் பூமியில் ஊர்வன நகருவனவைகளையும், நான்கு கால் மிருகங்களையும், முடிவாகத் தமது சொந்த உருவத்தில் மனிதனையும் சிருஷ்டித்தார். சிருஷ்டி உற்பத்தியால் களைத்து சோர்வுற்ற கடவுள் ஏழாம் நாள் ஓய்வெடுத்துக்கொண்டார். (நஊதுபில்லாஹ்.)

உலகின் சிருஷ்டியைக் குறித்து நினைத்து வரும் சில எண்ணங்களே மேற்குறிப்பிட்டவைகளாகும். ஆனால் இவைகளினின்றும் பொதுவாக ஓர் விஷயத்தைக் காண்கிறோம். ஏற்கமுடியாததும், முன்னுக்குப் பின் முரணானதுமான பல தத்துவங்கள் இவற்றுள் மலிந்திருப்பதைக் காண்கிறோம். நாளுக்கு நாள் வாழ்க்கையில் பெருகி வருகின்ற விஞ்ஞானத்தின் ஞானச்சுடரின்வாயிலாக இச்சிருஷ்டி வரலாற்றையும் பரிசீலனை செய்யக் கடமைப்படுகின்றோம்.

சூரியனுடன் பூமியை ஒத்துப்பார்க்கையில் பூமி மிகவும் குறைந்த ஒரு கிரகமாகும். பூமியில் கரி உண்டாவதற்குக் குறைந்தது அறுபது லக்ஷ வருடம் வேண்டும் என்று புரபசர் 'ஹக்ஸிலி' கணித்திருக்கின்றார். அதைப்

போன்றே சுண்ணும்பினுடைய ரூபி கரணத்திற்கும் இத்தனை வருடங்கள் வேண்டியிருக்கின்றது. பூமுகத்திற்கு (பூமிக்கு) உயிர் ஏற்பட்டு அறுபதுகோடி வருடங்களாயிற்று என்று ஸர் ஆர்சிபால்ட்கெய்க் என்ற விஞ்ஞானி கூறுகின்றார். உலக விவகார அகராதியின் இறுதி பதிப்பில், பூமிக்கு குறைந்தது நூறு கோடி வருடம் பருவமுண்டென கூறியிருக்கிறது. விஞ்ஞான பரிணாம ஆராய்ச்சி நடத்திய 'டார்வின்' என்ற அறிஞர், சென்ற 75 வருடத்திற்கு முன்புதான், தமது 'பரிணாம சித்தாந்தத்தை' வெளிப்படுத்தினர். கிறிஸ்துவ புரோகிதவர்க்கம் டார்வினுக்கு எதிராக போரைத் துவக்கியது. மதகோட்பாடுகளின்படி பூமி தட்டை எனக்கூறின மத சாஸ்திரத்தை பொய்யெனக்கூறிய அறிஞர் 'கலீலியோவை' தண்டித்து சிறைப்படுத்தினதைப்போல், டார்வினைச் செய்ய இன்றைய 'புது உலகம்' அனுமதிக்கவில்லை.

சூரியன் நமது உலகிற்கு 10 கோடி மைல் தூரத்திலிருந்து பிரகாசித்து வருகிறது. நமது பூமியைவிட சூரியன் ஒரு கோடி பெரிது. நமது உலகத்தைப்போன்று கோடி உலகங்களை சூரியன் விழுங்கிவிடும். அதன் தூரத்தை நாம் அறியவேண்டுமானால், ஒருவித கணக்குமூலமாகத் தெரிந்துகொள்ளலாம். வெளிச்சம் விநாடிக்கு சுமார் 200,000 அதாவது இரண்டு லக்ஷம் மைல் தூரம் போகின்றது. சூரியனிடமிருந்து நமக்கு அதன் வெளிச்சம் வர, 8 நிமிஷம் பிடிக்கிறதென்றால் சூரியன் நமக்கு எவ்வளவு தூரமாக இருக்கின்றதென்று எளிதில் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆதலின் தினம் நமது சூரியன் உதயமான 8 நிமிஷம் பொறுத்தே, நமக்கு சூரியன் தெரிகிறது. அதேமாதிரியாக சூரியன் அஸ்தமித்த 8 நிமிஷம் பிறகே நமக்கு அஸ்தமித்ததாகத் தெரிகிறது.

சூர்யன், ஒரு பிரமாண்டமான பெரிய நெருப்பு. இதன் அனலில் எந்தவித வஸ்துவும் பஸ்பமாவதோடு அணுக்களாக பிரிந்தோடுகின்றன. அனலை அளக்கும் 'தெர்மாமீட்டர்' என்னும் கருவியைக் கொண்டு சூர்யனுடைய அனலை அளந்தால் சூர்யனுடைய மேல் தட்டில் 6000 டிக்ரி அனலுடையதாம்! உள் தட்டில் 60,00,000 டிக்ரியாம்!! இந்த அனலை எந்த உயிர் பொறுக்கும். நமது பூமிமேல் 110,115 டிக்ரியிலேயே எந்த உயிரும் சுருண்டு சாகுமானல் 1000 டிக்ரியில் எந்த உயிர் நிற்கும்?

சூர்யனுடைய மேல்புறத்தில், (நமது உலக மேல்புறத்தில் காற்று 50 மைல் உயரம் இருந்து வருவதைப்போல்) அனல் லக்ஷ மைல் தூரத்திற்குமேல் வீசுகிறது. நமது உலகத்து மேற்புறத்தில் காற்று, புயல் கொண்டு அடிப்பது போல், சூர்யனுடைய அனலும் புயல்கொண்டு அடித்து வருகின்றதாம். இம் மாபெரும் புயல்களில் சூர்யனுடைய அனல் 10, 20 லக்ஷம் மைல் உயர எழுகின்றதாம். சூர்யனுக்கு முழு கிரஹணம் பிடிக்கும்போது, நடுவிலிருக்கும் சூர்யன் மறைபடவும், அதனின்று உயர எழும் அனல் புயல்களைக் கவனித்தால் என்ன பயங்கரமென்று சொல்லக்கூடும்! நமது பூமிமேல் அடிக்கும் புயல்கள் 100 மைல் 200 மைல் எட்டுவது அரிது. ஆனால் சூர்யனிடத்து எழும் புயல்கள் லக்ஷக்கணக்கான மைல்கள் எழுகின்ற காக்ஷியை காண்கின்றவர்களுக்கு அவர்கள் மனம் எவ்வளவு திகைப்பும் திக்பிரமையும் கொள்ளும்!! நமது பூமிமேல் எழும் காற்றின் புயல் சூர்யனிடத்து எழும் அனலின் புயல்களுக்கு எந்த மூலை!!!

இவ்வளவு பெரியதாகிய நமது சூர்யனுக்கு இவ்வளவு அனல் எவ்விதம் வந்து இருக்க வேண்டுமென்ற கேள்விக்கு, லாப்லெஸ் பெரியோர் செய்துவந்த சிந்தனையை ஓர் விடையாயாகக் கொள்ளலாம். நமது பூமியில் உள்ள பொருள் அனைத்தும் ஏறக்குறைய சூர்யனிடத்தும் இருந்து வருகின்றன. ஸ்பெக் டிராஸ்கோப் என்ற ஓர்வித ஆகாயக் கண்ணாடியால், சூர்யனிடத்திலுள்ள வஸ்துக்கள் தெரியவருகின்றன. இது தூரதிருஷ்டி கண்ணாடியைப் போன்ற ஓர் கருவி. இந்த கருவியால், எந்த பொருளின் வெளிச்சமும் அறியக்கூடும். திருஷ்டாந்திரமாக, பொன்னையோ அல்லது வெள்ளியையோ, அல்லது கரி சாம்பலையோ, ஆவிமயமாக்கி இந்தக் கருவியைக்கொண்டு அந்தந்த ஆவியின் 'ஸ்பெக்டரம்' அதாவது இந்த ஆவியின் வர்ணத்தால் அந்தந்த பொருளின் ஆவியென்று தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு தாதுவர்க்கங்களும் அதன தன் இயற்கை வர்ணத்துடன் ஜொலிக்கின்றது.

இந்தஸ்பெக்டிராஸ்கோப்பை எந்த தாதுவர்க்கத்தின் மேல்காட்டினாலும் அந்தந்த தாதுவர்க்கத்தின் வர்ணத்தைப்பார்க்கலாம். சூரியன் பக்க

மாக இந்த கருவியைக்காட்டினால் சூர்யனிடத்தி லுள்ள தாதுவர்க்க அணுக்களின் வர்ணத்தை யும் அந்தந்த தாதுவர்க்க அணுக்களையும் அத னதன் வர்ணத்தால் தெரிந்துகொள்ளலாம். நீராவி, பிராண ஆவி, கரி, கால்ஸியம், ஸிலி கான் முதலிய தாதுவர்க்கங்கள் சூர்யன் மேற் புறத்தில் அதிகமாக நிறைந்துள.

ஏலியமென்று ஒரு மூல வஸ்துண்டு. இதனை சூர்யனிடத்திலிருப்பதாககண்டுபிடித்தபிறகே, நமது பூமியிலும், அந்த மூலவஸ்து இருப்பதா கத் தெரியவந்தது. எப்படி என்றால், முன் சொன்ன ஸ்பெக்டிராஸ்கோப்பை சூர்ய னிடத்திலுள்ள வஸ்துவைகண்டுபிடிக்க, சூர் யன்மேல் காட்டிவந்தார்கள். இந்த முயற்சி யில் நமது பூமியில் இல்லாத ஒரு தாதுவர்க்கத் தின் வர்ணம் ஸ்பெக்டிராஸ்கோப் மூலமாக சூர்யனிடம் இருப்பதாக முதலில் தெரியவந் தது. இந்த மூலவஸ்துவால், ஏலியம் காம்டி என்ற பிரஞ்சு பெரியோர் சூர்ய சந்திர நட் சத்திரங்களிலுள்ள வஸ்துக்களை கண்டுசொல்ல முடியாதென்றார். அவர் சொலிக்கொண்டிருக் கும்போதே இரண்டு ஜெர்மன் விஞ்ஞானிகள் ஸ்பெக்டிராஸ் கோப்பை சூர்ய திக்கில் காட்டி, அதனிடம் உள்ள வஸ்துக்களை கண்டு நமது பூமியிலுள்ள, பூர்வ மூலவஸ்துக்களும் சாதா ரணமூலவஸ்துக்களும் சூர்யனிடத்தும் இருப்ப தாக விளக்கினார்கள்.

அதாவது, சூர்ய தாதுவஸ்து வென்று பெய ரிட்டார்கள். இதன் பிறகு பூமியிலும் இந்த மூலவஸ்து இருப்பதாக அதன் வர்ணத்தால் தெரிய வந்தது. நமது பூமியில் இந்த ஏலியம் இருப்பதாக தெரிவதற்குமுன், சூர்யனிடம் இருப்பதாக இந்த ஸ்பெக்டிராஸ் கோப் எனும் கருவி மூலமாக கண்டுபிடிக்கப்பட்டது.

நமது பூமி, தன்னைத்தானே 24-மணிக்குள் சுற்றுவதுபோல், தன்னைத்தானே சூர்யனும் 15 நாளைக்குள் சுற்றுகின்றது. இது எப்படி தெரியவருகின்றதென்றால் சூர்யனிடத்தில் சில புள்ளிகள் காணப்படுகின்றன. இவை, 15 நாளைக் கோர்தடவை வலதுபக்கமிருந்து இடது பக்கமாக மாறிவந்து தோன்றுகின்றன. இதனால் சூர்யனும் வதை பக்கத்திலிருந்து இடது பக்கமாக சுற்றுவதாக யூகிக்கவேண்டிய தாய் இருக்கின்றது. எந்தப்பக்கத்திலிருந்து சூர்யன் சுற்றுகின்றதோ, அதே திக்காகவே நமது பூமியும் சூர்யனை சுற்றிவருகின்றது. இவ் விதமாக நமது பூமி நமது சூர்யனை சுற்றி வரும் நேரத்தை ஒருவருஷ மென்கிறார்கள். அதாவது, 335½ நாள். சூர்யன் தன்னைத் தானே சுற்றிவரும் மார்க்கமாகவே நமது பூமி யும் தன்னைத் தானே சுற்றுகின்றது. சூர்யன் சுற்றும் வலமாகவே நமது பூமியும் சூர்யனை சுற்றுகின்றது. முன் கண்டுள்ள விசாரணையில் சூர்யனிடத்திலுள்ள வஸ்துக்களும், நமது பூமி யில் இருப்பதாக் கண்டோம். இரண்டாவது நமது பூமியும், சூர்யன் சுத்தும் திக்கைநோக் கியே சுத்துவதையும் கண்டோம். நமது பூமி யும், சூர்யனும் ஒரே சமதளத்தில் சுற்றுவது மூன்றாவது விசேஷம். சமதளமென்றால், (one plane) என்று ஆங்கிலத்தில் வழங்குவர். இந்த சமதளத்தில், சூர்யனும், நமது பூமியும் சுற்றி வருவது ஓர் பெருத்த விசேஷம். இதற்கு ஏதோ காரணம் இருத்தல்வேண்டும். இது மாத்திர மல்ல, 9 நவக்கிரகங்களும் ஒரே சமயத்தில் ஏறக்குறைய சூர்யனை சுற்றுகின்றன. இந்தக் காட்சி, சாதாரண காட்சியாகா. இது விசே ஷக் காட்சி என்று சொல்லவேண்டும். ஏதோ ஒரு கிரகம் அல்லது இரண்டு கிரகம் அப்படி சுற்றி ஓடலாம். ஆனால், சூர்யனை சுற்றி வோடும் நவக்கிரகங்கள் யாவும், ஏறக்குறைய, சூர்யன் சுற்றும் இடத்திலேயே சுற்றுவதென் றால், இதனினும் விசேஷம் எங்குளது? கணித நூலின் பிரமாணப்படி தற்செயலாக நடந்த தாக எண்ணவேண்டுமானால், அப்படி கோடி பங்கு நடந்திருக்காது. ஏதோ காரணத்தைப் பற்றித்தான் சூர்யனும், நமது பூமியும், மற்று முள்ள 9 பெரிய கிரகங்களும் 500-க்கு மேற் பட்ட சிறு கிரகங்களும், சூர்யன் சுழலும் சம தளத்தில், ஏறக்குறைய சுற்றுகின்றன. இதற்கு காரணம் என்ன இருக்கலாம்? மேற்கண்ட மூன்று விசேஷங்களை சிந்தித்தால், சூர்யனும், நமது பூமியும், மற்ற சிறிய பெரிய கிரகங்களும் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டிருக்கவேண்டு மென்று நம்பவேண்டிவருகிறது.

இஃது பலருடைய அபிப்பிராயமாகும். ஆனால் பற்பல அறிஞர்களான மேதாவிகள் சிருஷ்டிகளின் வரலாறுகளில் தங்கள் கவனங் களைச் செலுத்தி அச்சிருஷ்டி கர்த்தாவான அல்லாஹ் தஆலா சகல வஸ்துக்களையும் படைத்திருப்பதின் இரகசியத்தை இன்று வரை தெரிந்துகொள்ளாதவர்களாகவே இருக் கின்றார்கள்.

ஹஸ்ரத் அம்மாரிப்னு யாஸிர் (ரலி.)

தங்கள் பெயர் அம்மார். காரணப் பெயர் அபூமுஹம்மத். ஹஸ்ரத் அவர்கள் பனூ ஆஸிம் கூட்டத்தைச் சேர்ந்த கியாதி வாய்ந்த பிரத்தியேக ஓர் தனி நபராகும்.

ஹஸ்ரத் அவர்கள் ஈ. பி. 576-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் திகதி அதிகாலையில் மக்கா முஅல்லமாவில் பிறந்தார்கள். அவர்களின் தந்தையாகிய அபுல்மஹாஸின் யாசிர் அவர்கள் அரபிகளில் பிரக்யாதிபெற்ற ஒரு வியாபாரியாக இருந்தார்கள்.

கல்வி ஒழுக்கம்

ஹஸ்ரத் அவர்கள் ஏழுவயதையடைந்தவுடன் அருமைத் தந்தை அவர்கள் அறபிக் கல்வியில் பாண்டித்யமுடையவராகச் செய்ய வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு அதிலீடுபடச் செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் மனம் அதில் விருப்பங்கொள்ளவில்லையாதலால் நான்கு வருடத்துடன் அதனை முடித்துக்கொண்டு விட்டபோதிலும் ஒருவாறு கல்வியில் தேர்ச்சியடைந்தவர்களாய்விட்டார்கள்.

இஸ்லாமியப்பற்று

ஈ. பி. கோ 615-ம் ஆண்டில் ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட காலமாந்து மிகுந்த பயங்கரமுடைய காலமாகவும், முஸ்லிம்களின் சிரங்கள் எதிரிகளின் வாளாயுதங்களுக்கு சரண்புகுவதாகவு மிருந்ததால் ஹஸ்ரத் அவர்கள் பலவாறான சோதனைக்கும் கஷ்ட சங்கடங்களுக்கும் உட்படும்படியான நிர்ப்பந்தமேற்பட்டுப் போயிருந்தது.

கஷ்டங்களைச் சகித்தல்.

617-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ந் திகதி மக்கமாநகரிலுள்ள ஷுஅப அபூதாலிபில் அபூஜஹ்ல் என்பான் ஹஸ்ரத் அவர்களுக்கு பலவாறான கஷ்டங்களைக் கொடுத்து நயப்புடைத்தபோது அவர்கள் பிரக்ஞையற்றவர்களாய்விட்டார்கள். பின்னர் தெளிவுபெற்றபோது சில அநியாயக்காரர்கள் ஹஸ்ரத் அவர்களின் கைகால்களை கட்டி கற்பாறையான இடத்தில் போட்டு நெஞ்சில் பாரமான ஓர் கல்லைத்தூக்கி வைத்துவிட்டார்கள். நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் இக்கோர சம்பவத்தைக் கண்டு மனம் சகியாதவர்களாய், யாசிரின் சந்ததியே பொருமை கொள்வீராக! நிச்சயமாக உம்முடைய இருப்பிடம் சுவர்க்கமாகும் என்று கூறினார்கள்.

பெருமானார் மீது அன்பு

ஹஸ்ரத் அவர்கட்கு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மீது அளவற்ற அன்பு ஏற்பட்டிருந்ததால் தங்களின் மிகுத நேரத்தை நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சமூகத்திலேயே செலவிடுபவர்களாக இருந்தார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஸ்நானம்செய்தோ ஒளுச்செய்தோ மீதப்படும் தண்ணீர் ஹஸ்ரத் அவர்களுக்கு அமிர்தம்போலிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் ஒருநாளன்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் அவர்கள் தலையில் கையைவைத்துத் தடவினார்கள். அதன்பின் அவர்கள் தங்கள் வயது முழுதிலும் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்ளவில்லை. இச்சம்பவ நிகழ்ச்சியால் ஹஸ்ரத் அவர்களுக்கு பெருமானர் (ஸல்.) அவர்கள்மீது அளவற்ற பிரீதி ஏற்பட்டிருந்ததென்பது நன்கு புலனாகிறது.

சற்குணம்

ஹஸ்ரத் அவர்கள் ஆரம்பமுதல் அளவற்ற உன்னத குணமுடைய உத்தமராகவும் சற்குண சாந்தராயும் கிருபை தயாள மூர்த்தியாகவும் விளங்கினார்களாதலின் சதாவும் ஏழைகளின் கஷ்டநஷ்டங்களை விசாரித்து அதற்குப் பரிகாரம் தேடுபவர்களாகவும் வியாதியஸ்தர்களை விசாரிப்பவர்களாகவும் சக்தியற்றோருக்கு உபகாரம் புரிபவர்களாகவும் தாய்தந்தையற்ற அனாதைகள்மீது அன்பு பூண்டவர்களாகவும் கைம்பெண்களின் ஊழியராகவும் விளங்கினார்கள்.

சுன்னத்தைப் பின்பற்றல்

ஹஸ்ரத் அவர்களது உயிர் வாழ்க்கையின் பிரதான நோக்கம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது சுன்னத்தைப் பின்பற்றுவதாக இருந்தது. ஆகவே, ஒவ்வொரு விஷயத்திலும் அதனை கவனத்தில்கொண்டு காரியாதிகளை நடத்திக் கொண்டிருந்தார்களாதலின் பெருமானார் (ஸல்.) அவர்கள் எவ்வாறு விருந்தாளிகளை உபசரித்துக்கொண்டிருந்தார்களோ அவ்வாறே தாங்களும் செய்பவர்களாகவும், பெருமானார் (ஸல்.) எந்த திட்டத்துடன் இதரர்களுடன் வார்த்தையாடுவார்களோ அதே திட்டத்துடன் தாங்களும் வார்த்தையாடுபவர்களாகவும் முடிவாக ஒவ்வொரு விஷயத்திலும் பெருமானார் (ஸல்.) அவர்களின் அழகிய செய்கையை முன் மாதிரியாகக்கொண்டு நடப்பதே தங்களது வாழ்க்கையின் பிரதான சேவையாக கொண்டு நடந்தார்களென்பது மிகைப்படக் கூறியதாகாது.

பிரசார சேவை

ஹஸ்ரத் அவர்களுக்கு இஸ்லாமிய சேவையின்மீது அளவற்ற பிரீதி ஏற்பட்டிருந்ததால் அதன் பிரசாரத்தை தங்கள் வாழ்க்கையின் பிரதான கடமையாக மதித்திருந்தார்கள். அவர்கள் அறப் வம்சத்தாரில் பிரக்யாதி பெற்றவர்களிடையே இஸ்லாமியப் பிரசாரம் செய்துவருவதற்கிடையே அளவற்ற கஷ்ட சங்கடங்களைச் சகித்துக்கொள்ளவேண்டியதேற்பட்டது. ஆனால் இந்நிலைமையின் ஒரு நிமிடங்கூட அவர்களது உறுதியில் சற்றேனும் மாறுதலேற்பட்டதே கிடையாது.

ஒரு தடவை ஹஸ்ரத் அவர்கள் 'யம்பூஉ' துறை முகத்துக்கு சத்திய இஸ்லாமியப் பிரசார நிமித்தம் சென்ற காலை அவ்விடத்திய வாசிகள் வன்னஞ்சமுடைய மாபாதகர்களாக இருக்கும்நிலைமையில் ஹஸ்ரத் அவர்கள் அன்னோரை நோக்கி யம்பூஉ வாசிகளே! இஸ்லாம் என்னும் சூரியன் உதயமாவதற்கு முன் நாம் வெறுக்கத்தக்க வழி கேட்டிலிருக்கவில்லையா? நாம் பெயரளவில்மட்டும் மனிதராக இருந்துகொண்டு அநீதி அதிக்கிரமம் நயவஞ்சகம் முதலிய துர்ச்செய்கைகள் நமது மனோதிருப்தியை அளிக்கும் காரியங்களாகவிருக்கவில்லையா? அரப் தேசத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் சூதுக்கடைகள் திறக்கப்பட்டு தாண்டவமாடவில்லையா? ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள முக்கியஸ்தர்கள் வெட்கக்கேடான தங்கள் செய்கையைக் கொண்டு பெருமை பாராட்டவில்லையா? அவர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கையிழந்து உட்கார்ந்திருக்குங்காலை எங்காகிலும் சச்சரவு ஏற்பட்டுவிடுமாகில் அதனை துபர்படியாக பல்லாண்டு காலம் வரை நடத்திச்செல்லுவதுகிடையாதா? விக்கிரஹ ஆராதனை செய்வது நமது நித்திய ஆசாரமல்லவா? விக்கிரகங்கள் நமக்கு நலவு இடர்களை அளிக்கிறதென்பதும் அவைகளுக்கு ஆண்டவனுடைய காரியாதிகளில் சம்மந்தமுண்டென்பதும் நமது கொள்கையல்லவா? கடைசியாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்.) அவர்கள் இவ்வழிகேடுகளையெல்லாம் ஒழித்து ஏகத்துவம் பொருந்திய ஆண்டகையின் வணக்கத்திலீடுபடும்படி நமக்கு போதிக்கவில்லையா? அவர்கள் நமது குணங்களைச் சீர்படுத்தி நமக்கு அமைதி சமாதானம் முதலிய சற்குணங்களைப் போதித்தார்கள். ஆகவே இதுபொழுது தப்பான வழியைவிட்டு நேர்பாதையில் செல்லுமாறு உங்களிடம் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். ஆகவே துர்மார்க்கத்தை விட்டு சன்மார்க்கத் தளவில் வாருங்கள்! இவ்வாறு செய்யாது போனால் உங்கள் முடிவு பயப்படத்தக்க விதமாய் விடும் என்று அறிவித்தார்கள். இதனைச் செவியுற்ற யம்பூஉ வாசிகள் ஹஸ்ரத் அவர்களுக்கு அளவற்ற தொந்தரவு கொடுத்து முகத்திலும் பல காயங்களேற்படுத்திவிட்டனர். என்றாலும் ஹஸ்ரத் அவர்கள் குன்று ஊக்கத்துடன் தங்கள் பிரசாரத்தைச் செய்துகொண்டு போனார்கள் என தபகாத் இப்னுஸஅத் என்னும் கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது.

வணக்கச்சுவை

ஹஸ்ரத் அவர்களுக்கு வணக்கத்தின்மீதும் அகசுத்தியிலும் அபரிமிதமான பிரீதி ஏற்பட்டிருந்ததால் நடுஇரவிலேயே விழித்து ஒளுச் செய்து தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றியபின் பஜ்ர் தொழுகை நேரம்வரை குர்ஆன் ஷரீப் ஓதுவதிலீடுபட்டிருந்து பின்னர் தொழுகையை நிறைவேற்றுவார்கள். சிலகால் இஷாவுக்குச் செய்த ஒளுவைக் கொண்டு பஜ்ர் தொழுகையை நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

வீரசேவை.

ஹஸ்ரத் அவர்கள் வீரம் பொருந்திய பராக்கிரமசாலியாக இருந்தார்களாதலின் "பத்ர்"

யுத்தம் முதல் ஒவ்வொரு யுத்தங்களிலும் ஈடு பட்டுக்கொண்டிருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் பராக்கிரமத்துடன் ஈடுபட்டு எதிரிகளைத் தாக்கும்போது ஒவ்வொருவரிசையையும் ஒழித்துக் கொண்டுபோய் படையினுள் பிரவேசித்து தைரியத்தோடு போராடியது மக்காவாசிகளை நடுக்கமுறச் செய்துவிட்டது. இவ்வாறு யுத்தகளத்தில் மிக்க தைரியத்தோடு வாட் பிரயோகஞ்செய்தது அம்மாரிப்னுயாஸிர் அவர்களின் விசேஷித்த பிரத்தியேக ஊக்கமாகுமென ஹஸ்ரத் காலிதிப்னுவலீத் (ரலி.) அவர்கள் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

குதன் யுத்தத்தின் சேவை

நபித்துவ காலத்திலேற்பட்ட யுத்தங்களில் குதன் போர் பிரக்யாதிபெற்றதாகும். இந்த யுத்தம் பத்ருக்குப்பின் ஏற்பட்டதாகும். பத்ரில் நடைபெற்ற அமளியைக் கண்டு இஸ்லாத்தின் விரோதிகளெல்லாம் ஆக்ரோஷம் கொண்டு மறுபடியும் யுத்தத்தைத் துவக்கமுற்பட்டனர். குதன் யுத்தம் ஏற்பட்டதன் வரலாறு பின்வருமாறு:—அதாவது ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு முஹற்றம் மாதம் 7-ந்தேதியன்று சிலர் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் வந்து பனூஅஸத் கூட்டத்தார் பெரும் பட்டாளத்தைத் திரட்டிக்கொண்டு பல பல தலைவர்களுடன் “குதன்” என்னுமிடத்தில் வந்து கூடி யுத்த முஸ்தீப்புகள் செய்துகொண்டிருப்பதாய்த் தெரிவித்தனர். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இச்செய்தியைச் செவியுற்றவுடன் 200 வீரர்களைக் கொண்ட படையொன்றைத் திரட்டி ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி.) அவர்களை அதற்குத் தலைமையாக்கி ‘குதன்’ பக்கல் அனுப்பிவைத்தார்கள். ஹஸ்ரத் அம்மாரிப்னு யாஸிர் (ரலி.) அவர்கள் அப்பட்டாளத்தின் கொடிதாங்கிச் சென்றார்கள். அதே மாதம் 17-ந்தேதி யுத்தம் ஆரம்பமானகாலை பனூஅஸத் கூட்டத்தின் தலைவனான அர்கமிப்னு ஹாரித் என்பவன் முன்வந்து, ‘முஸ்லிம்களே! உங்களில் யாரும் பராக்கிரமசாலியாக இருந்தால் என்முன்வாருங்கள்!’ என வெகு மமதையோடு அழைத்தான். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அம்மார் (ரலி.) அவர்கள் முன்னணிக்கு வந்து, “யான் உன்னை எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன்” எனக் கூறிக்கொண்டே அவன்மீது வாள்வீசவே அவன் பிணம் பூமியில் விழுந்தது. பின்னர் பொது யுத்தம் ஆரம்பமாகி முஸ்லிம் வீரர்கள் தக்க சாமர்த்தியத்தோடு பயங்கரமான போர் நடத்தினார்கள். எதிரிகளும் தயங்காமல் போர் நடத்தினதால் பல மணிநேரம் துயர்படியாய் போர்நடைபெற்று கடைசியில் ஹஸ்ரத் அம்மாரிப்னுயாஸிர் (ரலி.) அவர்கள் எதிரிகளின் படை மத்தியில் நுழைந்து கடும்போர் நடத்த வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. ஹஸ்ரத் அவர்கள் வீரதீர பராக்கிரமத்துடன் கடும் வாட் பிரயோகஞ் செய்ததின் பயனாக எதிரிகளின் கால்கள் தரிபாடற்றதாகி உஷாரற்று ஓட்டம்பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் யுத்தம் முடிவுபெற்று விடவே, முஸ்லிம்களில் பதினான்குபேர்கள் ஹஷீதாய்விட்டதாகவும் எதிரிகளின் பலங் குறைந்து அவர்கள் சின்னாபின்னப்பட்டுப் போனதாகவும் முடிவு அறிவிக்கப்பட்டது. பனூஅஸத் கூட்டத்தாரில் பிரக்யாதிபெற்று விளங்கிய வீரத்தலைவர்கள் ஒவ்வொருவராய்க் கொல்லப்பட்டுப்போயினர். சுமார் 20பேர்வரை கைதியாக்கப்பட்டிருந்தனர். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வெற்றியைக்கண்டு அதிக சந்தோஷமடைந்தார்கள். வழமைப் பிரகாரம்யுத்தக்கைதிகள் சஹாபாக்களிடையே பங்கிட்டுக் கொடுக்கப்பட்டனர். அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் சஹாபாக்களை விளித்து இக்கைதிகளுடன் தக்க முறையில் நடந்து அன்புபாராட்டுங்கள்; உங்களுடைய சாப்பாட்டை அவர்கள்முன் வைத்து விடுங்கள்! எனக் கூறினார்கள். நபிகள் பெருமானார்(ஸல்.)அவர்களின் இக்கட்டளையைசஹாபாக்கள் அன்புடன் ஏற்று அதனை கிரியாம்சையில் தக்கமுறையில் செய்துகாட்ட முற்பட்டு அவர்களுக்கு மேலான சாப்பாடு கொடுக்கவும் சுவண்டியாகத் தூங்கச் செய்யவும் அபரிமிதப் பிரயத்தினஞ் செய்தனர். அக்கைதிகளில் அர்கமிப்னு ஹாரிதுடைய குமாரரான ஸுஹைலிப்னு அர்கமுமிருந்தார். அவர் ஹஸ்ரத் அம்மாரிப்னு ஹாரிது (ரலி.) அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தார். அவர் தெரிவிப்பதாவது:- அம்மாரிப்னு ஹாரிது (ரலி.) என்தந்தையைக் கொன்றிருந்தபோதிலும் என்னுடன் சகோதிரவாஞ்சையாக நடந்துகொண்டார்; ஒவ்வொரு தினத்தின் காலையிலும் மாலையிலும் எனக்காக சுவை பொருந்திய சாப்பாட்டைத் தயாரிப்பவர்களாகவும் தங்களுக்காக சாதாரண முறையைக் கைகொள்ளுபவர்களாயு மிருந்தார்கள்.

இதனுல் எனக்கே வெட்கமேற்பட்டு நல்ல சாப்பாட்டை அவர்கள் முன் வைப்பேனுகில் அதை அறவே கையால்கூடத் தொடாது என்னிடம் திருப்பிக்கொடுத்து விடுகிறவர்களாக இருந்தார்கள்.

இவ்வாறு சஹாபாக்கள் யுத்தக்கைதிகளுடன் தாராள சிந்தையுடன் அன்பு பாராட்டி நடந்து கொண்டதின் பயனுக அக்கைதிகள் யாவரும் உள்ளன்போடு இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு இஸ்லாத்திற்காக தங்கள் இன்னுயிர்களை தியாகஞ் செய்யும் வீரர்களாய்த் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் 571-ம் ஆண்டு ஏப்ரல்-மீ 23-ம் தேதி மரணமாகி ஜன்னத்துல் பகீஹ் வில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

சுகாதாரம்—க்ஷயரோகம்

க்ஷயரோகத்திற்கு "மஹா வெள்ளைக் கொள்ளை நோய்" என்று பெயர். இது மானிடர்களுக்குச் செய்யும் தீங்கைப் பார்த்தால், இப்பெயர் இதற்கு நன்கு பொருந்தும் என்றே தோன்றுகிறது. ஒவ்வொரு தேசத்திலும் இந்த வியாதியின் பெயரைச் சொன்னுல் ஜனங்கள் நடுநடுங்குகிருர்கள். இது நியாயமே. வியாதிகளுக்குள், இது மானிடர்க்கு மகத்தான சத்துரு. யுத்தத்திற்கு அடுத்தபடி மானிட தேகத்திற்கு மிக்க தீங்கை விளைவிக்கக்கூடியது இந்த வியாதிதான். வருஷந்தோறும் கோடிக்கணக்கானவர்கள் இதனுல் மரணமடைகிருர்கள். இன்னும் அநேக கோடி ஜனங்கள் இந்த வியாதியால் தேகம் மெலிந்து உழைக்கச் சக்தியற்றவர்களாகிவிடுகிருர்கள். அநேக குடும்பங்கள் ஏழ்மைத்தனத்திலும் துன்பத்திலும் முழுகிப்போகின்றன. இந்த கோரமான வியாதியை எதிர்க்க பொதுப் பணம் கணக்கின்றி செலவழிக்கப்படுகிறது. பூலோகத்தில் பிறக்கும் 7 அல்லது 8 நபர்களில் ஒருவரை இந்த வியாதி கொள்ளைகொண்டு போகிறது.

காலரா அல்லது நியூமோனியா வியாதியைப் போல் க்ஷயரோகம் விரைவில் கொன்றுவிடுகிறதில்லை. அது நோயாளியைச் சாகடிப்பதற்கு முன் வருஷக்கணக்காய் வருந்தச்செய்து, பல ஹீனப்படுத்தி விடுகிறது. எல்லா வியாதிகளிலும் இது எங்கும் பரவியுள்ளது; மிகவும் கபடமானது; இதை ஒழிப்பது கடினம். இந்த வியாதியில்லாத தேசம் ஒரு தேசமாகிலும் கிடையாது. ஆனுல், சில தேசங்களில் மட்டாயும், சில தேசங்களில் அதிகமாயும் இருக்கிறது. இதுதான் வித்தியாஸம். காலரா, மலேரியா வியாதிகளைப்போல சில இடங்களிலோ, சில சீதோஷ்ணங்களிலோ, அல்லது சில காலங்களிலோ தோன்றக்கூடியதல்ல; இது எல்லா இடங்களிலும், எப்போதும் எங்கும் பரவி இருக்கும்படியான வியாதி. இது குழந்தைகளையும் சிறுவர்களையும் பீடிக்கக்கூடிய வியாதியாயிருந்தபோதிலும், எந்த வயதினரையும் தாக்கும். மனிதனைமட்டுமன்று, அநேக ஜெந்துக்களையும் இது பீடிக்கும்.

க்ஷயரோகத்தைப்பற்றி நாம் யோசிக்கும்போது, இரண்டு முக்கியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அதாவது, விஷக்கிருமியும், மானிடதேகமும். இவைகளை 'விதை' என்றும், 'நிலம்' என்றும் விவரித்துச் சொல்லலாம். க்ஷயரோகமானது ஒரு விஷக்கிருமியால் உண்டாவது. இதன் குணங்கள் சாஸ்திரோக்தமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. க்ஷயரோக வியாதியஸ்தர்களின் தேகங்களில் இந்த வியாதிக்கிருமி இருந்துவருகிறது. கணக்கற்ற இக்கிருமிகள், நோயாளியின் கோழையிலும், மற்றக் கழிவிடைகளிலும் வெளிவருகின்றன. சூரிய வெளிச்சத்தினுலும், சுத்த காற்றினுலும் சில மணி நேரங்களில் அவை இறந்துவிட்டபோதிலும், இருட்டானதும் அசுத்தமானதுமான இடங்களில் மாதக் கணக்கில் ஜீவித்திருந்து, வியாதியையும் மரணத்தையும் உண்டுபண்ணும். தூசுப்பொடிகளின்மேல் காற்றுமூலமாய்க் கொண்டுபோகப்படும் விதை எங்கு கண்டாலும் இருக்கிறது. ஆனுல், அது முளைப்பதற்குத் தக்க நிலம் வேண்டும். மானிடதேகந்தான் நிலம். இந்த நிலம் அதற்குத் தக்கதா இல்லையா என்பது ஒவ்வொரு நபரின் தேகநிலையையும் பழக்கவழக்கங்களையும் பொருந்திநிற்கும். விசாலமான தோள்களோடும், வலுவான

மார்புகளோடும் கூடிய ஒரு ஆரோக்கியமான மனிதன் வெளிக்காற்றில் உலாவிவந்து, நல்ல ஆகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டு வரும் பக்ஷத்தில் அந்த விஷக்கிருமையை எதிர்ப்ப தற்கு சக்தியுள்ளவனுயிருப்பான்.

பலஹீனமுள்ளவனும், போஷணையற்ற ஆகாரம் உண்பவனும், எப்போதும் உட்கார்ந்து வேலை செய்துகொண்டிருக்கும் மனிதனும் இந்த வியாதியால் பீடிக்கப்படடு அநேகருக்கு இந்த வியாதியைத் தொத்த வைப்பதற்கு ஹேது வாயிருப்பான். விதையை அறவேவொழிப்ப தென்பது கடினமான விஷயம். சுகாதாரமுறைகளை அனுசரித்தால் அனுகூலம் ஏற்படும். நிலத்தை விதைக்குத் தகுதியற்றதாகச் செய்யும்பக்ஷத்தில் இன்னும் அனுகூலம் உண்டு. நமது முயற்சிகள் யாவையும் இதுவழியில் செலுத்த வேண்டும். இளமைப்பருவத்தில் உள்ள ஒருவனை ஆரோக்கியமுள்ளவனுக நாம் செய்வதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்கிறோமோ, அவை யாவும் க்ஷயரோகத்தை எதிர்ப்பதற்கு ஏற்ற ஆயுதமாகும். திறந்த வெளிக்காற்றில் உலாவி வருதல், ஆரோக்யமுள்ள விளையாட்டுகள், போஷணையுள்ள ஆகாரம், சரியான தேக நிலை, சுத்தம், சுகாதாரமான பழக்க வழக்கங்கள் இவையாவும் படையெடுத்துவரும் விரோதியைத் தடுப்பதற்கேற்ற காப்புக்களாகும்.

'க்ஷயரோகம் சொஸ்தமாகக்கூடிய வியாதியா' என்னும் ஓர் கேள்வி சில சமயங்களில் கேட்கப்படுகிறது. அதற்கு நாம் 'ஆம்' என்று பதிலுரைப்போம். ஆனல், நாம் சொல்லுகிறபடிசெய்தால்தான் சொஸ்தமாகும். இதற்கு வேண்டிய அநேகவித சிகிச்சைகளைச் செய்யும்பொருட்டு, மிக்க காலமும் உழைப்பும் விரயமாயிருக்கின்றன. ஆரோக்கிய ஆஸ்ரமங்களும், இதற்கென்று தனிமையான ஆஸ்பத்திரிகளும், வைத்திய சாலைகளும் கட்ட பொதுப்பணம் எவ்வளவோ செலவழிந்திருக்கிறது. ஒரு க்ஷயரோகிக்குச் சிகிச்சை செய்வதானல், வெகுநாட்செல்லும், மகா கஷ்டம். மலேரியா விஷக்கிருமியை கொயினு கொல்வது போல் காசநோய் விஷக்கிருமியைக் கொல்ல ஏற்ற மருந்தொன்றுமில்லை. அநேக கேசுகளில் ஜாக்கிரதையாய் நீடித்து, சிகிச்சை செய்தால் வியாதியை ஏறவொட்டாமல் தடுக்கலாம். சில கேசுகளில் நோயாளி சொஸ்தமாகி, தன் தொழிலை முன்போலவே மறுபடியும் செய்து கொண்டு வரலாம். ஆனல், அநேக கேசுகளில் முழுதும் சொஸ்தமாகாது; முன்போல அவ்வளவு சுறுசுறுப்பாயும் வேலைசெய்ய முடியாது. அப்படி பூரணமாய் சொஸ்தப்படுத்தினுலுங்கூட, நோய் ஒருவனைவிட்டு நீங்கி, அவனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அது தொத்துவதற்கானஹேதுக்கள் கம்மியாயிருக்கும்படிச் செய்வதே யொழிய வேறல்ல. ஆனல், எதனுல் அவனுக்கு இந்த வியாதி வந்ததோ, அது சம்பந்தமான ஜனசமூக நிலைமைகளை நாம் சரிப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த ஜனசமூக நிலைமைகளினல் கோடிக்கணக்கான நபர்கள் ஆபத்திற்கு உட்பட்டிருக்கிறுர்கள். க்ஷயரோகத்தில் சொஸ்தம் செய்வதைக்காட்டிலும் தடைமுறைகளை அனுசரிப்பதே மேல்.

க்ஷயரோகம் பரம்பரையையொட்டிய வியாதியா?' என்று கேட்கலாம். அது சில குடும்பங்களில் வருவது வாஸ்தவமே. ஆனல், அது சுற்றுப்புறத்தையொட்டியதே யொழிய, பரம்பரையை யொட்டியதன்று. க்ஷயரோகத்தால் வருந்தும் பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் க்ஷயரோகத்துடன் பிறக்கிறதில்லை. அந்த வியாதி வருவதற்கு அவர்கள் தேகத்தில் யாதொரு ஹேதுவுமில்லை. நோய்ப்பட்ட தம் பெற்றோர்களிடம் கூடவேயிருந்துவாழ்ந்து சுகாதாரமற்ற நிலைமைகளில் இருந்து வருவதால், அவர்களுக்கு இந்த வியாதி பீடிக்கிறது. பெற்றோர்களைவிட்டு அவர்களைப் பிரித்து, ஆரோக்கியமான சுற்றுப்புறங்களில் வசித்து வரச்செய்தால், இந்த வியாதி வராமல் அவர்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ளலாம்.

இந்தியாவில் க்ஷயரோகத்தைப்பற்றிய முக்கிய அம்சங்கள் என்ன? பூலோகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் க்ஷயரோகப் பிரச்சனை இருந்துகொண்டிருக்கிறது. இந்தியா அதற்கு விலக்கன்று. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்னும் பூலோகத்தின் மற்றெல்லாப் பாகங்களிலும் சென்ற சில பத்தாண்டுகளாக க்ஷயரோகத்தை எதிர்க்க ஒழுங்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இந்த தேசங்களிலெல்லாம் க்ஷயரோகத்தினல் நேரிடும் மரணமும் குறைந்துவருகின்றது. இது ஒரு பாகம், ஜனங்கள் அடைந்திருக்கும் பாதுகாப்பினுலும், ஒரு பாகம் பொது ஆரோக்கிய அதிகாரிகள் செய்யும் ஒழுங்கான முயற்சிகளாலும்

மிருந்த பாகம் வீடு, சுகாதாரம், சுகமான வாழ்வு இவைகளினுலும் உண்டாயிருக்கிறது. ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பித்தவுடனே இதற்குத்தடங்கல் ஏற்பட்டு, அதனல் கெடுதல் நேரிட்டது. அது யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஜனங்களுக்கு துன்பத்தையும், வறுமையால் பட்டினியையும் கொண்டுவந்து விட்டது.

துன்பமும் பட்டினியும் க்ஷயரோகத்தின் பக்கம் சேர்ந்து சண்டை செய்கின்றன. யுத்தத்தினல் கொஞ்சம் தடங்கல் ஏற்பட்டபோதிலும், மேனட்டார் க்ஷயரோகத்துடன் மும்பரமாய் சண்டைசெய்து ஜெயம்பெற்றனர். இது சுகாதார சாஸ்திரத்தினல் உண்டான ஜெயம். இந்த ஜெயத்தில் இந்தியாவிற்கு யாதொரு பங்குமில்லை. இந்தியாவில் வருஷவாரி க்ஷயரோகத்தால் 6 லக்ஷம் நபர்கள் மரணமடைகின்றனர். இதை இன்னும் தெளிய உரைக்க வேண்டுமானல், வருஷவாரி இந்த வியாதியால் சென்னை நகரத்திலுள்ள ஜனங்கள் முழுவதும் மாள்கின்றனர். பொதுஜன ஆரோக்கிய விஷயமாகப் பார்க்கப்போனல், மிகவும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது, இந்தியாவில் க்ஷயரோகம் அதிகரித்துக்கொண்டேதான் வருகிறது. அதாவது, சென்ற 50 வருஷ காலமாக மேனடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேக்கம் இந்தியாவில் இன்னும் ஆரம்பமே ஆகவில்லை.

அநேக விஷயங்களில் க்ஷயரோகத்துடன் போர் தொடுப்பதில், இந்தியாவிற்கு அநேக அனுகூலங்கள் உண்டு. அபிரிமிதமான சூரிய வெளிச்சம் நமது தேசத்தில் உண்டு. ஜனங்களில் பெரும்பான்மையோர் திறந்த வெளிக்காற்றில் விவசாயத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனல், பிரதிகூலங்கள் அநேகம் உண்டு. இவை க்ஷயரோகக்கிருமிக்கு ஒத்தாசையாயிருக்கின்றன. அவையாவன:—ஏழ்மைத்தனம், மூடத்தனம், போஷணைக்குறைவு ஆகிய இவைகள் பொதுஜனங்களிடம்குடிகொண்டிருத்தல், கெடுதலான வீடு, சுகாதாரக் குறைவு, தொழிலாளிகள் கெடுதலான நிலைமைகளில் பட்டணங்களில் வந்து வசித்தல் ஆகிய இவைகளே. க்ஷயரோகக்கிருமி திறந்த வெளிகளில், உஷ்ணப் பிரதேசத்து சூரிய வெளிச்சத்தில் நாசமடையும். ஆனல், குடியானவர்களின் குடிசையிலும், சேரிகளின் குடிசையிலும் உள்ள இருட்டானதும், அசுத்தமானதுமான மூலை முடுக்குகளில் அதற்கு மிகப்பிரியம். அங்கே அது நன்ருய் விருத்தியாகும்.

க்ஷயரோகத்தைப்பற்றி, பொது ஜனங்களுக்கு யோசனை சொல்லவேண்டுமானல் அது ஒரு சிக்கலான விஷயம். ஆனல், மற்ற தேசங்களின் அனுபவத்தினல் நாம் பலனடையலாம். இந்தப் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஜனங்கள் யாவருக்கும் ஒரு சுருக்கமான யோசனை சொல்ல வேண்டுமென்று கேட்டால், அரசர் முதல் தாழ்ந்த பிரஜைவரையில் ஒவ்வொருவருக்கும் யோசனை சொல்லலாம். க்ஷயரோகத்தால் வருந்தும் அதிர்ஷ்டஹீனனகிய நோயாளிக்குச் சொல்வது யாதெனில், பொது ஆரோக்கிய அதிகாரிகளிடம் உடனே கலந்து ஆலோசி. அவர்களுடைய கட்டளைகளின்படி நட. இதன் மத்தியில் பொது இடங்களில் எச்சில் துப்பாதே!'' ஆரோக்கியமாயுள்ள ஜனங்களுக்கு முக்கியமாய் நமது சிறுவர் சிறுமியர்களுக்குச் சொல்வதாவது: "கடவுள் அளித்த சுத்த காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் அனுபவி. உங்கள் நுரையீரல்களில் காற்று நுழையும்படிச் செய். உங்கள் தேகங்களுக்கு வியாயாமம் கொடு. குனிந்து நடக்காதே. அதிக்கிரமித்து ஒரு காரியமும் செய்யாதே! போஷணையுள்ள ஆகாரத்தை உண். நிரம்பப் பசும்பால் சேர்த்துக்கொள்''. உபாத்தியாயர்கள், ப்ரொபெஸர்கள், பெற்ருேர்கள் இவர்களுக்குச் சொல்வதாவது: "நீங்கள் க்ஷேமமாயிருக்கவேண்டுமானல், மேலே சொல்லிய புத்திமதிப்படி நடக்க அவர்களை வற்புறுத்துங்கள்''. ஊர் அதிகாரிகளுக்கும், தர்ம சிந்தனையுள்ளவர்களுக்கும் சொல்வது யாதெனில், "பொதுஜனங்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யுங்கள்; அவர்களுக்குத் தக்க கூலிகொடுங்கள்; குடியிருக்க நல்ல சுகாதாரமான வீடு கட்டிக்கொடுங்கள்; போஷணையுள்ள ஆகாரம் வாங்கிப் புசிப்பதற்குப் பொருளுதவி செய்யுங்கள்; அவர்கள் தேகத்திற்குள் காற்று புகும்படி உலாவி வர ஒய்வு கொடுங்கள்''. கடைசியாக நம்மை ஆளும் ராஜாக்களுக்கு விநயமாய்ச் செய்துகொள்ளும் விண்ணப்பம் யாதெனில், "யுத்தத்திற்குப் போகாதீர்கள்; யுத்தத்தில் ஒருவரும் ஜெயிக்கிறதில்லை. காசநோய்க் கிருமிக்கும், அதன் அநேக சகாக்களுக்கும் தான் ஜெயம். உங்கள் பிரஜைகளுக்கு சமாதானமும், க்ஷேமமும், நிர்ப்பயமான வாழ்வும் கொடுங்கள். இவைதாம் க்ஷயரோகத்தின் வைரிகள். ஆயுதங்களுக்காக கோடிக்கணக்காய்ச் செலவழிப்பதில், சில ஆயிரம் படிப்பிற்கும் சுகா

தாரத்திற்கும் செலவழியுங்கள்; அதனல் நல்ல பிரதிபலன் உண்டு''.

க்ஷயரோகத்தை ஜனசமூக வியாதி என்று சொல்லப்படுகிறது. அது நியாயமே. அதன் விருத்தி, ஒரு வகுப்பாரின் ஜனசமூக சிக்கன நிலைமைகளைப் பொருந்தி நிற்கும். இந்த ஜன சமூக சிக்கன நிலைமைகளைப் அபிவிருத்தி செய்வதில், அந்த வகுப்பில் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அது எவ்வவைு சிறந்ததாயிருந்தபோதிலும், இந்த வியாதிக்கு விசித்திரமான புதிய சிகிச்சை கண்டுபிடித்தால்மட்டும் போதாது; நமது கையிலுள்ள ஆயுதங்களை ஒழுங்காய் உபயோகிப்பதே இதில் முக்கியமான விஷயம். க்ஷயரோகத்துடன் போராடுவதில் நமது சைன்னியம் செவ்வையாய்த் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும். டாக்டர்கள், நர்ஸுகள், ஆரோக்கியப் பார்வையிடுவோர்கள், ஆராய்ச்சி வேலை செய்வோர்கள், ராஜ்ஜிய பரிபாலனம் செய்பவர்கள், உபாத்தியாயர்கள், பெற்றோர்கள், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்—இவர்கள் யாவரும் தம்தம் தொழில்களிற் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எதிரியின் ஒவ்வொரு தொழிலையும் எதிர்க்கத்தக்க ஆயுதங்களை வைத்திருக்கவேண்டும். தரையில் எச்சில் உமிழும் க்ஷயரோகியை விரோதி என்றே கருதவேண்டும். ஆனல் எந்த ராஜ்ஜியாதிபதி நமது தேசத்தை பூலோக யுத்தத்தில் அமிழ்த்துகிருனே, அவன் பெருத்த விரோதி. க்ஷயரோகக் கிருமிக்கு ஒத்தாசையாயுள்ள ஒவ்வொன்றையும் பச்சாத்தாபமின்றி எதிர்த்தால் தான் இந்த மஹா வெள்ளைக் கொள்ளை நோயுடன் எதிர்த்து ஜெயிக்கலாம்.

ஓர் இனிய கதை

(சென்றமு 360-ம் பக்கத் தொடர்)

மிஸ்ர் கடிதம்

“இவ்வாரத்தில் மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. மனே உற்சாகத்தை அளிக்கும் சாராயங்களினல் தக்க பயன் கிடைத்தது. மூன்று வாலிபர்களை ஈஸாயிய்யத்தின் பக்கல் கொஞ்சம் திருப்பியிருக்கிறது. இவர்கள் தங்கள் நண்பர்களையும் வசப்படுத்திக்கொண்டிருக்கிருர்கள். தங்களுடைய யோசனை நல்ல பயனை அளிப்பதாக ஏற்பட்டுப் போயிற்று. சாராயம் இரண்டு கினிவரை உயர்ந்திருக்கிறது. நாம் நமது கிளப்பில் முந்திய விலையைவிட அறைவாசி விலைக்கே கொடுத்துவருகிறேம். இளவாலிபர்கள் நம் பக்கமே மோகங்கொண்டிருக்கின்றனர். ஈஸாயிய்யத்தின் பக்கல் மோகங்கொண்டிருப்பவனுக்கு சாராயம் இனமாய் கொடுக்கப்பட்டுவருகிறது. “ஆண்டவனுடைய ஏகபுத்திரரதுசொல் மேலோங்கி சென்றுகொண்டே இருக்கும்.''

இராக் கடிதம்

“சரியான நேரத்தில் ரூபாய் கிடைத்துவிட்டது. வேலையில்லாமல் திண்டாடித் திரிந்த வாலிபர்களை வேலையில் ஏற்படுத்திவிட்டோம். தொழிற்சாலையில் பெயருக்காகமட்டும் வேலை வாங்கப்படுகிறது. அதிக நேரம் அவர்களை சீர்திருத்தம் செய்வதிலேயே செலவிடப்படுகிறது. இவர்கள் இஞ்ஜீலை விருப்பத்தோடு வாசிக்கின்றுர்கள். அடுத்த மாதத்திய சம்பளத்தில் ஒருவாறு கூடுதல் செய்து கொடுக்கப்படும். இதற்குப்பின் ஜெயமென்பதே நம்முடையதாகும். தாங்கள் ஆசீர்வாதம் புரியுங்கள். ‘ரூஹுல் குத்ஸ்’ நமக்குத் துணை புரிவாராக.''

ஷாம்பலஸ்தீன் கடிதம்

“முஸ்லிம்களின் மனம் யூதக்கொள்கையின் பக்கம் கவர்ச்சி கொண்டதாக இல்லை. முஸ்லிம்கள் ஷிர்க் என்று கூக்குரலிடுபவர்களாக இருப்பதால் திரித்துவக்கொள்கை மீது நாம் அதிக வற்புறுத்துதல் செய்யமுடியாதிருக்கிறது. என்றுலும் தாங்கள் நிம்மதியுடனிருங்கள்! பேருத் யூனிவர்ஸிட்டியில் உயர்தர கல்வி பயின்று தேர்ச்சி பெற்றிருக்கும் சில முஸ்லிம் வாலிபர்கள் உயர்தர கல்விக்காக லண்டன்மா நகர் வருவதற்கு விருப்பமுடையவர்களாக

இருக்கின்றார்கள். அவர்களுடைய முழுசெலவு களுக்கும் நாங்களே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அங்கு வந்து தங்களுடன் கூடிப்பழகுவதற்குள்ள சந்தர்ப்பமேற்பட்டுப் போமாயின் நம்முடைய கோரிக்கை நிறைவேறுவதற்குள்ள இடம் பாடிருக்கிறது''

ஹபஷா கடிதம்

"தூய்மை பொருந்திய கன்னியழியா மாதர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள். இன்னும் ஒரு டஜன் அழகிய சிறுமிகளை அனுப்பி வையுங்கள்! இத்தடவை தாங்கள் அனுப்பியவர்களெல்லாம் நல்லொழுக்க முடையவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் ஹபஷாவிலுள்ள முஸ்லிம்களை வசப்படுத்தும் சக்தி அமையப்பெற்றவர்களாக இருக்கின்றார்கள். நேற்று நடைபெற்ற நடனக் கச்சேரியினால் பெரிய ஜெய மேற்பட்டது. இதனால் சீர்திருத்தக் கொள்கைகளையுடைய இரு முஸ்லிம் வாலிபர்கள் தங்கள் மார்க்கத்தை மாற்றிக்கொள்ள ஆயுத்தமாகி விட்டார்கள். ஆனால் சமய சந்தர்ப்பத்தை யுன்னி நாம் அவர்களைத் தடுத்துவைத்திருக்கிறோம். இவர்கள் கூடிய சீக்கிரத்தில் அநேகரைச் சேர்த்துக் கொண்டு கிறிஸ்துவமார்க்கத்தில் சேர்ந்து விடுவார்களென்னும் நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. நிர்வாண போட்டோக்களின் பார்சல் இதுவரை கிடைக்கவில்லை''

இந்தியாக் கடிதம்

"தீண்டாதார் தினேதினே நம்மாக்கத்தில் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொரு வீட்டிற்கும் மாதச் செலவை மட்டிட்டு ஒரு குறிப்பிட்ட ரூபாய் கொடுத்து வருகிறோம். சில முஸ்லிம் பிரசாரகர்களும் அவ்விடங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து வருகிறார்கள். தாழ்ந்த ஜாதி ஹிந்துக்களிலனேகர் அவர்கள்பக்கல் நோக்கமுடையவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவுக்காக பணத்தேவை பிரதானமாகும். இதுவரை இஸ்லாமிய பிரசாரத்தின் பிரயோசனம் காணப்பட்டு வருகிறதாயினும் நாம் அதனை ஒழிப்பதற்காக முயற்சித்து வருகிறோமாதலால் கடைசியில் ஜெயம் நம்பக்கமே ஏற்படும். இரு முஸ்லிம்களுக்கு சிக்ரெட் கம்பெனியில் தக்கசம்பளமேற்படுத்தி வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறது. அவ்விருவரும் ஓய்வுநேரங்களில் நம்மிடமே வந்திருக்கிறார்கள். இனி மெள்ளமெள்ள நமது வழிக்கு வந்துவிடுவார்கள். அமெரிக்காவிலிருந்து நம்முடைய கடிதத்திற்கு யாதொரு பதிலும் வராதிருக்கிறது. பாடசாலை, வணக்க ஸ்தலம் இவைகள் கட்ட வேண்டியது மிகமிக அவசியமாயிருப்பதால் அமெரிக்காவுக்கு சற்று கண்டித் தெழுதுங்கள். தங்கள் எழுத்துப்போல் ஜில்லா கலக்டரை பல தடவை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவர் ரொம்ப நல்ல மனிதர். அவர் நமக்கு உதவிசெய்வதி லீடுபடாதுபோனாலும் எவ்வித கெடுதியும் செய்யமாட்டார்.''

நமது ஷாஹிது இக்கடிதங்களை வாசித்துப் பார்த்தபின் கோபாக்கினி ததும்பியவனாய் பல தடவை ஆங்காரத்தோடு மேஜையின்மீது அடித்துவிட்டு அக்கடிதங்களையெல்லாம் பண்டலத்தின் ஜேபில்வைத்துக்கொண்டு மறுபடியும் அப்பெட்டியை துருவ ஆரம்பித்தான். பல போட்டோக்கள் பேப்பர் 'கட்டிங்' களுக்குக் கீழ் ஒரு கடிதம் கிடைத்தது. அது லண்டனிலிருந்தே அப்பாதிரி பெயருக்கு வந்ததாகும் அதில் குறிப்பிட்டிருந்ததாவது :—

"ஷாஹித்'' அநேகமாய் மஸீஹிய்யத்தின் பக்கல் திரும்பிவிட்டான் என்னும் நற்செய்தி தெரிந்து மனதிற்கு பெரும் சந்தோஷமேற்பட்டிருக்கிறது. மிஸ் பீரட் அவனை அநேகமாய் வசப்படுத்திவிட்டாள். இதுபொழுது சர்ச்சைத்தவிர வேறு எங்கும் இருவருக்கிடையே சந்திப்பு ஏற்படாதவிதமாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷாஹிதுக்கு இந்தியாவிலுள்ள ஏதாகிலுமொரு கலாசாலையிலோ அல்லது தொழிற்சாலையிலோ தக்க சம்பளத்தில் ஒரு உத்தியோகம் ஏற்படுத்தி விடுவோமாகில் ஷாஹிது நம்முடைய ஷாஹிதாகவே ஆய்விடுவான். பிறகு இந்தியாவில் நமக்கு அவனால் அநேக பயன்களுண்டாகும். அவனுடைய விவாக விஷயமோ நெருக்கடியான நிலைமைக்கு வந்துவிட்டது. மிஸ் பீரட் பெரிய காதலிபோல் நடித்த இரகசியம் தங்களுக்குத் தெரியுமாதலால் அவள் ஒருக்காலும் விவாகத்துக்குச் சம்மதிக்கமாட்டாளென்பது திண்ணம். தவிரவும், அவளைக்கொண்டு பல காரியங்களும் ஏற்படவேண்டியதாக இருக்கிறது. இதுபொழுது எங்களுடைய வீடு பழுதுபார்க்கப்படுவதால் ஷாஹிது ஹோட்டலில் தங்கியிருக்கிறான்.''

இக்கடிதத்தைக் கண்ணுற்ற ஷாஹிதின் கோபாக்கினி சுடர்விட்டெறிய ஆரம்பித்து அதன் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டது. அதுபொழுது பாதிரி அங்கிருப்பாராகில் அல்லது துர்அதிர்ஷ்டவசத்தால் அங்கு வந்திருப்பாராகில் இன்னதுதான் நடக்குமென்பது நமக்குத் தெரியாது. உடனே அவன் அந்த அறையின் கதவை திறந்து அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வெளியில்வந்து விக்டோரியாவில் ஏறி ஹோட்டல் வந்து சேர்ந்தான். உடனே தனது சாமான்களை எல்லாம் கட்டி எடுத்துக்கொண்டு பொழுது அஸ்தமிப்பதற்குள் வேறு ஹோட்டலுக்குச் சென்றுவிட்டான். இதுபொழுது நமது ஷாஹிதின் நிலைமை நேர்மாற்றமாய் மாறுதலடைந்துவிட்டது. லண்டனின் சிறிய சிறிய வஸ்துக்கள் கூட அவனுக்கு கசப்பாகத் தெரிந்தது. எந்த அழகிய முகங்களைப்பார்ப்பது இவனது மனோ திருப்தியை அளிக்கக்கூடியதாக இருந்ததோ அந்த முகங்களைப்பார்ப்பது பெரும் வெறுப்பாகிவிட்டது. இந்நிலைமையில் வேறு ஹோட்டலுக்குச் சென்ற ஷாஹிது குளித்துவிட்டு கதவை தாளிட்டவனாய் இஷாத்தொழுகையை நிறைவேற்ற 'அல்லாஹ் அக்பர்' என்று தக்பீர் கட்டியவுடன் அவனுடைய ஒவ்வொரு உறுப்பும் நடுக்கத்தில் வந்துவிட்டது. இந்நிலைமையில் கிரஅத் ஓதி ஸஜ்தாவிற்கு வந்தவுடன் அவன் பெரிய ஆபத்திலகப்பட்டவன் போலாகி தொழுகை விரிப்பின் ஒருபாகம்கண்ணீரால் நனைந்துவிட்டது. இவ்வாறு தொழுகையை முடித்துக்கொண்டு அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பயபக்தியோடு துஆகேட்டவனாய் தலையை சஜ்தாவில் வைப்பதும் எடுப்பதுமாக இருந்து அப்படியே தூங்கிவிட்டான். பிறகு அதிகாலையிலெழுந்து லண்டன் பட்டணத்தைவிட்டு நேராக இட்டேலி போய்ச் சேர்ந்து ஸயின்ஸின் வேறு சில கலைகளை ஆராய்ச்சிசெய்வதிலீடுபட்டான். அதுபொழுது நண்பர் நஸீமுக்கு ஒரு நிருபம் விடுத்தான். அது வருமாறு :—

"அன்புள்ள நஸீம்! அஸ்ஸலாமு அலைக்கும். என்னுடைய முந்தியகடிதம் உம்மை எவ்வளவு தூரம் கவலைக்குள்ளாக்கி வைத்திருக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஏமாற்றம், மோசம் பண்ணுதல் என்னும் திரை என் முகத்தில் போடப்பட்டிருந்தது. அது இதுபொழுது எடுபட்டு யான் உண்மை விஷயங்களை நன்கு தெரிந்துகொண்டேன். என் விஷயமாய் லண்டனில் யாது நடைபெற்றது; எவ்வாறு யான் ஏமாற்றமடைந்தேன்; என் அறிவு ஆற்றலை எவ்வாறான போர்வையைக் கொண்டு மறைக்கப்பட்டது; என் மார்க்க பக்தி, ஈமான் உறுதி இவைகள் மீது முத்திரை யிடுவதற்கு எவ்வாறான ஆலோசனை புரியப்பட்டது என்பவைகளைப்பற்றிய விபரங்களைத் தெரிவிக்க வேண்டியது ஆவசியமாக இருக்கிறது. ஆனால் சந்திப்பு ஏற்பட்டவுடன் அவைகளை விப்ரிப்பேன். யான் கால் சறுகி வழிகேடு என்னும் படுகுழியில் விழுந்து இதுபொழுதுதான் அதிலிருந்து வெளியில் வந்திருக்கிறேன். நண்பர் நஸீமே! நம்முடைய எஜமானரான உலகரக்ஷகர் முஹம்மது நபீ (ஸல்.) அவர்கள்மீது கூறப்பட்டுவந்த அபவாதங்களைச் செவியுற்ற மாத்திரத்திலே எனக்கு ஒருவிதமான நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இப்பாவியாகிய அடிமையின் குற்றத்தை அல்லாஹ் தஆலா மன்னித்தருள்வானாக.

யான் உம்மை லண்டனுக்கு வரும்படி எழுதியிருந்த வார்த்தைகளை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறேன். ஆகவே, இவ்விடம் வர வேண்டுமென்னும் எண்ணத்தை அல்லாஹ்வுக்காக மாற்றிக்கொள்ளவும். இவ்விடத்திய சீர்திருத்த ஒழுக்கமுடைய வாழ்க்கையைப் பார்க்கினும் இந்தியாவினுடைய மிருக வாழ்க்கை மிகமிக மேலானதாகும். இவ்விடத்திய சீர்திருத்தம், நல்லொழுக்கம் என்னும் புஷ்பங்களில் மனிதனை சின்னபின்னப்படுத்தக்கூடிய விஷத்தையுடைய நாகப்பாம்பு சுருட்டிக் கொண்டிருக்கிறது. இவ்விடத்திய ஹோட்டல்கள் பாவம் அநீதிகளின் பிறப்பிடமாக இருக்கிறது. இவ்விடம் வருவது கொண்டு தேகம் சிங்காரிக்கப்பட்டுப் போய்விடினும் ஆத்மா உயிரற்றதாய்ப் போய்விடுகிறது. யான் சமீபத்தில் இந்தியா வருவதற்குத் தயாராகி இருப்பதால் விஷயங்களை விபரிக்கவில்லை. நேரில் பேசிக் கொள்ளலாம். தந்தியை எதிர்பாரும். உம்முடைய நண்பன் ஷாஹித்.

ஷாஹிது இட்டேலியில் வெகு ஜாக்கிரதையாக காலங்கழித்து வருவதற்கிடையே மார்க்க கிரந்தங்களைப் பார்த்துவந்து அங்குள்ள பரீக்ஷையையும் முடித்துக்கொண்டு இந்தியாவை நோக்கி பிரயாணித்துவிட்டான். மெயில் கப்பல் பம்பாய் துறைமுகம் வந்துசேரும் தேதியைக் குறிப்பிட்டு தனது தந்தைக்கும் மற்றும்

நண்பர்களுக்கும் முற்கூட்டியே தெரிவித்து விட்டானுகையால் அவனுடைய தந்தையாகிய ஷேக் அப்துஸ்ஸமத் சுகவீனமாக இருந்ததால் பம்பாய் வரமுடியவில்லை. ஷாஹிதின் மாமாவும் இதர பந்துக்களும் வந்திருந்தனர். நஸீமோ நண்பரை வரவேற்பதற்காக பல தினங்களுக்கு முன்பே பம்பாய் வந்திருந்தான். வெகு தூரம் எதிர்பார்த்ததற்குப் பின் கப்பல் துறைமுகத்தை யடைந்து ஷாஹித் அதிவேகமாய் கீழே இறங்கி எல்லோரையும் கட்டித் தழுவிக்கொண்டான். அதுபொழுது நமது ஷாஹித் நாணத்தால் தலைகுனிந்தவன்போல் காணப்பட்டான். நஸீம் இதனைக்கண்டு மனம் பூறிப்படைந்துகொண்டே இருந்து கடைசியாக ஷாஹிதின் கையை நெறித்து சகல புகழும் அல்லாவுக்காகவே இருக்கும் என்று கூறி "இடையில் கெடுதியிற் சென்ற மனிதன் நல் வழிக்கு வந்து விட்டான்" என்னும் கருத்தமைந்துள்ள ஒரு வாக்கியத்தை படித்தான். இதனை செவியுற்ற நமது ஷாஹிது புன்சிரிப்புக்கொண்டவனுய் தலையை கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

பர்தா ஸ்திரீகளின் ஆபரணம்.

அந்தகாரம் குடிகொண்டு அறியாமை மிகைத்து அநீதி தாண்டவமாடிக் கொண்டிருந்தகாலை ஸ்திரீகளுக்கு மனித வர்க்கத்தில் எவ்வித விசேஷ அந்தஸ்துமில்லாது மிருகங்களென்ன அதைவிட கேவலமாக மதிக்கப்பட்டு வந்தார்கள். ஸ்திரீகளுக்குள்ள சகல உரிமைகளையும் ஆடவர்கள் அபகரித்துக் கொண்டதன் பயனுக ஸ்திரீகள் ஒரு சிறிய துரும்பாகக் கூட மதிக்கப்படாத நிலைமையிலிருந்தார்கள். அவர்களை ஆண்கள் எவ்வாறு உபயோகித்துக் கொள்ள நாடுகின்றூர்களோ அதைத் தடுப்பதற்குள்ள எவ்வித நிலைமையும் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. இஃதென்ன? அக்காலத்தில் விவாகம் செய்வதற்கென்று எவ்வித பிரத்தியேக சட்டமுமிருக்கவில்லை. விவாக விலக்கு, விவாகப் பிரிவினை விவாகப்பந்தம் ஆகியவைகளைப்பற்றிய பெயர் நாமத்தைக்கூட யாரும் கேள்விப்பட்டது கிடையாது. ஆனல் வழியில் சென்று கொண்டிருக்கும் ஸ்திரீயின்மீது சிவப் புத்துணியைப் போட்டுவிடுவது ஒன்றுமட்டிலுமே உடனே அவள் அவனது மனைவியாய் விடுவதற்குப் போதுமானதாக இருந்தது. ஸ்திரீகளை விற்பனை செய்வது சர்வசாதாரணமான விஷயமாதலால் மனைவியர்களாக இருக்கும் ஸ்திரீகள்கூட விற்பனை செய்யப்பட்டுக்கொண்டிருந்தனர். ஐரோப்பாவில் நேற்றுவரை ஸ்திரீகள் விற்பனை செய்யப்பட்டு வந்தார்களென்பதை கேள்விப்பட்டு நீங்கள் ஆச்சரியமடையலாம். அங்குள்ள சிலர் ஒரு டம்ளர் சாராயத்துக்காகத் தங்கள் மனைவியரை விற்பனை செய்து கொண்டிருந்தனர். இதுவன்றி ஸ்திரீகளை அடகு வைப்பதுகூட அவர்களில் பொதுவான வழக்கமாக இருந்துவந்தது. ஆகவே ஸ்திரீகளுக்கு எவ்விதமான விசேஷ அந்தஸ்தும் மரியாதையுமிருந்ததில்லை; அவர்கள் ஆடவர்களின் சொத்துக்களாக இருந்தனர். அச்சொத்தை அந்த ஆடவர்கள் தங்களுக்கு தேவையான முறையில் எவ்வாறு வேண்டுமானுலும் உபயோகித்துக்கொள்ளலாம்.

உலகம் இவ்வாறு சீர்கேடான நிலைமையை அடைந்து அதிக்கிரமம் அதிகரித்திருந்தகாலை இறைவன் நபிய்யகரீம் உலகரட்சகர் பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களை இவ்வுலகின்கண்ணே அனுப்பிவைத்தான். அவர்கள், ஸ்திரீகள் கௌரவிக்கத்தக்க ஒரு பொருள். என்றும், ஷரீஅத்தில் அவர்கள் அந்தஸ்துடையவர்களாக இருக்கின்றூர்களென்றும் உலகத்தாருக்கு அறிவித்து, மனிதருக்கு அளிக்கப்பெற்ற பாக்கியங்களில் நன்மனையாட்டியாக அமைவது பெரும் பாக்கியமாகுமென்று கூறியுள்ளார்கள். ஆகவே ஸ்திரீக்கு மனச்சாந்தியளிப்பவளென்னும் சிறப்புப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறுன சிறப்புப்பெயர் கொண்டழைக்கப்படும் ஸ்திரீகளின் தவறுகளை மன்னிக்குமாறும் அவள்பால் கருணை காட்டுமாறும் இஸ்லாம் மார்க்கம் கூற முற்பட்டு அவர்களுக்குள்ள பாத்தியதைகளை விளக்கியும், வாரிசுரிமை பாத்தியதையில் ஸ்திரீகளுக்

குள்ள பாத்தியதைக் குறித்தும் தெரிவித்துளது.

மேலும் நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஸ்திரீகள் சம்பந்தமாய் "நீங்கள் அவர்களுக்குத் தொந்தரை கொடுக்காதிர்கள்; அவர்களை நல்லவிதமாய் நடத்துங்கள்; தங்கள் குடும்பத்தாருடன் நல்லவிதமாக நடந்துகொள்பவன்தான் மானிடர்களில் சிறந்தவன் எனவும் அறிக்கை செய்திருக்கிறார்கள். அத்துடன் வீட்டு வேலைகள் சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் ஸ்திரீகள் செய்ய வேண்டுமென்று ஆடவர் கருதி சகல பளுவையும் அவர்கள் தலையில் போட்டுவிடக்கூடாதென்பதற்காகவும், வீட்டுக்காரியங்களில் அவர்களுக்கு ஆடவர்களும் உதவி செய்யவேண்டுமென்பதற்காகவும் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் வீட்டுக் காரியங்களை தாங்களே செய்து செய்முறையில் காட்டியுமிருக்கிறார்கள். இவ்வாறு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் பெண்களின் அந்தஸ்து விஷயமாய்க் கூறி மக்கள் பெண்களை மகிமையோடு கொண்டாடுவதற்கு அடிகோலியுள்ளார்கள்.

ஸ்திரீகளின் சுபாவம்.

அவர்கள் இயற்கையிலேயே நாணமுள்ளவர்களாதலின் அவர்கள் ஆடவர்களைவிட்டு விலகியே இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் இவ்வாறு நாணமுள்ளவர்களாக இருப்பது ஒன்றே அவர்கள் பர்தாவிலிருக்க வேண்டுமென்பதை அறிவித்துக் கொண்டிருக்கிறது. அறியாமை காலத்திலுங்கூட அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் கடைவீதிகளுக்குச் சென்று ஆடவர்களுடன் சம்பாஷணை செய்யும் விஷயத்தில் அவர்களுடைய நாணம் அவர்களுக்கு தடையாக இருந்துகொண்டிருந்தது. ஆனால் நபிகள் பெருமானார். (ஸல்.) அவர்கள், ஸ்திரீகள் பர்தாவில் இருக்கத் தகுந்தவர்களென்று தெளிவாக அறிக்கை செய்து "அவர்கள் வீட்டை விட்டு வெளியேறினால் ஷைத்தான் அவர்களைப் பின்றொடருகிறான்" என்றும், கூறியிருக்கிறார்கள். திருக்குர்ஆனோ "அறியாமை காலத்தில் இருந்ததுபோல் வெளியேறிக்கொண்டிருக்காதீர்கள்" என்று கூறிக்கொண்டிருக்கிறது.

எனவே இஸ்லாம் மதம் ஸ்திரீகளின் உரிமைகளை கௌரமாகவும், கண்ணியமாகவும் ஒப்புக்கொண்டிருப்பதுபோல் "அவர்கள் (ஸ்திரீகள்) பர்தாவிலிருக்க வேண்டும், அவர்கள் தங்கள் வீட்டின் மஹல்லுக்குள்ளிருக்க வேண்டும், அவசியமின்றி அன்னிய ஆடவருடன் சம்பாஷணை புரியக்கூடாது" என்னும் உரிமையையும் இஸ்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்கு மாற்றமாய் பர்தாவை அனுஷ்டிக்காதிருப்பது கொண்டும், ஸ்திரீகள் அன்னிய ஆடவர்களுடன் கலந்துறவாடுவது கொண்டும் மேனாட்டில் பஹிரங்கமாகவும் நம் நாட்டில் மறைமுகமாகவும் எத்தனை கெடுதிகள் சம்பவிக்கிறதென்பது யாருக்குத்தான் தெரியாதிருக்கிறது? இக்கெடுதிகள் ஏற்படுவதற்கு ஆண்கள் பெண்களைப்பார்ப்பதும், பெண்கள் அன்னிய புருடர்களுடன் கலந்துறவாடுவதும் தான் காரணமாகுமென்பது வெளிப்படை. ஆகவே, பெண்களுக்கு அவர்களின் கற்பைக் காப்பாற்ற பர்தா ஆபரணமாக இருக்கிறதென்பதை நன்குதெரிந்து கொள்ளுகிறோம்.

பர்தாவை எதிர்ப்பது எதற்கு?

இன்று பெண்களை வெளியில் கொண்டுவந்து விட வேண்டுமென்னும் நோக்கங்கொண்டு பர்தாவை எதிர்த்துப் பிரசாரம் செய்பவர்கள் ஸ்திரீகளுக்குள்ள பாத்தியதைகளில் ஒரு பாத்தியதையை அபகரித்துக் கொள்பவர்கள் போன்று இருக்கிறார்கள். ஆகவே ஸ்திரீகளுக்குள்ள வாரிசு பாத்திய உரிமையை அளிக்க மறுக்கும் சில முஸ்லிம்களும் இந்தியாவிலிருக்கிறார்களென்று நன்கு தெரியவருகிறது. வாரிசு பாத்தியதையை அளிக்க மறுப்பவர்களை நாம் அபகரிப்பவர்களாகவும் அநியாயக்காரர்களாகவும் கருதுவதுபோல ஸ்திரீகளின் பர்தா உரிமையை அபகரிக்க விரும்புபவர்களும் அனியாயகாரர்களாகவே இருக்கிறார்கள் என்று கருதுகிறோம்.

இஸ்லாம் அளித்த உரிமை

அறியாமை காலத்தில் அந்தகாரம் சூழ்ந்திருந்த ஜனங்கள் ஸ்திரீகளின் இவ்வுரிமையை அபகரித்திருந்தார்கள். ஆனால் அல்லாஹ்த ஆலாவின் தூதர் இவ்வுரிமையை மக்கள் அடையும்படி செய்தார்கள். பெருமானார் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்களால் கிடைக்கப்பெற்ற இவ்வுரிமையை அபகரிக்க முஸ்லிம்களாக உள்ள எவரும் முயற்சிப்பாரென எதிர்பார்ப்பதற்கில்லை. இஸ்லாத்திற்கு முன் ஸ்திரீகள் பர்தா

இல்லாமல் கடைவீதிகளில் திரிந்துகொண் டிருந்தனர். இஸ்லாமோ அவர்களுக்கு பர்தா உரிமையை அளித்திருக்கிறது. ஆகவே, முஸ் லிம் ஸ்திரீகளுக் களிக்கப்பெற்ற பர்தா உரிமையில் எதற்காக நாம் வீணே தலை யிடவேண்டும்? அவர்களுக்கு பர்தா விசே ஷித்த கண்ணியத்தை அளிப்பதாகவும் முஸ் லிம் ஸ்திரீக்கும் முஸ்லிமல்லாத ஸ்திரீக்கும் வித்தியாசப்படுத்திக் காண்பிப்பதாகவும் இருப் பதால் நாம் எதற்காக அதில் குறுக்கிட்டு குயுக்தி குதர்க்க விவாதஞ் செய்யவேண்டும்? இன்று அந்த பழைய ஐரோப்பா மறுபடியும் உயிர்பெற்று வருமாயின் ஸ்திரீகளுக்கு இஸ் லாம் அளித்துள்ள கண்ணியத்தையும் உரிமை களையும் அளிக்க ஒருபோதும் சம்மதிக்காது. இஸ்லாம் ஸ்திரீகளை ஸ்திரீகளாகவே வைத் திருக்கிறது. ஸ்திரீகளுக்குள்ள பெண்தன் மையை இஸ்லாம் சகலகாரியத்திலும் கவ னித்து ஸ்திரீகளுக்கு உரிமைகள் அளிப்ப தாக கருதி அவர்களுக்கு அவ்வுரிமையை அளித்துளது. ஸ்திரீகள் நாணம் வெட்கம் அன்பு ஆகியவைகளே உருவாகத் தோன்றிய வர்களென்று இஸ்லாம் கருதியிருக்கிறது. இஸ் லாம் ஸ்திரீகளை பலஹீனவர்க்கமென்று கருதி ஆடவர்களின் வாழ்க்கைத் துணைவிகளாக ஏற் படுத்தியிருக்கிறது. ஸ்திரீகள் ஆடவர்கட்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும் என்ற பொறுப்பு ஒன்றை மட்டிலும் இஸ்லாம் ஏற்படுத்திவிட்டு அவர்களுக்கு சகல உரிமைகளையும் அளித்திருக் கிறது. ஸ்திரீகள் சுவர்க்கம் புகவிரும்புவார்க ளாயின் ஆடவர்களுடன் திருப்தியான முறை யில் நடந்துகொள்ள வேண்டுமென்று இஸ்லாம் கூறுகிறது. இதைத் தவிர ஸ்திரீகளுக்கு வேறு என்ன பொறுப்பிருக்கிறது? பாக்கி யுள்ள பொறுப்புகளனைத்தும் ஆடவர்கள்மீதே சுமத்தப்பட்டிருக்கின்றன. இஸ்லாம் ஸ்திரீ களை மானங்கெட்டவர்களாக வாழும்படிசெய்ய வில்லை; திருவிழாக்காலங்களில் அலங்கரிக்கப் படும் ஒரு பொருளாக ஏற்படுத்தவில்லை. தனது மனப்பூர்வமாக தனக்குக் கணவனாக ஒப்புக் கொண்ட ஆடவர்களின் மனத்தைத் திருப்தி செய்வதற்காகவும், அவர்களுக்குச் சாந்தியளிப் பதற்காகவும் ஸ்திரீகள் சிருஷ்டிக்கப்பட்டிருக் கிறார்கள். சபைகளில் நிர்வாணமாக நின்று தன் நடத்தையின் திறமையைக் காண்பிப்பதற் காகவும் பல ஆடவர்களின் தோள்களில் கையைப் போட்டுக்கொண்டு நடனம் புரிவ தற்காகவும் அவர்கள் சிருஷ்டிக்கப்படவில்லை. அவள் ஒரு ஆடவனுக்காக மட்டிலும்தானிருக் கிறாள். அதுவும்அவளைத் தனது மனைவி என்று எவன் ஒப்புக்கொண்டிருக்கிறாரோ அவனுக்கு மட்டிலும் தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள். ஆகவே உங்கள் மனைவிகள் உங்களுக்காகத்தா னிருக்கிறார்கள். அவர்கள் உங்கள் நண்பர் களுக்காக சிருஷ்டிக்கப்பட்டவர்களன்று. ஸ்திரீ சமையல் பாத்திரமல்ல ஒவ்வொருவரும் கைபோட்டு உப்புபார்க்க. ஆகவே, தற்போது ஸ்திரீகளை விளையாட்டுக்கருவியாக ஆக்கி இருக் கிற இம்முறை இயற்கையானதன்று. இஸ் லாம் இதனை அங்கீகரிக்கவுமில்லை. பெருந் தன்மை வாய்ந்தவர்கள் இதனைச் சகித்துக் கொண்டிருக்கவு மாட்டார்கள். இக்காரியங்கள் நீண்ட நாட்களுக்கு நிலைக்கக்கூடியனவுமன்று.

ஸ்திரீகளுக்கு இஸ்லாமிய சட்டங்களில் எவ் வித கண்ணியமும் அளிக்கப்படவில்லை என்று ஐரோப்பா கூறிவருகிறது. ஆனால் சன்மார்க் கத்தூதர் (ஸல்.) அவர்களோ தங்களுக்குப் பிரியமான வஸ்துக்களில் ஸ்திரீகளையும் ஒன் றாகச் சேர்த்துக் கூறியிருக்கிறார்கள். இதனைப் பார்க்கினும் ஸ்திரீகளுக்கு வேறு என்ன கண் ணியம் வேண்டும்? நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு கூறியபின் இஸ்லாம் ஸ்திரீ களுக்கு எவ்வித கண்ணியமும் அளிக்கவில்லை என்று சொல்ல முடியுமா?

ஆகவே, பெண்கள் பர்தா முறையை அனுஷ் டிப்பது தங்கள் உரிமையை அனுபவிப்பதாகு மென்றும், பர்தா அனுஷ்டான முறையைக் குலைக்க முற்படுவோர் அவர்களது உரிமைகளை அபகரிக்க முற்படுவோரென்றும், பர்தா பெண் களின் ஆபரணமும் அவர்களின் மானத்தைக் காப்பாற்றும் அரும் சஞ்சீவியாகுமென்றும் தக்க முறையில் தெரிந்து கொள்ளுகிறோம். குதர்க்க வாதிகள், தங்கள் குதர்க்க குயுக்தி வாதங்களைவிட்டொழித்து நேரான பாதையில் சீராகச் செல்லுவார்களாக.

உத்தமர்களின் உன்னத வாழ்க்கை

ஹஸ்ரத் மஅரூப கர்கீ (ரஹ்.)

ஒரு நாள் ஹஸ்ரத் மஅரூபகர்கீ (ரஹ்.) அவர்களின் ஒளு முறிந்துவிட்டது. உடனே ஹஸ்ரத் அவர்கள் 'தயம்மம்' செய்துகொண்டார்கள். இதனைக் கண்ணுற்றோர், தஜ்லா நதி சமீபத்திலிருக்கும்போது ஒளுச்செய்துகொள்ளாமல் எதற்காகத் தயம்மம் செய்துகொள்ள வேண்டுமென்று வினவினர். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், "யான் தஜ்லா நதிவரை செல்வதற்குள் என் ஆவி பிரிந்துவிட்டால் என்ன செய்வதென்னும் பயத்தால் இவ்வாறு செய்துகொண்டேனென அறிவித்தார்கள்.

ஒருநாள் ஹஸ்ரத் அவர்கட்கு நல்ல திவ்விய மான சாப்பாடு வைக்கப்பட்டிருந்ததைக்கண்ட ஒருவர், ஹஸ்ரத் அவர்களிடம், தாங்கள் என்ன சாப்பிடுகிறீர்களென வினவினர். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், 'யான் விருந்தாளியாக இருப்பதால் எனக்கு எதைக் கொடுக்கப்படுகிறதோ அதைச் சாப்பிடுகிறேன்' என அறிவித்தார்கள். அதாவது, மானிடன் இவ்வுலகில் விருந்தாளியாகத் தான் தங்கியிருக்கிறான் என்பதை விளக்கினார்கள்.

ஹஸ்ரத் அவர்கள்,ஒருநாள் தொழுகை நிறைவேற்றும் 'முஸல்லா', குர்ஆன் ஷரீப் இவைகளை ஓர் இடத்தில் வைத்துவிட்டு ஆற்றுக்குச் சென்றிருந்தார்கள். அங்கிருந்து திரும்பிவருங்கால் ஓர் விர்த்தாப்பிய மாது அவ்விரண்டையும் எடுத்துச் செல்வதைப்பார்த்த ஹஸ்ரத் அவர்கள்,அவள் பின்தொடர்ந்துசென்று அவள் திரும்பிப் பார்த்தபோது, 'மாதே! குர்ஆன் ஓதக்கூடிய பிள்ளைகள் உம்மிடமிருக்குறார்களாவென வினவினார்கள்.அதற்கு அம்மாது இல்லையென பதிலளித்தாள். நல்லது, முஸல்லாவை எடுத்துக்கொண்டு குர்ஆன் ஷரீபை என்னிடம் கொடுத்துவிடும் என அறிவித்தார்கள். ஹஸ்ரத் அவர்களின் மன்னிக்குந்தன்மையையும், பொறுமையையும் கண்ட அம்மாது, தடுமாறி ஆச்சரியமடைந்து அவ்விரு வஸ்துக்களையும் ஹஸ்ரத் அவர்களிடம் திரும்பக் கொடுக்க முற்பட்டாள். ஆனல் ஹஸ்ரத் அவர்கள் முஸல்லாவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியதைக்கண்ட அம்மாது வெட்கமுற்றவளாய் அவைகளை வைத்துவிட்டு ஓடிவிட்டாள். என்னே ஹஸ்ரத் அவர்களின் தயாள குணம், பொறுமை இருந்தவாறு?

ஹஸ்ரத் யஹ்யா முஆது (ரஹ்.)

ஹஸ்ரத் யஹ்யாமுஆது ராஜீ (ரஹ்.) அவர்களின் சோதிரரொருவர் மக்கா முஅல்லமாவில் வாசஞ் செய்வதை குறிப்பிட்டுக்கொண்டார். ஒரு தடவை அவர் ஹஸ்ரத் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அதில், "என் மனதில் மூன்று வித அபிலாசைகள் இருந்துகொண்டிருந்ததில் இரண்டு பூர்த்தியடைந்து விட்டது; ஒன்று மீதமிருக்கிறது; முந்திய விருப்பம்: யான் என் வாழ்க்கையின் கடைசி பாகத்தை தூய்மை பொருந்திய ஏதாகிலுமொரு இடத்தில் கழிக்க வேண்டுமென விருப்பங் கொண்டிருந்தேனுகையால் அல்லாஹ்வின் கிருபையால் எல்லா இடங்களைவிட தூய்மைபொருந்திய இடத்தை யான் தெரிந்துகொண்டேன். இரண்டாவது, எனக்கு ஒரு நல்ல வேலைக்காரன் கிடைக்கவேண்டும்; அவன் எனக்கு பணிவிடை செய்வதுடன் யான் ஒளுச்செய்வதற்காகத் தண்ணீர் தயார் செய்து கொடுக்க வேண்டுமென்று கருதியிருந்தேனுகையால் அல்லாஹ்வின் கிருபையால் எனக்கு இதுபொழுது சாலிஹான நன்னடைக்கையுள்ள ஒருவேலைக்காரி கிடைத்துவிட்டாள். மூன்றுவதாக யான் மரணமாவதற்குமுன் தங்களை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்னும் எண்ணம் மனதிலிருந்துகொண்டிருக்கிறது எனத் தெரிவித்திருந்தார். இக்கடிதத்திற்கு ஹஸ்ரத் அவர்கள் வரைந்தனுப்பிய பதில் வருமாறு :—" முதலாவதாக நீர் துப்பரவாக ஆய்விடுவதற்கு முயற்சி செய்துகொண்டு அதன்பின் எங்கு வேண்டுமானுலும் இருந்துகொள்ளும். வாசஞ்செய்பவர்களால்தான் வாசஸ்தலத்திற்கு மகிமை ஏற்படுகிறது. இடத்தினுல் வாசஞ்செய்பவனுக்கு மரியாதை ஏற்படுவ

தில்லை. இரண்டாவதாக, நீர் தைரியசாலியாகவும், வீரத்தனம் பொருந்திய ஆண் பிள்ளை சிங்கமாகவுமிருப்பீராகில் அல்லாஹ் தஆலாவின் ஓர் அடியானை வேலைக்காரனாக அமர்த்திக்கொண்டு அவன் அல்லாஹ் தஆலாவுக்கு அடிமைத்தனம் செய்து உமது பணிவிடையிலீடுபட்டிருக்கச் செய்யமாட்டீர். ஆகவே நீர் உலகில் ஊழியக்காரராக இருக்கவேண்டியதற்கு பதிலாக எஜமானாகவிருக்க விரும்புகிறீர். தொண்டுபுரிவது மானிடனது குணமும், எஜமானாக இருப்பது அல்லாஹ்வின் அந்தஸ்துமாக இருக்கிறது. ஆகவே, அடியான் அடிமைத்தனம் செய்கிறவனாகவே இருக்கவேண்டியது ஆவசியமாகும். அல்லாஹ்வுக்குரிய எஜமான் தனத்தின்மீது ஆசைவைக்கலாகாது. மூன்றாவதாக, நீர் அல்லாஹ் தஆலாவிடம் பூர்ணபற்றுடையவராக விருப்பீராகில் என் ஞாபகம் உமக்கேற்பட மாட்டாது. ஆகவே சகோதிர வாஞ்சையின் ஞாபகம் ஏற்படாதிருக்கும் விதமாக அல்லாஹ் தஆலாவின் தியானத்தி லீடுபட்டு விடுவீராக. அதன்பின் அருமைக் குழந்தைகளை அல்லாஹ்வின் பாதையில் தியாகஞ்செய்து விடுவது ஒருபொருட்டாக இல்லாதிருக்கும் நிலைமையில் சகோதிர வாஞ்சை எவ்வளவுதூரம்? ஆகவே அதனை ஒரு வஸ்துவாக மதிக்கலாமா?

ஹஸ்ரத் அபூஹப்ஸ் (ரஹ்.)

ஒரு தடவை ஹஸ்ரத் அபூஹப்ஸு (ரஹ்.) அவர்கள் ஹஸ்ரத் ஷிப்லீ (ரஹ்.) அவர்களின் விருந்தாளியாக நான்குமாதம் தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் ஷிப்லீ (ரஹ்.) அவர்கள் தக்க முறையில் உபசரணைசெய்து நல்லவிதமான சாப்பாட்டுடன் ஒவ்வொரு சாப்பாட்டிலும் பலவகையான பதார்த்தங்களும் மிட்டாய் தினிசுகளும் தயார்செய்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூஹப்ஸு (ரஹ்) அவர்கள் கடைசியாக விடைபெற்றுச் செல்லுங்கால் ஹஸ்ரத் ஷிப்லீ அவர்களை நோக்கி, நீங்கள் நேஷாபூரிலுள்ள என் வீட்டிற்கு வருவீர்களேல் விருந்து செய்யும் முறையையும் வீரத்தனத்தையும் அறிவித்துக்கொடுப்பேன் எனக் கூறினார்கள். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் ஷிப்லீ (ரஹ்.) அவர்கள் நடுக்கமுற்றவர்களாய் விருந்துபசரணை புரிவதில் தம்மால் எவ்வாறான குறைவு ஏற்பட்டுப்போயிற்று என வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூஹப்ஸு (ரஹ்.) அவர்கள், நீங்கள் எனக்கு உபசரணை புரிவதில் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டீர்கள்; அவ்வாறு பிரயாசை எடுத்துக்கொள்பவர் வீரியத்தனமுடையவராக இருக்கமுடியாது. விருந்தாளி வருவது கொண்டு மனச்சடவும், அவர் போய்விடுவது கொண்டு சந்தோஷமும் ஏற்படாத விதத்தில் விருந்துபசாரம் புரியவேண்டும். நீங்கள் உபசரணை புரிவதில் கஷ்டமெடுத்துக் கொள்வீர்களேல் விருந்தாளி வருவது பாரமாகவும் அவர்சென்று விடுவது கொண்டு சந்தோஷமும் தோன்றும். எவனுக்கு தம்மிடம் வரும் விருந்தாளியுடன் இவ்வாறான சம்பவம் நேரிடுகிறதோ அவன் வீரத்தனமுடையவனாக இருக்க முடியாது.

ஹஸ்ரத் ஜுனைத் (ரஹ்.)

ஒரு தடவை ஹஸ்ரத் ஜுனைத் (ரஹ்.) அவர்கள் காலில் வலி ஏற்பட்டதால் தாங்கள் 'பாத்திஹா' ஸூராவை ஓதி கால்மீது ஊதிக்கொண்டார்கள். உடனே "என்ன உமக்கு வெட்கமில்லையா, நம்முடைய திருவசனத்தை உமது நப்ஸ்" சுகப்பெறுவதற்காகவா செலவுசெய்து கொள்கிறீர்' என்ற சப்தமொன்று வெளியாயிற்று.

ஹஸ்ரத் அவர்கள் எழுமைத்தனத்தை ஆரம்பமாக ஓர் பரியாரியிடமிருந்து தாங்கள் கற்றுக்கொண்ட விதத்தை பின்வருமாறு கூறுகிறார்கள். அதாவது, "யான் மக்காமுஅல்லமாவில் இருக்குங்காலை என்கையில் ஒரு தம்படியு மில்லாதிருக்கும் நிலைமையில் ஒருவருக்கு வேலைசெய்துகொண்டிருந்த அம்பட்டனிடம் சென்று "அல்லாஹ்வுக்காக வேண்டிஎனக்கு வேலைசெய்யும்" என்று கேட்டுக்கொண்டேன். உடனே அவர் ஒப்புக்கொண்டார். அவர் இருகண்களிலிருந்தும் தண்ணீர் வடிய ஆரம்பித்து உடனே அவர் கவனித்துக் கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு என்பக்கல் நோக்கி என்னை உட்காரவைத்து தலையை முத்தியிட்டு எனக்கு வேலைசெய்து முடித்து சில நாணயங்கள் கொண்ட பையொன்றை என்னிடம் கொடுத்து என் தேவைக்கு அதனைச் செலவிட்டுக் கொள்ளுமாறு கூறினார். அதுபொழுது யான், எனக்கு ஆரம்பமாகக் கிடைக்கும் வருவாயை இந்த மனிதருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று உறுதிகொண்டேன். இதற்குச் சிறிது காலத்திற்கெல்லாம் பஸராவிலிருந்து தங்க நாணயம்

கொண்ட பையொன்று எனக்குவந்தது. உடனே அப்பையை எடுத்துக்கொண்டு அந்த அம்பட்டனிடஞ்சென்று நடைபெற்ற விஷயங்கள்யாவற்றையுங்கூறி அதனை அங்கீகரித்துக் கொள்ளுமாறு வேண்டினேன். உடனே அவர், "உமக்கு வெட்கமில்லையா? நீர் அல்லாஹ்வுக்காக வேலை செய்யவேண்டுமெனக் கூறிவிட்டு இப்பொழுது அதற்குக் கூலிகொடுக்கின்றீர்; யாராகினுமொருவன் அல்லாஹ்வுக்காக ஒரு காரியத்தைச் செய்துவிட்டு அதற்குப் பகரம்பெற்றுக் கொண்டதைப் பார்த்திருக்கிறீரா எனக் கேட்டார் என்பதே.

ஹஸ்ரத் அபூபக்ர்ஸித்தீக் (ரலி.)

ஹஸ்ரத் அவர்கள் இஸ்லாத்தைக் கொண்டு சிறப்பிக்கப்பட்டகாலை தங்களிடம் 40 ஆயிரம் தங்க நாணயங்களிருந்தன. இவைகள் ஹஸ்ரத் அவர்கள் செய்துவந்த ஜவுளி வர்த்தகத்தில் கிடைத்தவைகளாகும். தாங்கள் மதீனமாநகர் ஹிஜ்ரத் செல்லுங்காலை இவைகளில் 5 ஆயிரம் காசுகள்தான் மீதமிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் இவைகளைத் தவிர மீதமுள்ளவைகள் யாவற்றையும் ஏழை நவ்முஸ்லிம்களுக்கு உதவி செய்வதிலும் முஸ்லிமாகிய அடிமைகளை வாங்கி உரிமை விடுவதிலும் செலவு செய்திருக்கிறார்கள்.

ஹஸ்ரத் சுப்யானதவ்ரீ (ரஹ்.)

ஹஸ்ரத் அவர்கள் ஒருநாளன்று தங்கள் அயல்பாகக்காரரின் ஜனஸாத் தொழுகையை நிறைவேற்றுவதற்காகச் சென்றிருந்தார்கள். அதுபொழுது அங்கு கூடியிருந்தோர் யாவரும் மரணமடைந்தவரின் நற்குண நல்லொழுக்கங்களைப் போற்றிப்புகழ்ந்து ஒவ்வொருவரும் மரணமானவர் நல்லமனிதராக இருந்தார் என்று கூறிக்கொண்டிருந்தனர். அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள், எல்லோரும் இவரை இவ்வாறு புகழ்ந்துகொண்டிருப்பார்களென்று தெரிந்தால் ஒருக்காலும் அவருடைய ஜனஸாவிற்கு சமூகமளித்திருக்கமாட்டேன். ஏனெனில், மனிதன் மூனபிக்—உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவனாக—இல்லாதுபோனால் மனிதர் யாவரும் அவரைப் போற்றிப் புகழமாட்டார்கள் எனத் தெரிவித்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள், ஹஜ்ஜுதவறிப்போய் 'ஆஹ்' என்று கைசேதமடைந்துகொண்டிருக்கும் ஒரு வாலிபரை விளித்து, யான் நான்கு ஹஜ்ஜுகள் செய்திருக்கிறேனாகையால் அதனை உமக்குக் கொடுத்துவிடுகிறேன். அதற்குப் பகரமாய் இந்த "ஆஹ்" என்னும் கை சேதத்தை எனக்குக் கொடுத்துவிடும் எனக் கூறினார்கள். அந்த வாலிபர் அதற்குச் சம்மதமளித்தார். அன்றிரவு ஹஸ்ரத் அவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் போது, "நீர் பெற்றிருக்கும் வஸ்துவை அறபாவுடையவர்களில் பங்கிடப்படுமாகில் அவர்கள் யாவரும் சீமான்களாய் விடுவார்கள்" என தங்களிடம் சொல்லப்படுவதாய் கனவுகண்டார்கள்.

ஹஸ்ரத் அஹ்மதிப்னுஹம்பல் (ரஹ்.)

இமாம் அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் முபாரக் அவர்களைச்சந்திக்க வேண்டுமென்னும் பிரீதி அதிகரித்தவர்களாக இருந்தார்கள். இதற்குப் பல்லாண்டுகளுக்குப்பின் தற்செயலாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். உடனே இமாம் சாஹிப் அவர்களின் புதல்வர் இது செய்தியை தந்தைக்கு அறிவித்தார். தாங்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் வெகுகாலமாய் மிக்க விருப்பத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த காரியம் தானே வாசற்படியண்வட தற்செயலாக வந்தபொழுது எதற்காக அதனை தட்டுகின்றார்களென்னும் விஷயம் யாருக்குமே புலப்படவில்லை. அதுபொழுது ஹஸ்ரத் அவர்கள், "யான் மகான் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய சற்குணத்துக்கு வசப்பட்டுப் போனபின் பிரிவுதல் ஏற்பட்டுவிடுமாகில் அதனால் என்மனம் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிடும். இதற்காக யான் என்வாணுள் முழுதிலும் சந்திப்பை ஆதரவு வைத்துக்கொண்டிருந்து பிரிவுதல் ஏற்படாத உலகில் சந்திக்க வேண்டுமென்று நாடுகிறேன்" எனத் தெரிவித்தார்கள்.

ஹஸ்ரத் ஈசுப் அஸ்பாத் (ரஹ்)

ஹஸ்ரத் அவர்களுக்கு 70 ஆயிரம் தங்க நாணயம் அனந்தரவாரிஸ் பாத்தியதையில் கிடைத்தது. ஆனால் அதில் ஒருகாசுகூட, ஹஸ்ரத் அவர்கள் செலவிடாது ஈச்சம்பாய் நெய்து அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கால ஜீவனம் செய்து கொண்டிருந்தார்கள். இந்நிலைமையில் ஹஸ்ரத் அவர்கள் ஹுதைபா மர்அஷீ (ரஹ்) அவர்களுக்கு பின்

வருமாறு ஒரு கடிதம் அனுப்பினர்கள். அதாவது, "தாங்கள் இரண்டு காசுக்குப் பகரமாக உங்கள் தீனைவிற்றுவிட்டதாக யான் கேள்விப்படுகிறேன். அதாவது, தாங்கள் கடையில் ஏதோ சாமான் வாங்கிக்கொண்டிருக்கும்போது அந்த வியாபாரியிடம் சகாயந்தேடியதாகவும், அவன் உங்களுடைய சங்கை மரியாதை பேணுதல் தன்மை இவைகளைக் கண்டு அசல்விலையில் இரண்டு காசு கம்மிசெய்து விட்டதாகவும் கேள்விப்பட்டேன்'' என்பதே.

ஹஸ்ரத்அபூஉமர் (ரஹ்)

ஹஸ்ரத் அபூஉமர் (ரஹ்) அவர்கள் 40 வருடங்கள்வரை தங்கள்மீது நிகழ்பெறும் விஷயங்களைக்கொண்டு பொருத்தமாக யிருப்பதாயும் தங்களிஷ்டத்திற்கு அவைகளி லெதையும் மாற்றிக்கொள்வதற்கு முயற்சிப்பதில்லை யெனவும் பிரதிக்கினை செய்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு வெகு காலம் நடைபெற்றது. ஒரு தடவை தங்கள் அருவைப் புதல்வி நோய் வாய்ப்பட்டு சொஸ்த படைவதற்குள்ள யாதொரு மார்க்கமும் தென்படாதுபோயிற்று. அம்மாதின் கணவரான அப்துற்றஹ்மான் சல்மீ அவர்கள் தங்கள் மனைவியரை நோக்கி உம் தந்தை அவர்கள் சத்தியத்துக்கு மாற்றஞ் செய்வார்களாயின் உமக்கு சுவாத்திய மேற்பட்டுப்போய்விடும் எனக் கூறினர்கள். இதனைச் செவியுற்ற அம் மாதுசிரோன்மணி பேராச்சரியமடைந்து அதன் கருத்து யாதாகுமென வினவினள். ஹஸ்ரத் அப்துற்றஹமான் அவர்கள் முழுவிபரங்களையும் அறிவித்து உமது தந்தை தங்கள் அறுதிமானத்தை முறித்து அல்லாஹ் தஆலாவிடத்தில் சுவாத்தியத்திற்காக பிரார்த்தனைபுரிவார்களாயின் நீ சொஸ்தமடைந்துவிடுவாய், எனக்கூறினர்கள். வியாதியால் பீடிக்கப்பட்டு நம்பிக்கையற்றுப்போயிருக்கும் அம்மாது நடு இரவில் தன் அருமைத் தந்தையாரிடஞ் சென்று சுவாத்தியத்திற்கு பிரார்த்தனை புரியுமாறு வேண்டிக்கொண்டனர். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் யான் எனது அறுதிமானத்தை இருபது வருடங்கள்வரை நிறைவேற்றி வந்திருக்கிறேன். இதுபொழுது அதை முறிப்பதை யான் பாவமெனக் கருதுவதால் என்னை அப்பாவத்தில் அகப்படும்படி செய்யாதே. நீ இன்று வியாதியினின்று தப்பித்துக்கொள்வாயாயினும் சில காலத்திற்கு பின் மரணமடைவது நிச்சயம். மரணத்தை அனுபவிக்க வேண்டியவர்கள் மரணமடைந்து விடுவதுதான் சிறந்தது. தன் அருமை தந்தையின் நாவிலிருந்து வெளிவந்த இவ்வார்த்தைகளைச் செவியுற்ற அம்மாது "யான் சென்று வருகிறேன்; அநேகமாய் காலைவரை யான் உயிருடனிருப்பேன் என்னும் நம்பிக்கை எனக்கில்லை'' எனக் கூறிச் சென்றார். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் "யான் வந்து உமது ஜனஸாத் தொழுகையை நிறைவேற்றுகிறேன்'' என்று கூறினர்கள். அல்லாஹ் தஆலாவின் கிருபையைப் பாருங்கள்! அம்மாது அதிகாலையில் நல்ல சுவாத்தியத்துடன் எழுந்து அருமை தந்தை அவர்களின் மரணத்திற்குப்பின் 20 வருடங்கள்வரை ஜீவித்திருந்திருக்கிறார்.

உலக சம்பவ நிகழ்ச்சிகள்

110 வயது மாது.

அப்கனிஸ்தானிலுள்ள மியான் ஜோபீ என்னும் கிராமத்தில் ஒரு மாது இவ்வாண்டுடன் 110 வயதைப் பூர்த்தி செய்திருக்கின்றாள். அம்மாது இவ்விரித்தாப்பிய வயதோடு நல்ல சுகஜீவியாகவும் பலமுள்ளவளாகவும் கால் நடையாக தொலைதூரம் செய்வதற்குள்ள சக்தி பெற்றவளாகவுமிருக்கின்றாள். கண் பார்வை சரியான முறையிலிருந்து கொண்டிருப்பதால் கண்ணாடியின் உதவியின்றி குர்ஆன்ஷரீப் ஓதுவதிலும் வீட்டுக் காரியாதிகளை கவனிப்பதிலு மீடுபட்டுக்கொண்டிருக்கிறாள். அம்மாது தனது வாணாளில் கீரை பால் இவைகளைத்தான் மிகுதமாய் ஆகாரமாக உபயோகித்து வந்திருக்கிறாள். இதுபொழுதும் அவை இரண்டையும்தான் உபயோகித்து ஜீவித்து வருகின்றாள். அம்மாதின் 70 வயது புத்திரர் மட்டும் இப்பொழுது உயிருடனிருக்கிறார். 13 பேத்தி பேரன்கள் இருந்து அம்மா

துக்குத் தொண்டாற்றிக்கொண்டு வருகின்றனர்.

மனிதன் தண்ணீருக்கு மேல் நடக்க முடியும்?

பிரான்ஸ் தேசத்திலுள்ள ஓர் இன்ஜினீர், ஓர் கால் மேஜோடு கண்டுபிடித்திருக்கிறார். மனிதன் அதன் உதவிகொண்டு தண்ணீருக்குமேல் நின்றுகொண்டு எவ்வாறான காரியமும் செய்யலாமாம். எவ்வித உதவியுமின்றி தண்ணீரில் அதிக நேரம் நிற்கலாமாம். இம்மேஜோடு நீர்க்கோழியின் கால் வடிவத்தைப்போலிருக்கிறதாம். இது தண்ணீரில் நீந்தப் பழக முயற்சிப்போருக்கு பெரும் உபகாரமாக இருக்கும். இதனால் முக்கியப் பிரயோசனம் யாதெனில், இதனை உபயோகிப்பவன் தண்ணீரில் மூழ்கிவிடமாட்டான். ஒருக்கால் தவறி தண்ணீருக்குள் விழுந்துவிட்டாலும் உடனே மேலே வந்து விடுவான்.

ஆச்சரியம் ! ஆச்சரியம் ! !

யார்க்ஷாயிர் என்னுமிடத்தில் சென்றமாதம் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த சங்கத்தில் மெம்பராக சேர்ந்துகொள்ள நாடுபவன் விவாகமுடையவனாகவும், பெண்சாதியின் பெயரை காதில் கேட்டவுடன் தட்டுத் தடுமாறி நடுக்கமுறுபவனாகவும் பெண்சாதி ஒரு கன்னத்தில் அறைகொடுப்பாளாகில் எழுந்து நின்று மறு கன்னத்தையும் திருப்பிக்கொடுப்பவனாகவும் இருக்கவேண்டும் என்பது நிபந்தனையாகும். இச்சங்கம் கூடி ஆலோசித்து தைரியமற்ற புருடர்களுக்கு அவர்களின் பெண்சாதிகளிடமிருந்து மாதத்தில் ஒருநாள் விடுதலை வாங்கிக்கொடுத்து அன்றையதினத்தை பெண்சாதிக்கு பயப்படாது கழிப்பதற்கும் காலை முதல் மாலைவரை சந்தோஷ திருப்தியோடு பொழுது போக்குவதற்கும் ஏற்பாடுசெய்ய முயற்சிக்கும்.

செயற்கைமனம்

மாஸ்கோ நகரில் ரஷ்யாதேசத்து ஜமர்நோப் என்னும் பெயருடைய டாக்டரொருவர் அதி அற்புதமான காரியமொன்று செய்தார். அதாவது, ஹிருதயம் காயமடைந்து மரணத்துக்குச் சமீபித்துள்ள மனிதனொருவனை அந்த டாக்டரிடம் கொண்டுவரப்பட்டது. அந்த டாக்டர் உடனே காயப்பட்டிருந்த ஹிருதயத்தை எடுத்துவிட்டு செயற்கை ஹிருதயமொன்றை அந்த இடத்தில் வைத்து குழாய் மூலம் அதில் காத்துசெலுத்தும்படி செய்துவிட்டார். ஒண்ணேமுக்கால் மணிக்குள் காயமடைந்திருந்த ஹிருதயத்தை சுத்தப்படுத்தி அதற்குறிய இடத்தில் வைத்துவிட்டு செயற்கை ஹிருதயத்தை எடுத்துவிட்டார். இவ்வாறு செய்தபின் அவ்வியாதிஸ்தனை சோதித்துப் பார்த்ததில் முன்போல் அவன் ஹிருதயம் வேலைசெய்து கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. சில நாட்களுக்குள் அவ்வியாதிஸ்தனும் சொஸ்தமடைந்து ஹிருதய சுத்தத்தோடு வைத்தியசாலையிலிருந்து வெளிவந்து விடுவானென்று நம்பப்படுகிறது.

மனிதன் 180 வருடம்வரை ஜீவித்திருக்கலாமாம் ?

ரஷ்யா தேசத்து வைத்திய நிபுணரான டாக்டர் லாஜர்ப் என்பவர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் சமீபத்தில் ஒருமுறை கண்டுபிடிக்கப்படப்போகிறதாம், மனிதன் அதனை அனுஷ்டித்து 180 வருடங்கள்வரை உயிர் வாழ முடியும் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

கனவு யுத்தமாக முடிந்தது

ஜேகோசுலோவியாவின் குக்கிராமமொன்றில் வசிக்கும் ஓர் பட்டிக்காட்டு மனிதன் பத்திரிகை பார்ப்பதி லீடுபட்டு யுத்தச் செய்திகளை அதிகவனமாய் நோட்டமிடுபவனாக இருந்தான். இவ்வாறு அவன் யுத்தச் செய்திகளைப் பார்த்து வந்து கடைசியாக கூடிய சீக்கிரம் உலகில் மகா யுத்தம் தோன்றும், அதன் பயனாக உலகில் சமாதானத்தின் அறிகுறிகூட யில்லாது சகல பாகங்களிலும் இரத்தப்பெருக்கும் மிருகத்தன்மையும் தலைவிரித்து தாண்டவமாடும் நிலைமைக்கு வந்து விடும் என்னும் முடிவுக்கு வந்தான். இவ்வாறான நிலைமையில் ஓர் இரவு அவன் துயில்புரிந்து கொண்டிருக்குங்கால் எதிரிகளின்படைகள் தன் கிராமத்தினுட் பிரவேசித்து தாக்குவதுபோல் கனவுகண்டு பதறி விழித்தான். உடனே வீட்டைவிட்டு வெளியில் வந்து இருளில் நின்றுகொண்டு, 'மக்களே! பகைவர்களை எதிர்ப்பதற்காக வெளியில் வாருங்கள்' எனக்கூச்சலிட்டான். இச்சப்தத்தைச் செவியுற்ற மக்கள் அவர்களும் யுத்தப்பீதி கொண்டிருந்தனராதலின் ஆக்ரோஷத்துடன் வெளியில் வந்து கம்பு தடிகளை எடுத்துக் கொண்டு காட்டுப்பக்கல் விரைந்து சென்றனர். அவர்கள் அறிவற்றவர்களாய் பயித்தியக்காரர்

கள் போலிருந்தனராதலின் தங்களுக்குள்ளேயே ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தினரை தங்கள் விரோதிகளென மதித்து போர்புரிந்ததன் பயனாக இருவர் கொல்லப்பட்டும் அநேகர் காயமடைந்தும் போயினர்.

காலையில் போலீஸார் நிகழ்ச்சிகளை திரவிசாரித்து விஷயங்களை விளக்கிக்கொண்டவுடன், கிராமத்துக்கு எந்த எதிரியும் வரவில்லை என்னும் அறிக்கையை வெளியிட்டனர். ஆச்சரியத்தையும் மன கிலேசத்தையும் உண்டுபண்ணும் இச்சம்பவத்தால், ஐரோப்பியர் யுத்தப்பீதி கொண்டு அதன் பயத்திலேயே மூழ்கியிருக்கிறார்களென்பதையும் யுத்தம் என்னும் பிசாசு அவர்களை பிடித்து வாட்டிக்கொண்டிருக்கிறதென்பதையும் நன்கு தெரிந்துகொள்கிறோம்.

பெண்களின் தைரியம்

யகோஸ்லாவியாவில் வாலிப ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து 'புட்பால்' விளையாட்டு நடத்திக்கொண்டிருந்தார்கள். இது பொழுது அவர்களிடையே புதிய ஊக்கம் ஒன்று தோன்றி பெண்கள் தனியே பிரிந்து அவர்களுக்காக தனி கிளப் ஒன்று அமைத்திருக்கின்றனர். இவர்கள் அவ்விடத்திலுள்ள முனிசிபாலிட்டியில் மனுச்செய்து தங்கள் கிளப்புக்காக ஓர் இடம் பெற்றிருக்கின்றனர். அக்கிளப்பின் தலைவி, பெண்கள் கூடியசீக்கிரம் விளையாட்டில் தேர்ச்சி பெற்றுவிடுவார்களாதலின் எந்த ஆண்களும் தங்களுடன் அந்த விளையாட்டில் போட்டி போடமுடியாது என்று அறிவித்திருக்கிறாள்.

தற்கொலை எதிர்ப்பு

மற்ற தேசங்களைவிட சங்கங்கள் ஏற்படுத்தும் விஷயத்தில் அமெரிக்கா கியாதிபெற்று விளங்கிவருகிறது. அவ்வஞ்சுமன்களில் "வாழ்க்கையை நாசத்தினின்று காப்பாற்றுங்கள்" என்னும் பெயருள்ள சங்கமுமொன்றாகும். இச்சங்கத்தின் நோக்கம் தற்கொலை புரிந்து கொள்வதை தடுப்பதாகும். அதாவது எவன் காலத்தின் கஷ்டத்தை சகித்துக்கொள்ள முடியாது, தற்கொலை புரிந்துகொள்வதற்கு முற்படுகிறானோ அவனுக்கு நல்லுபதேசங்கள் செய்து அதைவிட்டு தடுப்பதற்கு முயற்சிப்பதாகும். இச்சங்கம் 1906-ம் ஆண்டு ஏற்படுத்தியதாகும். இச்சங்கத்தை ஏற்படுத்தியது ஹின்றி விருட்டன் என்பவராகும். இவர் கோவில்களில் உபதேசம் செய்துகொண்டே இருந்து ஒவ்வொரு வீடாய்ச் சென்று தற்கொலையின் கெடுதியை எடுத்து விளக்கிவந்தார். இன்று லோனாபோயில் என்ற மாது அச்சங்கத்தின் காரியதரிசியாக இருக்கிறாள். அம்மாது பெண்களைவிட ஆண்கள்தான் அதிகமாக தற்கொலை புரிந்து வருகின்றார்கள் என்று அறிவித்திருக்கிறாள். இவ்வஞ்சுமனின் பொருட்டால் வருடமொன்றுக்கு எத்தனையோ ஆயிரக்கணக்கானோர் தற்கொலையைவிட்டுத் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

மீரட் மௌலானா அஸ்ஸித்திக்கி யுல்காதிரீ அவர்களின் அருமை பிதாவின் வருடாந்திர பாத்திஹா வைபவம்

மலாய் நாட்டு அகில முஸ்லிம் மிஷனரி கமிட்டியின் ஸ்தாபகரும், இஸ்லாம் அபிவிர்த்திக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து பிரசாரம் செய்பவரும் சமீபத்தில் ஜப்பான் செல்வான்வேண்டி சிங்கப்பூருக்கு விஜயஞ்செய்ய விருப்பவர்களுமான ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ்முகம்மது அப்துல் அலீம் அல்ஸித்திக்கியுல்காதிரி அவர்களுடைய அருமை தந்தையார் அவர்களின் வருடாந்திர பாத்திஹாவைபவம் மௌலானா அவர்களின் சிஷ்யர்களில் ஒருவரான ஜனாப் கோ. அ. பக்கீர் முகம்மது சாஹிப் அவர்களின் ஆதரவில் ஜமாத்துல் ஆகிர் மாதம் புரை 3-க்கு சரியான 2-9-35 செவ்வாய்க்கிழமை இரவுமணி 9½-க்கு கிள்ளான் டவுன் பள்ளியில் வெகு சிரப்பாக நடைதெற்றது. ஏராளமான முஸ்லிம்கள் விஜயம் செய்திருந்தார்கள். அதுசமயம் மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ முகம்மது தாஹிர் சாயபு அவர்களால் குர்ஆன் ஷரீப் ஓதி துஆ முடிந்த பின்னர் அனைவர்களுக்கும் தபர்ருக் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

தமிழ்நாடு ஆவணக காப்பக நூலகம்
202344
சென்னை 600 008
Rலவா, 18/44
N 35-6.9-60

ஹிபாஜத்துல் இஸ்லாம் வால்யூம்

நமது நண்பர்களில் அநேகரின் வேண்டுகோளுக்காக நமது அரும் மாசிகைகளின் ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள இதழ்கள் இப்போது புதிதாய் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. அழகான காலிக்கோ பைண்டு.

1930, 1931, 1932, 1933, 1934 இவ்வாண்டுகளுக்குள்ள வால்யூம்கள் தயாராகவிருக்கின்றன.

கிரயம் வால்யூம் 1-க்கு ரூ. 3—8—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஹிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும் அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவிய வரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் விபரமும் விபரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் முஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனாமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் அட்ரசுக்கு தபால் சிலவு 0—0—9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

அல்பராஹீனுற்றப் பானிய்யா
பிற்றத்தி அலல்காதியானிய்யா

இந்த அறபி நூல், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கி, அது சம்மந்தமாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் எவ்வாறான தீர்ப்பளித்திருக்கிற தென்னும் விபரத்தை குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற்கோள்களுடன் அழகிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை வாசிப்பது கொண்டு காதியானிகள் பிதற்றித்திரியும் சன்மார்க்க முரணானவைகள் சம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது தீர்ப்பளித்திருக்கிற தென்பது இனிது புலனாகும்.

இஃது சென்னை பிரபல முப்தீ மௌலானா மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது தமீம்சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு சென்னை, காயல்பட்டணம் முதலிய பற்பல ஊர்களின் உலமாக்களின் கையெழுத்துடனும், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் காரீ ஹாபிஸ் சுல்த்தானுல் வாயிஜ், முஹம்மது அப்துல் அலீம்சாஹிப் காதிரீ சித்தீகீமீரட்டி அவர்களின் மதிப்புரையுடனும் வெளிவந்திருக்கிறது.

இது சென்னை, புதுப்பேட்டை பிரபல வர்த்தகரும், தனவந்தருமான மெஸர்ஸ் A. P. M. செய்யித் இப்ராஹீம் சாஹிப் & பிரதர், அவர்களது பொருளுதவியைக் கொண்டு அச்சிடப் பட்டிருப்பதால் தபால் செலவுக்காக ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவர்கட்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படும்.

இச்சிறந்த ‘ரிஸாலா’ அறபி பாஷையி லிருப்பதால் அறபி தெரிந்தோர் இதனைபெற்று வாசித்துப் பயன் பெறுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A. போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.